www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 15 யூன் 2008 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 114

உலக நாடுகளில் 2010 ஆண்டளவில் இரண்டாம் உலக மகாயுத்தம் நடைபெற்றக்காலத்தில் இருந்ததை விட மிகவும் மோசமான உணவுப்பஞ்சம் ஏற்படக் கூடும் என்று உணவு உலக நிறுவனமும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனமும் எதிர்வு கூறியுள்ளன. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் உணவு உற்பத்தியில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்று உலகவங்கி "சாத்தான் வேதமாக" அறிவுறுத்தியுள்ளது.

இதே நிறுவனங்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு உணவு உற்பத்திக்காக அதிகம் செலவழிக்காமல் செலவு குறைவாகவும் மேலதிகமாகவும் உணவுப் பொருட்களை

## எச்சரிக்கை!



உற்பத்தி செய்யும் அபிவிருத்தியடைந்த நாடுகளிலிருந்து மூன்றாம் உலக நாடுகள் இறக்குமதி செய்வது மேலானது என்று அறிவுரை வழங்கின என்பதை மறந்துவிட முடியாது. இதனை பொருளாதார மறுசீரமைப்பு என்ற அழகான வார்த்தை சாலங்களால் கூறின.

பூகோளமயமாதல் என்ற ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரல் நடைமுறைகளால் உணவு உற்பத்தி வீழ்ச்சியடைந்ததை ஒப்புக்கொள்ள மறுக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் 35 கோடி நடுத்தர இந்தியர்கள் அதிகமான சத்து உணவு உண்ணுவதாலேயே உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாக மிகவும் கேலிக்குரிய காரணத்தைக் கூறியுள்ளார். ஆசிய மக்களின் உணவுப்பழக்கத்தை அவமதிக்கும் வகையிலான அக்கருத்து கடும் கண்டனங்களுக்கு உள்ளாகியது. உலக நாடுகளில் தோன்றியுள்ள இந்த உணவு நெருக்கடியால் இலங்கை மிகவும் மோசமாகப் பாதிக்கப்படப்போகிறது. வறுமையும் பஞ்சமும் தலைவிரித்து ஆடப்போகிறது. இது நமது நாட்டு மக்கள் அனைவருக்கும் முன்னால் எழுந்துள்ள அபாய எச்சரிக்கையாகும். இலங்கை மக்களின் அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசிக்கும் கோதுமை மாவுக்கும் முன்னெப்பொழுதையும் விடத் தட்டுப்பாடு ஏற்பட்டு அதன் விலைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன. அரிசி 100 ரூபாவிற்கு மேலும் கோதுமை மா 80 ரூபாவாகவும் ஏனைய உணவுப் பொருட்கள் ஒவ்வொன்றும் ரூபா 100த் தாண்டியும் நிற்கின்றன.

இதற்கு காரணம் உலக உணவுப் பஞ்சம் மட்டுமல்ல உள் நாட்டு உணவு உற்பத்தியின் மோசமான வீழ்ச்சியுமாகும். அத்துடன் கொடூரமான யுத்தசெலவீனங்களும் பண வீக்கமும் எரிபொருள் விலை அதிகரிப்புகளும் பிரதான காரணங்களாகும்.

1977 ஆண்டு பதவிக்கு வந்த ஐ.தே.கட்சி அரசாங்கம் தாராள திறந்த பொருளாதாரத்தையும் தனியார்மயத்தையும் கடைப்பிடித்து அரிசி, உப உணவுப் பொருட்களின் தன்னிறைவு நோக்கிய உற்பத்திகளை சிதைத்தது. அதன் பின்னர் 1994 இல் பதவிக்கு வந்த சந்திரிக்கா அரசாங்கமும் பூகோளமயமாதலின் கீழான மறுசீரமைப்புகளை தொடர்ந்தும் அப்படியே முன்னெடுத்தது. தற்போதைய மஹிந்த அரசாங்கமும் தேசிய பொருளாதாரம் பற்றி உச்சரித்தாலும் அதனை கட்டிவளர்க்க எந்தவொரு திட்டத்தையும் முன்னெடுக்க முடியவில்லை. அதற்கு யுத்தத்தை முன்னெடுப்பது பிரதான காரணமாகும். மஹிந்த சிந்தனை என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்ட நெல் உத்தரவாத விலை உரமானியம் போன்றன வெறும் கற்பனாவாத சுலோகங்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கங்களின் திட்டங்களுக்கு மேலானதாக பூகோளமயமாதலுக்கு மாற்றாக மாற்றுப்பொருளாதார திட்டங்களை முன்னெடுக்கப்போவதாக மக்கள் மத்தியில்

2ம் பக்கம்

## அரசாங்க- தனியார் துறையினருக்கு சம்பள உயர்வு கிடைக்குமா?

ஏற்கனவே நாட்டின் பண வீக்கம் முப்பது வீதமாகியுள்ளது அந் நிலையில் பெற்றோல் டீசல் மண்ணெண்ணை விலைகள் அண்மையில் அதிகரிக்கப்பட்டன. இதனால் போக்குவரத்துக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டன. இதன் காரணமாக அத்தியாவசியப் பொருட்களில் விலைகள் எவ்வித சத்தம் சாடியின்றி விசம் போல் வேகமாக ஏறி வருகின்றன. இந் நிலைக்கு நிவாரணமோ பரிகாரமோ வழங்குவது பற்றி அரசாங்கம் மௌனம் சாதிக்கிறது. வானை நோக்கி உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கக் கூடிய சம்பள உயர்வையே அரசாங்க தனியார் துறையினர் எதிர்பார்க்கின்றனர்.

ஆனால் இதற்கான திடமான கோரிக்கைகளை முன்வைக்கவோ வீதியில் இறங்கிப் போராடவோ யூ.என்.பி யோ அல்லது ஜே.வி.பி யோ ஏனைய தொழிற் சங்கங்களோ தயாராக இல்லை. யூ.என்.பி தனது வாக்கு வங்கிக்கு ஏற்றவான வெத்து வேட்டுக் கிலுகிலுப்பு நடவடிக்கைகளை மட்டுமே போராட்டம் என்ற பெயரில் செய்து கொள்கிறது. தாம் பதவிக்கு வந்தாலும் இதே கோரிக்கைகளுக்கு பதில் கூறவேண்டி வந்துவிடுமோ என்ற பயம் அதற்கு உள்ளூர உண்டு. அதனால் அதற்கு போராட்டம் பற்றிய அளவு தெரியும்.

மூன்றாவது சக்தி எனக் கூறப்பட்ட ஜே.வி.பி பிளவுபடுத்தப்பட்டு விட்டது. விமல் வீரவன்சா தலைமையிலான கட்சி அரசாங்கத்தில் பதவிகள் பெறத் தயாராகி வருகிறது. அத்துடன் மேற்படி பிளவால் ஜே.வி.பி தொழிற் சங்கங்களிலும் மாணவர் அமைப்பிலும் பிளவுகள் தோன்றி உள்ளன. ஆதலால் சம்பள உயர்வுக்குப் போராடப் போவதாகக் கூறினாலும் ஜே.வி.பி யால் வெற்றிகரமான போராட்டங்களை முன்னெடுக்க முடியாது. அது மட்டுமன்றி யுத்தப் பேரிகை முழங்கி வந்த ஜே.வி.பி அதிலிருந்து விடுபடவில்லை. யுத்தத்தை தீவிரமாக நடத்தும்படி அரசாங்கத்திற்கு ஆலோசனையும் உற்சாகமும் வழங்கிக் கொண்டு அதே அரசாங்கத்திடம் அரசாங்க- தனியார் துறையினருக்கு சம்பள உயர்வு வழங்கும் படி கேட்டு எவ்வாறு போராட முடியும். பேரினவாதத்தை சிங்களத் தொழிலாளர்கள் மத்தியில் நியாயப்படுத்தி தொழிலாளர்களின் போராட்ட உணர்வை மழுங்கடித்து மௌனமாக்கிய ஜே.வி.பி யால் யுத்தத்தின் மூலம் ஏற்பட்டுள்ள வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எவ்வாறு சம்பள உயர்வைக் கோர முடியும்.


கெய்ரோவில்


உகண்டாவில்



செனகலில்



மூன்றாம் உலக நாடுகளில் அரிசிக்கும் உணவுக்கும் அல்லாடும் மக்களும் எதிர்ப்புப் போராட்டங்களும்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# ஒரு லட்சம் கையெழுத்து இயக்கம்



புதிய- ஜனநாயக கட்சியின் ஐந்து தோழர்களான வெ. மகேந்திரன், ஆர். ஜெயசீலன், எஸ். சுகேசனன், எஸ். மோகனராஜ், என். கிருஷ்ணப்பிரியன் உட்பட சிறைகளில் பல நூறு பேர் விசாரணை இன்றித் தடுத்தும் விளக்கமறியலிலும் வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான தமிழ் சிங்கள முஸ்லீம் மலையக அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் அல்லது விசாரணை செய்யவேண்டும். இக்கோரிக்கையை ஒரு லட்சம் கையெழுத்துக்கள் மூலமாக வற்புறுத்தும் இயக்கத்தை புதிய- ஜனநாயக கட்சி கடந்த மேதினத்தன்று அட்டனில் நடாத்திய மேதினக் கூட்டத்தில் ஆரம்பித்து வைத்தது. கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல், தேசிய அமைப்பாளர் இ. தம்பையா, அரசியல் குழு உறுப்பினர் சோ. தேவராஜா, மலையகப் பிரதேச செயலாளரும் வலப்பனை பிரதேசசபை உறுப்பினருமான ச. பன்னீர்செல்வம் ஆகியோர் கையெழுத்திட்டு மேற்படி கையெழுத்து இயக்கத்தை ஆரம்பித்து வைத்தனர்.
தற்போது மலையகம், கொழும்பு, வவுனியா, யாழ்குடாநாடு ஆகிய பிரதேசங்களில் இவ்வியக்கம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனை மேலும் பல பிரதேசங்களுக்கு விரிவுபடுத்துவதற்கு ஏனைய இடதுசாரிக்கட்சிகள் ஜனநாயக அமைப்புகள் மற்றும் பொது அமைப்புகளுடன் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. நமது தோழர்கள் உட்பட தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளினதும் பிரச்சினை தனியே சட்டப் பிரச்சினை மட்டுமல்ல. அது அரசியல் பிரச்சினையுமாகும்.
ஆதலால் அவர்களின் துரித விடுதலைக்கும் அல்லது விசாரணைக்கும் தமது அழுத்தத்தைக் கொடுக்க மக்கள் தமது ஆதரவையும் ஒருமைப்




பாட்டையும் தெரிவிக்க வேண்டும். இதனை மக்கள் இயக்கமாக விரிவுபடுத்தி ஒரு லட்சம் கையெழுத்துக்கள் பெற்றும் வெகுஜன அரசியல் செயற்பாட்டை முன்னெடுக்க முன்வருமாறு புதிய- ஜனநாயக கட்சி மக்களை வேண்டிக் கொள்கின்றது.

**எச்சரிக்கை ..............**
**1ம் பக்க தொடர்ச்சி**

1ம் பக்க தொடர்ச்சி

சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் கூறினாலும் (அதுவும் பூகோளமயமாதலின் நிகழ்ச்சி நிரல் தான்) அவை கூறும் பேண்தகு அபிவிருத்திகள் எனப்படுபவை பம்மாத்தின் அடிப்படையிலான கற்பனைகளேயாகும். இன்றைய உலக உணவு நெருக்கடிக்கு காரணம் பூகோளமயமாதல் என்ற ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலாகும். இதனை விளங்கிக் கொள்ளாமல் யானையைத் தடவிப் பார்த்த கண்பார்வையற்றவர்கள் போன்று வியாக்கியானம் செய்யக் கூடாது. பூகோளமயமாதலை ஏற்கனவே ஏற்றுக்கொண்டவர்களும் இன்று அதனை விமர்சனம் செய்யும் அனைத்து தேசிய அரசாங்கங்களும் அந்நிகழ்ச்சி நிரலின் வாடிக்கையாளர்களே. இதிலிருந்து மீள்வதற்கு உடனடியான தீர்வு இல்லை. எனினும் மக்கள் நினைத்தால் 2010 ஆண்டிற்குப் பின்பு உக்கிரமாகப் போகும் உணவுப் பஞ்சத்தை தன்னிறைவு பொருளாதாரத் திட்டங்கள் மூலம் எதிர் கொள்ள முடியும். அதற்கு அரசாங்கத்தை வற்புறுத்தவும் திட்டங்களை செயற்படுத்தவும் வேண்டும். புதிய சூழ்நிலைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கக் கூடியவாறு உற்பத்திக்கான திட்டங்களை தாமதமின்றிக் கட்டியடைத்தால் பாதிப்புகளையும் பஞ்சத்தையும் கட்டுப்படுத்த முடியும். நீண்டகாலத்தில் வெற்றிகொள்ளவும் இயலும். இதற்கு ஏகாபத்தியத்தைத் தமது ஆளும் வர்க்க நோக்கங்களுக்காகவும் இருப்பிற்காகவும் அரவணைத்து நிற்கும் ஆட்சியினர் தயாராக உள்ளனரா என்பதே பிரதான கேள்வியாகும்.
இந்நிலையில் சர்வதேச, பிராந்திய உணவு, விவசாயப் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கு ஆயிரம் மாநாடுகள் கூடினாலும் பிரச்சினைகளை தீர்க்க முடியாது. ஜனாதிபதி ரோமில் நடைபெறவுள்ள உலக உணவு மாநாட்டில் உரையாற்றப் போகிறார். அவர் அங்கு பயங்கரவாதப் பல்லவியைத்தான் பாடுவாரே தவிர உலகமயமாதலை எதிர்த்து அல்ல என்பது எதிர்பார்க்கக் கூடியதே. பொதுவாக சர்வதேச பிராந்திய பிரச்சினைகளுக்கான தீர்வும் குறிப்பாக நாடளாவிய ரீதியிலான அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வு திட்டமிட்ட ரீதியில் முன்னெடுக்கப்பட வேண்டும். இன்று உலக உணவு நெருக்கடியில் மூன்றாம் உலகின் 22 நாடுகள் கடும் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளன. ஏனைய பல நாடுகள் அபாயக் கோட்டை நோக்கி நகர்கின்றன. கூட்டப்படும் சர்வதேச மாநாடுகளில் உலக வங்கி, உலக உணவுத் திட்ட நிறுவனம் ஐ.நா. அபிவிருத்தி நிறுவனம் போன்றவை எடுக்கும் தீர்மானங்கள் வெறும் கணதுடைப்புகளாகவே இருக்கும். ஏனெனில் அமெரிக்க மேற்குலக நலன்களுக்கு விரோதமாகவும் மூன்றாம் உலக நாடுகளுக்கு சாதகமாகவும் உணவு நெருக்கடித் தீர்மானங்கள் அமைய மாட்டாது. அமைந்தாலும் நடைமுறைப்படுத்தப்படப் போவதும் இல்லை. எனவே இலங்கையில் உணவு நெருக்கடிக்கும் பொருளாதார வீழ்ச்சிக்கும் விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒன்று, யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் தேசிய இனப் பிரச்சினைக்கு அவசர அவசியமான தீர்வினைக் கொண்டு வரல் வேண்டும். இரண்டு உலகவங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச அரசு சார்பற்ற பெரு நிறுவனங்கள் வடிமைக்கும் உள்நோக்கங்கள் கொண்ட அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பதிலாக தேசிய வளங்களைப் முறையாகப் பயன்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்கும் சுய திட்டங்களை விரைந்து முன்னெடுக்க வேண்டும். இவற்றை முன்னெடுக்க இன்றைய மகிந்த சிந்தனை அரசாங்கம் தயாரா? அல்லது சட்டி பானை உடைத்து மாட்டு வண்டிப் பயணம் நடாத்தி ஆட்சிக்கு வர நிற்கும் ஐக்கிய தேசியக் கட்சி தேசிய உற்பத்தித் திட்டங்களுக்குத் தயாரா. இவை தான் மக்கள் அடிப்படையில் கேட்க வேண்டிய கேள்விகளாகும்.

**அரசாங்க தனியார்**
**1ம் பக்க தொடர்ச்சி**

எனவே சம்பள உயர்வுக்கான போராட்டத்திற்கு யூஎன்.பி யாலோ ஜே.வி.பி யாலோ தலைமை கொடுக்க முடியாது என்பதே உண்மை நிலையாகும். இந் நிலையை அரசாங்கம் நன்கு பயன்படுத்திக் கொள்கிறது. சம்பள உயர்வு கேட்பது விலை உயர்வுக்கு எதிராகக் குரல் கொடுப்பது என்பன பயங்கரவாதத்திற்கும் புலிகளுக்கும் ஆதரவான செயற்பாடென ஜனாதிபதியும் அமைச்சர்களும் ஏற்கனவே பிரகடனம் செய்துள்ளனர். யுத்தம் செய்வது ஒன்றே குறிக்கோள் எனவும் எந்தத் தடை ஏற்பட்டாலும் வடக்கு மீட்கப்படும் என்று பிரதமர் யுத்த முழக்கம் செய்துள்ளார். எனவே சம்பள உயர்வு என்பது கைக்கெட்டாத ஒன்றே யாகும்.
யுத்தம் ஒன்றே தாரக மந்திரம் எனக் கூறி மேலும் யுத்தம் தொடரப்பட்டால் அரிசி மற்றும் உணவு நெருக்கடியால் மக்கள் மாண்டு மடியவே நேரிடும். பட்டினிப் பிணங்கள் வீடுகளையும் வீதிகளையும் நிரப்பும் நிலை வரலாம். இன்றைய சோமாலியா, சூடான் போன்ற நிலைக்கு நாளை இலங்கை தள்ளப்படும். அபாயத்தையே எதிர்நோக்கி நிற்கிறது.

**இலங்கையில்**
**சாதியமும் அதற்கெதிரான**
**போராட்டங்களும்**

**நூல் அறிமுக அரங்கு**
**15-06-2008 ஞாயிற்றுக்கிழமை**
**பி.ப 5 மணிக்கு**
**வெள்ளவத்தை**
**இராமகிருஷ்ண விரிவுரை**
**மண்டபத்தில் நடைபெறும் .**
அனைவரையும் அன்புடன்
அழைக்கிறோம் .

புதிய பூமி வெளியீட்டகம்

## நாலும் நடக்கும் உலகிலே
நற்குணன்

### அபேத வாதி

என்.ஜீ.ஓக்கள் மீதான ஜே.வி.பி யின் கடுந் தாக்குதல் அவர்கட்கே கேடானதாகி விட்டதாக மே மாதம் எல்.பி.நியூஸ் வார ஏட்டில் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன விரிவாக எழுதியிருந்தார். அதில் அவர் தொழிற்சங்கங்கள் உட்பட பல சமூக அமைப்புக்களும் உள்ளடங்கும் என்றும் வாதித்திருந்தார். அவரது வாதத்தின்படி பார்த்தால் அரசாங்கத்தின் கீழ்ப்படாத எல்லாவற்றையுமே என்.ஜி.ஓக்கள் எனலாம். அப்படியானால் எதிர்க்கட்சிகள் விடுதலைப் புலிகள் உட்பட எல்லாருமே என்.ஜி.ஓக்கள் தாம்.
வேதாந்திகள் "எல்லாம் பிரம்மம்" என்கிற மாதிரி எல்லாருமே என். ஜி. ஓக்கள் தான் என்று சொல்லுகிற காலம் தொலைவில் இல்லை. எங்கள் கலாநிதியார் இப்போது தன் கட்சிக்கும் தொழிற்சங்க அமைப்புக்கும் தனக்குச் சோறு போடுகிற என். ஜி.ஓவுக்கும் பேதம் தெரியாத நிலையில் தானே இருக்கிறார்.

### இந்து சாம்ராச்சியம்

கிழக்கு மாகாணத் தேர்தல் முடிவுகளை அடுத்து முதலமைச்சர் பதவிக்குப் பிள்ளையானுக்கும் ஹிஸ்புல்லாவுக்குமிடையிலான இழுபறி பற்றி "இந்து" ஆலோசனை வழங்கியிருந்தது. விக்கிரமாதித்தன் காடாறு மாசம் நாடாறு மாசம் ஆண்ட மாதிரிப் பிள்ளையானும் ஹிஸ்புல்லாவும் பதவிக்காலத்தைப் பகிரலாம் என்று ஆலோசனை கூறியிருந்தார்கள். அது எவ்வளவு பெறுமோ என்னவோ! இன்னொரு நாட்டில் யார் எப்படி ஆளுவது என்று ஆலோசனை சொல்லுவது அப்பட்டமான குறுக்கீடு அல்லவா.
இந்து என்ன சும்மா பத்திரிகை நிறுவனமா? பார்ப்பனிய அரசியலின் பாசறை அல்லவா. வேறு எவ்வாறு நடந்து கொள்ளும்?

### முனைப்பும் முறைப்பாடும்

கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்று ஒரு பழமொழி. மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலின் பின்பு கிழக்கு மாகாணசபைத் தேர்தல் எப்படி அமையும் என்று யூஎன்.பி தலைமைக்கும் முஸ்லீம் காங்கிரஸ் தலைமைக்கும் தெரிந்திருக்க வேண்டும். ஜே.வி.பி க்கும் தெரிந்திருக்க வேண்டும். இது மோசடியான தேர்தல் என்று கூறி மூன்று கட்சிகளும் பகிஷ்கரித்திருந்தால் தேர்தல் முடிவுகள் எப்படி அமைந்திருந்தாலும் அது அரசாங்கத்தின் முகத்தில் அறை விழுந்தது போலிருந்திருக்கும். ஆனால் அப்படிச் செய்தால் அது வேறொரு விதமான அரசியலை நோக்கி மக்களை நகர்த்தியிருக்கும். பகிஷ்கரிப்பின் அரசியல் மக்களுக்குப் பழக்கப்பட்டு விட்டால் அது அவர்கள் எல்லாருக்கும் ஆபத்தானது.
எனவே மோசடி பற்றி அழுது வடித்துக் கொண்டே மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டுவிட்டு அதன் முடிவுகளில் தங்களது சாதனைகளைப் பட்டியலிடுகிறார்கள்.

### அவிவேக பரமார்த்த குருவின் கதை

18. 5. 2007 ஞாயிறு தினக்குரலில் ஒருவர் விமல் வீரவன்சவின் புதிய கட்சி என்ற தலைப்பில் எடுத்தும் கொண்ட விஷயம் பற்றி எழுத எதுவும் இல்லாமல் 1966ல் சுதந்திரக்கட்சியும் பாராளுமன்ற இடதுசாரிகளும் பங்குபற்றிய இனவாதப் பேரணி பற்றி குரு என்பவரால் தன் வாயக்கு வந்தபடி எதையெதையோ உளறி வைத்துள்ளார்.
சண்முகதாசனையும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியையும் இலங்கையில் மாக்ஸிய லெனினியவாதிகள் எடுத்த கொள்கையடிப்படையிலான நிலைப்பாட்டையும் திரித்து கொச்சைப்படுத்தி ஏதேதோ எழுதியுள்ளார். தான பேரினவாத ஊர்வலத்தில் பங்கு பற்றுவதுடன் கட்சியின் நிலைப்பாட்டைத் திரிபுபடுத்தவும் விஜேவீர [illegible] கொண்ட சதி முறியடிக்கப்பட்ட பின்பே விஜேவீர கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.
பிரேம்லால் குமாரசிறியை சண்முகதாசன் இளைஞர் அணிப் பொறுப்பிலிருந்து விலக்கி விஜேவீரவை நியமித்ததாக விடுகிற புலுடா ஒரு புறமிருக்கச் சீனா சண்முகதாசனைப் பேரினவாத ஊர்வலத்தில் பங்கு பற்றும்படி வற்புறுத்தியதாக [illegible] பெரிய புலுடாவை அவிழ்த்து விட்டுள்ளார்.
தேசியவாத வங்களோட்டுத்தனத்திலிருந்து மீள இயலாத சில தமிழ் [illegible]ர்கள் அறியாமையால் தவறான விடயங்களை எழுதுகின்றனர்.
வேறு சிலர் பச்சைப் பொய்யர்கள். தினக்குரலில் எழுதுகிற இந்த அவிவேக பரமார்த்த குருவின் அயோக்கியதனம் அவரது அறியாமையுடன் சேர்ந்து ஒரு [illegible] கூத்தாகியுள்ளது.
இவ்வாறான விடயங்களை எழுதுகிற மூடர்களிடம் ஆதாரங்களைக் [illegible] நைசா நழுவி விடுவார்கள். குருவானவருக்குப் பதில் கூற முடியாது போனால் [illegible]ரிகையிலிருந்து யாராவது பதில் சொல்வார்களா?

### ஆயிரம் தலை வாங்கிகள்

"ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி" என்றொரு திரைப்படம் [illegible] அறுபது ஆண்டுகள். முன்பு வந்தது. படத்தை நான் [illegible] நீண்டகாலமாகப் பலரும் பேசி வந்தனர். ஆயிரந் தலைவாங்கி [illegible] எனக்குள் ஒரு யோசனை. இப்போது [illegible] என்று சொல்லி மல்லிகையின் அட்டையில் தலைகளைச் சேர்த்து வருகிறார். தலை கட்டுரியோர். பற்றி அதிகம் பயனற்ற குறிப்புக்களும் கூட வருகின்றன. கம்பன் கழகத்தின் எம்.டி. இன்னொரு விதமாகத் தலைகள் சேர்க்கிறார். தமிழ்ப் பிரமுகர்கள் என்று சொல்லப்படுவோரை [illegible] வரவேற்பு என்றும் குத்து விளக்கேற்றல் பொன்னாடை போர்த்தல் என்று [illegible] அமோகமாக வணிகம் செய்கிறார். இப்போது ஞானம் என்கிற ஏட்டின் வெளியீட்டாளரும் இந்தத் தலை வாங்குகிற போட்டியிற் களமிறங்கியுள்ளார்.
"தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்" என்று சில தமிழ் அறிஞர்களும் சமூகத் தலைவர்களும் ஒதுங்கியுள்ளனர். இவர்களில் யார் தலையை அவர்களில் யார் முதலில் வங்குவர் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# ஐ.நா. மனித உரிமைத் தேர்தலில் இலங்கை தோல்வியடைந்தது ஏன் ?

கடந்தமாதம் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அங்கத்துவத்திற்கான தேர்தலில் இலங்கை தோற்கடிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே வகித்துவந்த இடம் இல்லாமல் போய்விட்டது. அத்தோல்விக்கு பிந்திய கால கட்டத்திலும் கடத்தல்கள், கொலைகள், கைதுகள் காணாமல் போதல்கள் அதிகரித்தே காணப்படுகிறது.

மனித உரிமை மீறல்கள் மிகையாக இருப்பதால் இலங்கைக்கு எதிரான இவ்விதமான தீர்ப்பு பெறுமதியானதாகக் கொள்ளப்பட்டாலும் உண்மையில் இது மனித உரிமை மீறலுக்காகக் கிடைத்த தீர்ப்பா? அல்லது இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கைக்கு எதிரான தீர்ப்பா? அல்லது இலங்கை பற்றிய அக்கறை செலுத்தப்படாததால் கிடைத்த தீர்ப்பா!

அரசாங்க ஆதரவாளர்களும் பேரினவாதிகளும் ஒரு அந்தத்தினும் தமிழ்த்தேசியவாதிகள் இன்னொரு அந்தத்திலும் இத் தீர்ப்புப் பற்றி வேறுபட்ட அதிதீவிரக் கருத்துக்களை வைக்கின்றனர்.

இத்தீர்ப்பு ஐரோப்பிய நாடுகள் இலங்கை மீது கொண்டிருக்கும் எதிர்ப்புணர்வின் வெளிப்பாடு என்றும் இது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு கிடைத்த வெற்றியல்ல என்றும் அரசாங்கமும் பேரினவாதிகளும் கூறுகின்றனர்.

அதேவேளை இது தமிழீழப் போராட்டத்திற்கு கிடைத்திருக்கும் அங்கீகாரம் என்றதுபோல் தமிழ்த்தேசியவாதிகள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர்.

இவ்வாறான முடிவுகள் அவரவரின் ஆசைவிருப்புகளுக்கு உட்பட்டு புறநிலைமைகளை கணக்கில் எடுக்காமல் கருத்துரைக்கப்படுவதாகும். அம்முடிவுகளால் ஏமாற்றங்களே அதிகரிக்கும்.

பூகோளமயமாதல் நிகழ்ச்சி நிரலின் கீழ் வசப்படைத்த நாடுகளும், நிதிநிறுவனங்களும் பின்தங்கியுள்ள நாடுகளில் அவற்றின் பொருளாதார அக்கறைகளை நிறைவேற்றிக் கொள்ளும்போது ஜனநாயகம், மனித உரிமைகள் போன்றவற்றை துருப்பு சீட்டுகளாகக் கொள்கின்றன. இந்த உண்மையை ஏற்றுக்கொள்வது என்பது இலங்கையில் பாரதூரமான மனிதஉரிமை மீறல்கள் தமிழ் மக்களுக்கெதிரான தேசிய இன ஒடுக்கல் போன்றன இருக்கின்றன என்ற உண்மைகளை நிராகரிப்பதாகாது.

எனவே அரசாங்கம் கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற நிலைப்பாட்டை எடுப்பது நாடுகள் இலங்கைக்கு எதிராக முன்வைத்து வரும் விமர்சனங்களின் தொடர்ச்சியான செயல்வடிவமாகும் என்பதை மறுப்பது யதார்த்தத்தை நிராகரிப்பதாகும். வெறும் தெருச்சண்டியர்கள் போன்று செயற்படுவதாகும்.

ஐரோப்பிய நாடுகளை விட ஏனைய நாடுகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தபோதும் இலங்கைக்கு போதியளவு வாக்குகள் கிடைக்கவில்லை. இதில் இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கைகளுக்கு கிடைத்திருக்கும் தீர்ப்பென்றும் கொள்ளலாம். ஐரோப்பாவுக்கு ஒத்துப்போகும் கொள்கை இல்லாதபடியால் மட்டுமன்றி ஏனைய நாடுகளுக்கு ஒத்துப்போகும் வகையிலும் இல்லை என்பதாகும். இலங்கைக்கு வாக்களிக்காத நாடுகள் இலங்கையின்பால் அக்கறை கொள்ளுவதற்கு ஏற்ற வெளிவிவகாரக் கொள்கை இலங்கைக்கு இல்லை. அதில் மனித உரிமை மீறல்களும், யுத்தமும் அடங்கும். யுத்தம் செய்வதற்கு ஏற்ற வெளிவிவகாரக் கொள்கை ஆயுத விற்பனை செய்யும் மேலாதிக்கக் கொள்கையுடைய நாடுகளை விட வேறு எவரையும் திருப்திப்படுத்தாது. அத்துடன் எதிரும் புதிருமான இரண்டு நாடுகளுடன் தொடர்பை ஏற்படுத்தும் போது சர்ச






வைப்பகப்படங்கள்

சைக்குரிய (ஆயுதக் கொள்வனவு போன்றன) விடயங்கள் தவிர்க்கப்பட வேண்டும். அல்லது அமெரிக்கா சொல்வதற்கு ஏற்ப

## கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லையாம்

நடக்கும் நாடாக மாற வேண்டும். இது தற்போதைய உலக ஒழுங்கிற்குள் பொறிக்குள் மாட்டுவதாகும்.

சர்வதேச சமூகம் என்ற பொறிக்குள் மாட்டிக் கொள்வதைத் தவிர்க்க வேண்டும். உள்நாட்டுப் பிரச்சினைகள் ஜனநாயக பூர்வமாக தீர்க்கப்பட வேண்டும். இதன் அர்த்தம் கிழக்கு மாகாணத்தில் தேர்தலை நடத்தியது போன்ற ஒரு பம்மாத்து நடவடிக்கையாக இருக்க முடியாது.

"பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்" என்று அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முழக்கத்தை உச்சரித்துக் கொண்டு உள்நாட்டில் யுத்தத்தை செய்து கொண்டு நிதானமான வெளிநாட்டுக் கொள்கையை முன்னெடுக்க முடியாது. ஆனால் இலங்கை அரசாங்கமோ 'பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்' என்பதை உச்சரிப்பதையே அதன் வெளிநாட்டுக் கொள்கையாகக் கொண்டுள்ளது. அந்நிலைப்பாட்டிற்கு கிடைத்த பலத்த அடியாக இந்தத் தோல்வியைக் கொள்ள முடியும். அத்துடன் மனித உரிமை மீறல்கள் சகித்துக்கொள்ளப்படுவதில்லை என்ற செய்தியும் மேற்படி தோல்வி மூலம் சொல்லப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகள் அவை வழங்கி வந்த வழங்க வாக்குறுதி அளித்திருந்த உதவிகளை நிறுத்திக் கொண்டுள்ளன. அமெரிக்காவும் நிறுத்தியுள்ளது. சமாதான நடவடிக்கைகள் குழம்பியதால் ஜப்பானும் அதன் உதவிகளை வழங்குவதில் தயக்கம் காட்டி வருகிறது. பல வெளிநாட்டு நிறுவனங்கள் கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. ஐ.நா நிறுவனங்கள் பல விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன.

இந்த நிலையில் ஐ.நா சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அதன் அங்கத்துவத்தை இழந்திருப்பது என்பது இன்றைய உலக ஒழுங்கிலிருந்து ஓரம் கட்டப்படுவதற்கான ஆரம்ப முயற்சி இருக்கும். இத் தேர்தல் முடிவடைந்தவுடன் அதன் மாநாட்டில் உரையாற்றிய ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூன் மனித உரிமைகள் பாரதூரமாக மீறப்படும் நாடுகளை வரிசைப்படுத்தி இலங்கை மீதும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளார். இந்தப் போக்கு ஐ.நா அல்லது வெளிநாடுகள் மிதமிஞ்சிய தலையீடுகளை செய்யும் நிலைமையை நோக்கி விரைவாக இழுத்துச் செல்லக் கூடியதாகும்.

இதனை அசட்டை செய்வது இலங்கையின் சுதந்திரம் இறைமை என்பவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கான பாதையை வெட்டிக்கொடுப்பதாகும். மறுபுறத்தில் இத்தோல்வியை தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தின் வெற்றியாகக் காட்ட முற்படுவது அறிவீனமாகும். தமிழ் பிரமுகர்களின் பிரசாரத்தின் காரணமாகவே இலங்கை தோல்வியடைந்தது என்று கூறுவது வெத்துவேட்டாகும். இதனை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை "சர்வதேச சமூகம்" அங்கீகரிப்பதற்கான முதற்படியாக சிலர் காட்டுகிறார்கள். சர்வதேச சமூகம் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காவிட்டாலும் இவையெல்லாம் தமிழ் மக்கள் தங்களது தலைவிதியைத் தாங்களே தீர்மானித்துக் கொள்வதற்கு சாதகமாக இருக்கும் என்று இன்னும் சிலர் கூறுகின்றனர்.

உலகத்தில் சாத்திரமாக நடப்பதெல்லாம் தங்களுக்காகவே பாதகமானதாக நடப்பதாகவும், நடப்பதெல்லாம் தங்களுக்கு எதிராகவே நடப்பதாகவும் கொள்வது குறிப்பிட்ட சூழ்நிலைகளை அறிந்து கொள்ள மறுக்கும் பண்பாகும்.

எதுஎவ்வாறெனினும் இலங்கை அரசாங்கத்திற்கும் பேரினவாதத்திற்கும் பாரிய அழுத்தங்களை கொடுப்பதாகவே "சர்வதேச போக்குகள்" அமைந்துள்ளன என்பதில் சந்தேகம் இல்லை. இது எவ்வாறு தமிழ் மக்களின் போராட்டத்திற்கான தீர்வைப் பெற்றுத் தரும் இலங்கை அரசாங்கம் நிலைமையை உணர்ந்து சமாதான நடவடிக்கைகளைத் தொடங்குமா? அதற்கான சூழ்நிலை தோன்றுமா?

இலங்கை அரசாங்கம் தயான் ஜயதிலக்கா போன்ற ஆலோசகர்களின் பேச்சைக் கேட்டு தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைப் புறம் தள்ளி பயங்கரவாதத்திற்கு எதிரான" நிலைப்பாட்டையே தொடர்ந்து எடுக்குமாயின் மேலும் மேலும் சர்வதேச அழுத்தங்களுக்குள்ளாக வேண்டியே வரும். அதனால் இலங்கையின் நிலைமை இன்னும் மோசமாவதுடன் இலங்கையின் இனப் பிரச்சினை மேலும் சிக்கலுக்குள்ளாகும் என்பதே இன்றைய யதார்த்தமாகும்.

**— நமது அரசியல் நிருபர்**

# கிழக்கு எங்கே போகிறது

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்று முதலமைச்சரும் மாகாண அமைச்சர்களும் நியமிக்கப்பட்டுவிட்டனர். முதலமைச்சர தலதமாளிகைக்கும் காத்தான்குடி பள்ளிவாசலுக்கும் சென்றார். அவரை அரசாங்கத்தினர் மட்டுமன்றி ஹெலஉறுமயவும் பாராட்டியுள்ளது.

தேர்தல் அறிவிக்கப்பட்டது முதல் தேர்தல் நடைபெறும் வரை மட்டுமன்றி தேர்தல் முடிவடைந்து இன்றைவரை தாக்குதல்களும் கொலைகளும் நடந்த வண்ணம் இருக்கிறது. தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வடக்கு கிழக்குப் பகுதிக்கு அதிகாரப் பங்கீடு அல்லது அதிகாரப்பரவலாக்கல் பற்றியெல்லாம் கதைப்பதே ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



தற்போது கிழக்கு மாகாண அபிவிருத்தி பற்றியே பேசப்படுகிறது. கிழக்கு எழுகிறது கிழக்கின் உதயம் போன்ற பல பெயர்களில் கிழக்கின் அபிவிருத்தி முன்னெடுக்கப்படுவதாக பிரசாரம் செய்யப்படுகிறது. இதற்குப் பின்னால பேரினவாத நிகழ்ச்சி நிரல மட்டுமன்றி பொருளாதார நோக்கங்களும் அரசாங்க உயர் மட்டத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் தமிழ மக்களும் முஸ்லீம் மக்களும், சிங்கள மக்களும் வாழ்கின்றனர். அவர்களின் இறைமை நடைபெற்ற மாகாணசபை தேர்தலின் மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. இந்த ஒப்படைப்பின் மூலம் அவர்கள் தேர்தலை கிழக்கு மாகாண மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்றும் (ஒற்றையாட்சி பேரினவாதம் பிரதிநிதித்துவம் செய்யும்) மஹிந்த சிந்தனையை அங்கீகரித்துள்ளனர் என்றும் அரசாங்க சார்பு விமர்சனங்கள் தெரிவிக்கின்றன. அரச முன்னெடுக்கும் யுத்தத்திற்கும் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடைபெற்றதுடன் கிழக்கில் அமைதியும் இனங்களுக்கிடையே ஐக்கியமும் நிலைநாட்டப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் முஸ்லீம்களும் தமிழர்களும் ஐக்கியத்துடன் வாழ்வதைவிட ஒற்றுமைக்கு மேலும் விரிசல்கள் ஏற்படும் வகையிலேயே சம்பவங்கள் நடக்கின்றன. "பெயரளவிலான ஜனநாயகத்திற்காவது" இடமிருக்கிறதா? ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்டு வென்ற தமிழர்கள், முஸ்லீம்கள், சிங்களவர்கள் பெயரளவிலான ஐக்கியத்தையாவது பேணுகிறார்களா?

13வது திருத்தச்சட்டத்தின் கீழ் கிழக்கு சுதந்திரமான அபிவிருத்தியடைவதற்கு இருக்கின்ற வாய்ப்புகள் பற்றி யாரும் விவாதிப்பதாகவே இல்லை. நம்பிக்கைகள் எவ்வளவுதான் ஊட்டப்பட்டாலும் வடக்கு கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டமையும் வடக்கு, கிழக்குப் பிரிக்கப்பட்டமையும், சுனாமி கட்டமைப்பு சீர்குலைக்கப்பட்டமையும் நினைவில் இருந்து நீங்க மறுக்கிறது. கடந்த இருபது வருடங்களாக மாகாணசபைகளை நிராகரித்து (அச்சபையும் வடக்கு கிழக்கில் இயங்க அனுமதிக்கப்படவில்லை) நடைபெற்ற போராட்டத்திலும் அதற்கு எதிரான போரிலும் இழக்கப்பட்ட உயிர்கள், அழிக்கப்பட்ட சொத்துக்கள் இன்னும் மதிப்பிடப்படவில்லை. சமாதானப்பேச்சுவார்த்தைகள் பிளவுகள் இடக்குப்பிளவு சண்டைகள் சர்வகட்சி மாநாட்டுக் கூட்டங்கள் தொடர்ந்ததை வரலாறு பதிவு செய்துள்ளது. எல்லாம் வெறும் நிகழ்வுகளானாலும் அவற்றினால் ஏற்பட்ட எதிரிடையான விளைவுகள் வெறும் விளைவுகளாக இல்லை.

கிழக்கில் மட்டுமல்ல வடக்கிலும் மாகாணசபை அமைக்கப்படும் என்று அரசாங்கம் கூறுகிறது. வடக்கு அபிவிருத்திக்கு வடமாகாண ஆளுநருக்கு ஆலோசனை வழங்க ஒரு சபை உருவாக்கப்பட்டுள்ளது. இது அரசியல் தீர்வு காண்பதற்கான இடைக்காலத்தீர்வு என்றே ஜனாதிபதி கூறினார். அதேவேளை இராணுவத் தீர்வுக்கும் தயார் அரசியல்தீர்வுக்கும் தயார் என்றும் கூறி வருகிறார்.

கிழக்கில் இராணுவக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டபிறகு நடந்தேறும் நிகழ்வுகள் யாரும் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் சாதகமானதாக இருக்கின்றன என்பது உண்மை. அதே வேளை சுயநிர்ணய உரிமைக்கன போராட்டத்திற்கு என்ன நடந்தது? என்னத்தை எதிர்பார்த்து எதிர்கால வரலாறு காத்துக்கிடக்கிறது? பேரினவாதத்தின் வாக்குறுதிகள், ஒற்றையாட்சியின் இயலும்தன்மை, பேரினவாத நிகழ்ச்சிநிரல் இவை எல்லாவற்றையும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் வெற்றி கொண்டு விட்டதா?

இன ஐக்கியம், சமத்துவம், தமிழர் சுயாட்சி என்பவற்றுக்கு உத்தரவாதமும் உறுதியும் கிடைத்துவிட்டதா?

கிழக்கு வெளுக்கிறதா? அஸ்தமிக்கிறதா? அரசியலில் நிகழ்வுகள் எப்போதும் ஒரேமாதிரியாக நடைபெறுவதில்லை.

**எழுவான்**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



தனியார் கம்பெனிகள் 25 சதவீத சம்பள உயர்வை அவற்றின் ஊழியர்களுக்கு வழங்க வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் கூறியுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் எனவும் தொழில் அமைச்சர் கூறியுள்ளார். இந்த யோசனையை நடைமுறைப்படுத்த முடியாது என்று அதிகமான தனியார் கம்பெனிகள் வெளிப்படையாகவே தெரிவித்துள்ளன.

நிலைமை இவ்வாறிருக்கும் போது தனியார்துறையினரான தோட்டத் தொழிலாளர்களுக்கு அந்த 25 சதவீத சம்பள உயர்வை பெற்றுக் கொடுக்கப்போவதாகத் தோட்டத் தொழிற்சங்கள் அறிவித்துள்ளன.

# தோட்டத்தொழிலாளர் 25 சதவீத சம்பள உயர்வு கிடைக்குமா?

தோட்டக்கம்பனிகள் தோட்டதொழிற்சங்கங்களு டன் கூட்டு ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளன. அதன் ஏற்பாடுகளுக்கு மாறாகச் எதனையும் செய்வதற்கு கம்பெனிகள் தயாரில்லை. அரசாங்கமும் கம்பனிகளின் விருப்பத்திற்கு மாறாக செயற்படப் போவதில்லை.

மிகவும் குறைந்த சம்பளத்தை வாங்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு 25 சதவீத சம்பளஉயர்வு கூட விலைவாசி வானளவு உயந்துள்ள சூழ்நிலையில் போதுமானதல்ல. ஆனால் அதை வழங்குவதற்கு தோட்டக் கம்பெனிகள் "சட்டப்பூர்வமாக கடப்பட்டனவாக" இல்லை. காரணம் கூட்டு ஒப்பந்த ஏற்பாடுகள் சட்ட ஏற்பாடுகள் போன்று வலிதாக இருக்கின்றன. அதில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்கு முன்பு இரண்டு தரப்புகளும் உடன்படாமல் அரசாங்கம் கூறுகின்றது என்பதற்காகக் கம்பனிகள் சம்பள உயர்வு வழங்கப்படமாட்டாது.

இதேவேளை கூட்டு ஒப்பந்தத்தை இரத்து செய்யும்படி சதாசிவமும் திகாம்பரமும் மேன் முறையீட்டு நீதி மன்றத்தில் பெரும் ஆரவாரங்களு க்கு மத்தியில் (பிரசாரத்திற்காக) தாக்கல் செய்த வழக்கு ஆரவாரமின்றி இரகசியமாக வாபஸ் பெறப்பட்டுள்ளது. காரணம் கூட்டு ஒப்பந்தத்தில் தலையிட முடியாது என்பதாக இருக்கலாம். அல்லது கம்பனிகளின் சார்பாக அரசாங்க உயர்மட்ட அழுத்தமாகவும் இருக்கலாம்.

தோட்டத்தொழிலாளர்கள் உரிய சம்பள உயர்வை பெறவேண்டுமெனின் கூட்டு ஒப்பந்த ஏற்பாடுகள் மாற்றப்பட வேண்டும். அல்லது கூட்டு ஒப் பந்த முறை இரத்து செய்யப்பட வேண்டும். தற்போது அதிகமான தொழிலாளர் குடும்பங்கள் ஒரு நேர உணவைக் கூட உட்கொள்வதில்லை என்ற நிலை தான். சம்பள உயர்வும் வழங்கப்படாவிட்டால் 1944, 1970– 77 காலகட்டங்களை விட மோசமான பஞ்சபட்டினி நிலைமைக்கு தோட்டத் தொழிலாளர்கள் முகம்கொடுக்க வேண்டிவரும்.

இந் நிலைக்கு அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகள் பெற்ற தொழிற் சங்கத் தலைமைகளும் ஜனாதிபதி ஆலோசகர் பதவி மற்றும் சலுகைகள் பெற்றுள்ள தொழிற்சங்கத் தலைமைகளும் என்ன பரிகாரம் தேடப் போகிறார்கள்.

# தொழிலாளர்களை ஏமாற்றிய அரிசி விலை மானியம்

தோட்டத்தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு இரண்டு நேரம் உண்ணுவது கோதுமை மாவினால் செய்யப்பட்ட உணவுப் பண்டங்களாகும். கோதுமை மா விலை கூடியதனால் எல்லோரும் அரிசியிலான உணவைச் சாப்பிட வேண்டும் என்று மஹிந்த அரசாங்கம் கூறியது.

அரசியின் விலைகள் உயர்ந்தமை "ஜனாதிபதிக்கு" சுட்டிக்காட்டப்பட்டமையால் தோட்டத்தொழிலாளர்களுக்கு மானிய விலையில் அரசியலை விற்பனை செய்ய நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி மஹிந்த தெரிவித்தார். அதன்படி எந்தவொரு அரிசியும் சந்தை விலையைவிட ஒரு கிலோ ரூபா 10/= குறைத்து தோட்டத்தொழிலாளர்களுக்கு விற்கப்பட்ட வேண்டும் என்று கூறப்பட்டது. இவ்விற்பனை தோட்ட முகாமைகளுக்கூடாகவும் தோட்ட கூட்டுறவு சங்கங்களுக்கூடாகவும் விற்கப்படுமென கூறப்பட்டது. இத்திட்டதை அறிவித்தது மட்டுமன்றி கண்டியில் அமைந்துள்ள ஜனாதிபதி வாசற்தலத்தில் வைத்து அரிசி மாவு சீனி பருப்பு உள்ளிட்ட உணவுப் (10கிலோவரை) பொதிகள் ஜனாதிபதியினால் வழங்கப்பட்டன. அந் நிகழ்வைப் பார்த்த ஒவ்வொரு தன்மானமுள்ள தோட்டத் தொழிலாளியும் வெட்கித் தலைகுனிந்திருப்பர். அது பிச்சை போடுவதாக மட்டுமன்றி தோட்டத் தொழிலாளர்கள் அரிசிப் பொதி கொடுத்து ஏமாற்றப்பட்டவர்களாகவும் இருந்தது. இதனை ஆரவாரத்துடன் வரவேற்ற அரசாங்கப் பதவிகள் பெற்ற தொழிற்சங்கங்கள் அடுத்து மானிய விலையில் அரிசி வரப்போவதாகப் பெரும் பிரசாரம் செய்தன. அந்த மானிய விலை அரிசியின் கதி முடிந்த கதையாகிக் கொண்டது. இந்த மானிய விற்பனைமுறை பதுளையில் ஆரம்பிக்கப்பட தாகக் கூறப்பட்டாலும். மக்களுக்கு உரியவகையில் நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பதாக இல்லை. அரிசி விநியோக முறையில் சீரான பொறி முறை இல்லாமையாலும், நேர்மையாக மானிய முறையை நடைமுறைப்படுத்தப் படவில்லை. தற்போது அரிசி விலை அதிகரித்து செல்லும் விதத்தைப் பார்க்கின்றபோது மானிய விலையில் அரசி விநியோகம் செய்யப்படுவது என்பது நடைமுறை சாத்தியமாகாது. இதுவும் மஹிந்த சிந்தனையின் மற்றொரு தோல்வியாகும். ஏமாற்றுத் தனங்கள் ஒருபோதும் வெற்றி பெறுவதில்லையே.

# பிரதி அமைச்சரின் தொழிற்சங்கம்

"எல்லோரும் கட்சி ஆரம்பிக்கிறார்கள் என்பதற்காக நானும் ஆரம்பிக்கவில்லை. நான் முப்பது வருட தொழிற்சங்க அனுபவமுடையவன். அதனைக் கொண்டு மலையகம் ஒரு தேசிய இனம் என்பதை முன்னிறுத்தி புதிய தொழிற்சங்கத்தை அமைத்து எனது பயணத்தை தொடர்கின்றேன்." இவ்வாறு அண்மையில் நீதித் துறைப் பிரதி அமைச்சராகப் பதவியேற்ற பாராளுமன்ற உறுப்பினர் வீ. புத்திரசிகாமணி கூறி இருக்கிறார். இவர் முன்பு ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பல பதவிகளை வகித்தவர். பின்பு இ.தொ.கா. வில் இணைந்து பாராளுமன்ற உறுப்பினராகியும் அமைச்சுப் பதவி கிடைக்காமையால் விரக்தியடைந்திருந்தார். பிரித்து வைத்து ஆட்சி நடாத்துவதில் வல்லமை பெற்ற மகிந்த சிந்தனை அரசாங்கம் புத்திரசிகாமணிக்குப் பிரதி அமைச்சர் பதவி வழங்கியது. ஆதலால் இ.தொ.கா.வு க்கும் அப்பால் தனக்குரிய வாக்கு வங்கியைத் திறந்து அரசிற்கு முட்டுக் கொடுக்கவே மலையக தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் என்ற பெயரில் ஒரு தொழிற் சங்கம் ஆரம்பித்திருக்கிறார். இவரது இச் செயல் ஏற்கனவே பிரதி அமைச்சர் சுரேஷ் வடிவேல் சென்ற பாதையிலாகும். இதனையிட்டு இ.தொ.கா வும் ஆறுமுகம் தொண்டமானும் கப்சிப்பாக இருக்கிறார்கள். இத்தகைய மலையக அதிசயங்கள் கண்டு மலையக மக்கள் வானத்தைப் பார்ப்பதா அல்லது பூமியைப் பார்ப்பதா எனத் திண்டாடி நிற்கிறார்கள்.

# சம்பளவாசல்

## — ஓடும்பிள்ளை

மலையக தொழிற்சங்கவாதிகள் உதிர்க்கும் தத்துவ முத்துக்களையும் கொடுக்கும் வாக்குறுதிகளையும் பார்த்தால் தோட்டங்களில் வருடாந்தம் நடைபெறும் மாரியம்மன் திருவிழாக்களில் கரகம் பாளித்தல் (கும்பம் பாளித்தல்) நடைபெறும்போது இரவிரவாக கரகம்பாளிக்கும் இடத்தில் உடுக்கடித்து, தப்படித்து பலருக்கு உருவந்து ஆடி குறிப்பெடுப்பதும் (மதிப்பெடுப்பது) குறி சொல்வதும்தான் நினைவுக்கு வருகிறது. குறிசொல்லி குறிப்பெடுத்த பிறகுதான் திருவிழா நடத்துவதற்கு மாரியம்மன் அனுமதி கொடுத்ததாகக் கொள்ளும் மரபு இன்னும் இருக்கிறது. குறிப்பெடுப்பதும் குறி சொல்வதும் உண்மையல்ல என்ற குற்றச் சாட்டுக்களை தொழிலாளிகளே கூறிவந்தபோதும் திருவிழா நடத்தும்போது குறிப்பெடுப்பதும் குறிசொல்வதும் இன்னும் வழக்கத்தில் இருக்கிறது. அதை மாற்றியமைக்க யாருக்கும் விருப்பமில்லை. புதிய குறிப்பெடுப்பவர்களும் குறிசொல்பவர்களும் (பழையவர்கள் இருக்கும் போதும், பழையவர்கள் இல்லாத போதும்) மலையகத்தில் தோன்றிக் கொண்டே இருக்கிறார் கள்.

குறிப்பெடுப்பது என்பது கோயில்கமிட்டி உறுப்பினர்கள் சிலர் நினைத்து வைத்திருக்கும் பொருளின் பெயரை உருவந்து ஆடுபவர் யாராவது சொல்ல வேண்டும் அல்லது அப்பொருளைக் காட்ட வேண்டும். பலர் உருவந்து ஆடி பல பொருட்களின் பெயர்களை சொல்வார்கள். காட்டுவார்கள். அந்த கோயில்கமிட்டி உறுப்பினர்கள் நினைத்ததை கூறிவிட்டால் அல்லது தொட்டுக் காட்டிவிட்டால் மாரியம்மன் திருவிழாவிற்கு அனுமதி கொடுத்து விட்டதாகக் கொள்ளப்படும். அப்படி குறிப்பெடுத்தவர் அல்லது சொன்னவரே திருவிழாவில் கும்பங்களை அல்லது கரகங்களை தூக்குபவர்களை தேர்ந்தெடுப்பார். (தோட்டத்திற்கு தோட்டம் கரகங்களின் எண்ணிக்கை வேறுபடும் 3, 5, 7 என்ற எண்ணிக்கையில் இருக்கும்)

இவை நினைவிற்கு வரும்போது தோட்டப்புற திருவிழாக்களின் தன்மைகள் பெருந்தோட்ட தொழிற்சங்கத்துறையை பாதித்துள்ளதா அல்லது தொழிற்சங்க இயக்கத்தன்மை திருவிழாக்களை பாதித்துள்ளனவா என்றே எண்ணத்தோன்றுகிறது.

தற்போது குறிசொல்லும் குறிப்பெடுக்கும் தொழிற்சங்கவாதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

ஒருவர் "தனித்தனி மலையக அமைப்புகளாலோ போராட்டங் களாலோ மலையக மக்களுக்கு எதுவுமே கிடைக்கவில்லை. சிங்கள தலைமைத்துவங்கள் மனது வைத்து கொடுத்தவைகளையே இன்று மலையக மக்கள் அனுபவிக்கிறார்கள். அதனால் சிங்களத் தலைமைகளின் கீழ் அணிதிரள்வதே மலையக மக்களுக்கு பொருத்தமான தெரிவு" என்று சொல்கிறார் ஒருவர். இதைக் கண்டுபிடித்தவர் யாருமல்ல. மலையகத்தின் பிரபல எழுத்தாளரும் நடிகரும், தொழிற்சங்க வாதியாகவும், மாகாணசபை உறுப்பினராகவும் இருந்த முருகன் சிவலிங்கம் தான். அவர் தோட் டத்து கிளாக்கராக இருக்கும்போது லயத்திலிருந்து ஒது ங்கி உத்தியோகம் செய்வதே முன்னேற்றத்திற்கு வழி என்றார். மலைய மக்கள் முன்னணியில் இருக்கும் போது மலையகத்திற்கு பலமான தனித்துவமான அரசியல் அமைப்பு தேவை என்றார். அதிலிருந்து விலகிய பிறகு இந்தியாவின் அனுசரணையுட னான அமைப்பே தேவை என்றார். தற்போது சிங்களப்பேரினவாதத் தலைமைகளின் தயவே தேவை என்கிறார்.

சிங்களப் பேரினவாதத்தால் ஒடுக்கப்படும் 'தேயிலை தேசம்' அதனிடமே சரணடைய வேண்டும் என்கிறார். இவர் நன்றாகவே குறிப்பெடுக்கிறார். குறிசொல்லுகிறார்.

இப்போது ஏறக்குறைய எல்லா பத்திரிகைகளினதும் ஞாயிறு இதழ்களில் மலையகத்திற்கென பிரத்தியேகமான சஞ்சிகைப் / பகுதிகள் வெளியாகின்றன. அவற்றை மலையகப் பிரச்சினைகளுடன் தொழிற்சங்கத் தலைவர்களினதும் பிரமுகர்களினதும் கல்விமான்களினதும் அறிவுரைகள் சிந்தனைகள் பாரியளவில் ஆக்கிரமித்துக் கொள்கின்றன.

தனிப்பட்ட ரீதியாக முன்னேறியவர்களும் அவர்களது முன்னேற்ற மாதிரிகளை முழு மலையகத்திற்கும் ஏற்புடைய பொய்யா மொழிகளாகப் பிரகடனப்படுத்துகின்றனர். அப்படி வந்தவற் றில் அண்மையில் ஒரு ஆசிரியர் உதிர்த்துள்ளமை கவனித்தில் பட்டது. அவரும் ஒரு சிவலிங்கம் தான். அவர் சொல்கிறார். ஒவ் வொரு தோட்டத்திலும் ஒரு வைத்தியர், பொறியியலாளர், சட்டத் தரணி என்று புலமைசார்ந்தவர்கள் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். அவரே தோட்டப்பாடசாலையில் படிப்பிக்கவும் இல்லை. தோட்டத்தில் வசிக்கவும் இல்லை. புலமைசார்ந்தவர்கள் தோட்டத்தில் வசித்துக்கொண்டு சேவையை செய்யக் கூடிய சூழ்நிலை இல்லாதிருப்பதை உணராமல் செயற்கையாக கட்டுப்பாடுகளை விதித்துள்ளார். அத்துடன் அவர் முதுமானிப்பட்டதாரி ஆனது போன்று எல்லோருக்கும் ஆக முடியும் என்கிறார். அவர் பின்பற்றிய வழிவகைகளை பின்பற்றினால் பயன்கிட் டும் என்கிறார். தனிமனித ஈடேற்றங்களும் மேநிலையாக்கங்களும் நிகழ்கின்றன என்பதற்காக அதுவே முழு சமூகத்தின் பிரச்சினைகளையும் தீர்க்காது. தனிப்பட்டவர்களின் முதுமானி, கலாநிதிப் பட்டங்கள் முகவரியற்றிருக்கும் மலையக மக்களுக்கு முகவரியைப் பெற்றுக்கொடுக்காது.

வாழ்க்கை முறையாலும் இயல்பாகவும் ஏற்படும் தனிப்பட்ட வளர்ச்சிகள் வேறு ஒரு சமூகத்தின் அரசியல் பொருளாதார சமூக மேம்பாடு என்பது வேறு.

மலையகத்தின் பிற்படுத்தப்பட்ட நிலையில் தனிப்பட்டவர்களின் சமூகம் சார்ந்த சாதனைகளை விட தனிப்பட்ட சாதனைகளின் மூலம் மலையகம் வளர்ச்சி கண்டிருப்பதாகக் காட்டப்படுகிறது. அதற்கு ஒரு உதாரணமே சிவலிங்கம் மாஸ்டர். அவரின் பொய்யாமொழிகள் வீரகேசரியில் வெளிவராததன் காரணமாகத்தான் இதுவரையும் மலையகம் வளர்ச்சி காணவில்லையென்றால் அவரது அம்மொழிகளை படித்து மலையகம் முன்னேறட் டும்.

"என்னை எம்.பி. ஆக்குங்கள் பிறகு என்ன செய்கிறேன் என்று பாருங்கள்". இது சீ.வி. பிறந்த மண்ணில் பிறந்தவரின் பகிரங்க வேண்டுகோள். இந்த வேகத்திலே அவர் செயப்படுவாராயின் எம்.பி ஆகிவிடலாம். அமைச்சராவதற்கு பேரினவாதத் தலைவர்களின் தயவைப் பெறுவது எப்படி என்பதும் அவருக்கு தெரியும். அவரின் பார்வையில் அரசியல் என்பது அதுதானே. திகாம்பரமும் சதாசிவமும் வழக்குப் போட்டு தொழிற்சங்கங்கள் தோட்டக் கம்பெனிகளுடன் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தத்தை கிழித் தெறிந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு விமோசனம் பெற்றுத் தரப்போவதாக தெரிவித்தனர். அவ் வழக்கைத் தொடர்ந்து நடத்துவதற்கு சட்டரீதியான ஏற்புடமை இல்லை என்றும் அது வாபஸ் பெறப்பட்டுவிட்டதாகவும் காற்று வாக்கில் ஒரு செய்தி.

எல்லோருமே குறிப்பெடுக்கிறார்கள் குறிசொல்கிறார்கள் வாக்குறுதி கூறுகிறார்கள். இந்த முறை நாம் ஏமாறுவதாய் இல்லை என்று எவ்வளவு தான் மக்கள் சொன்னாலும் தேர்தல் திருவிழா வரும் போது மீண்டும் மீண்டும் ஏமாற்றப்படுபவர்கள் மக்களே என்பது தான் கவலையாக உள்ளது.

**பிற் குறிப்பு:–**

**மலையகப் பெருந்தோட்டங்களில் உள்ள தோட்டக்காரியாலயங்களில் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படும் போது அவ்விடத்தை அண்மித்த ஒரிகு வாசல்களில் தமது கடன்களை அறவிடவும் பொருட்கள் சிலவற்றை விற்கவும் சம்பளத்தினத்தன்று தொழிலாளர்களை எதிர்பார்த்து நிற்கும் இடத்தையே சம்பள வாசல் எனக் குறிப்பிடுவர். ஓடும்பிள்ளை என்பவர் தோட்டங்களில் செய்தி எடுத்துச் சென்று அறிவிப்பராவார்.**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி

சுற்று 15 யூன் 2008 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 114

இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

# அரசாங்க ஊழியர்களின் கருத்து சுதந்திரத்திற்கு ஆப்பு!

அரசாங்கத்தை அரசாங்க ஊழியர்கள் விமர்சிப்பது பாரதூரமான குற்றமாகும் என்று தேசிய பாதுகாப்பிற்கான ஊடக நிலைய பணிப்பாளர் நாயகம் ஹுமுகல்ல தெரிவித்தார். அரசாங்க ஊழியர்கள் அவர்களின் ஒழுக்கம் நடத்தை தொடர்பானவற்றை விபரிக்கும் தாபன கோவைக்கு உட்பட்டே நடக்க வேண்டும். அரசாங்க ஊழியர்கள் அரசாங்கத்தை விமர்சிப்பது அந்த தாபனக் கோவைக்கு எதிரானதாவதால் அவர்கள் குற்றஞ் செய்தவர்களாவர் என்று அவர் ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசும்போது தெரிவித்துள்ளார்.
இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவரான சனத் பாலசூரிய செயலாளர் பொட்டல ஜயந்த ஆகியோரை அழைத்த பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ச அச்சுறுத்தியதாகச் செய்திகள் வெளியானதை அடுத்த அதற்கு ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தபோதே மேற்படி கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அவர்கள் இருவரும் அரச ஊடகமான 'லேக்ஹவுஸ்ஸில்' வேலை செய்வதால் அவர்கள் அரச ஊழியர்களாவதுடன், அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்து அவர்கள் விமர்சனம் செய்ய முடியாது.
அவர்கள் "த நேசன்" பத்திரிகையின் இணை ஆசிரியர் கீத் நொயர் தாக்கப்பட்டமைக்கு அரசாங்கமே பொறுப்பு என்று கூறியுள்ளதுடன் யுத்தம் பற்றிய அரசாங்கத்தின் கொள்கையையும் விமர்சித்துள்ளனர். அவ்வாறு விமர்சிப்பதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை என்றும் ஹலுகல்ல கூறியுள்ளார்.
அத்துடன் பாதுகாப்புச் செயலாளர் அந்த இரண்டு பத்திரிகையாளர்களையும் அழைத்து அவர்கள் கீத் நொயர் தாக்கப்பட்டது குறித்தும் அரசாங்கம் நடத்தும் யுத்தம் பற்றியும் அவர்களிடம் இரண்டு மணித்தியாலங்கள் கலந்துரையாடினாரேயன்றி அவர்களை அச்சுறுத்தவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.
இவ் விவகாரத்தில் இரண்டு விடயங்கள் கவனத்திற்குரியன. ஒன்று, அரசாங்க ஊழியர்கள் அரசாங்கத்தைப் பற்றி விமர்சிக்கும் கருத்து வெளியிடும் சுதந்திரத்தை கொண்டிருக்கவில்லையா? இரண்டு, பாதுகாப்பு செயலாளர் மேற்படி பத்திரிகையாளர் சங்கத் தலைவர்களை அச்சுறுத்தினரா இல்லையா?
ஊடகவியலாளர்கள் கடத்தப்படுவதும் தாக்கப்படுவதும் கொல்லப்படுவதும் (அரசியல் வாதிகளால் இம்சைகளுக்கும் அவமானத்திற்கும் உட்படுத்தப்படுவது உட்பட) நாளாந்தம் நடைபெறும் விடயங்களாகும். தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டபோதும் அவை நிறுத்தப்படவில்லை. ஏற்கனவே தொலைபேசியின் மூலம் "டெய்லி மிரர்" பத்திரிகையின் ஆசிரியரை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மிரட்டியதாகத் தெரிவிக்கப்பட்டு பெரும் சர்ச்சையை கிளம்பி இருந்தது.
இவ்வாறான வரலாற்றுப் பின்னணியில் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவர்கள் அச்சுறுத்தப்பட்டிருக்கமாட்டார்கள் என்று நம்புவதற்கில்லை. அச்சுறுத்தப்பட்டிருக்காவிட்டால் அச்சுறுத் தப்பட்டதாகப் பிரசாரம் செய்ய வேண்டிய தேவை அவர்களுக்கில்லை. அத்துடன் அவர்கள் ஏற்க னவே பல அச்சுறுத்தல்களுக்கு முகம்கொடுத்திருக்கின்றனர்.
அப்படியான அச்சுறுத்தல் நடந்திருப்பின் அது அவர்களது கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை மறுக்கும் ஜனநாயக விரோத நடைமுறை ஆகும். இது தனிமனித உரிமைக்கு எதிரானது மட்டுமன்றி அரசியல் யாப்பில் உறுதிசெய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறும் செயலுமாகும்.
இதைவிட மிகவும் முக்கியமானதொரு பிரச்சினைதான் அரசாங்க ஊழியர்களுக்கு அரசாங்கத்தினை விமர்சிக்கும் அரசாங்கத் திட்டங்கள் மீது கருத்துக்களை வெளியிடும் சுதந்திரத்தை கொண்டிருக்கவில்லை என்று தேசிய பாதுகாப்பிற்கான ஊடக நிலைய பொறுப்பாளர் கூறியிருப்பதாகும்.
எங்களது நாட்டில் உயர் சிவில் அதிகாரிகளும் நீதித்துறைசார்ந்த உயர் அதிகாரிகளும் அரசியல் கட்சியுடன், தொழிற்சங்கத்துடன் இணைந்து செயற்பட முடியாது. இதன் காரணம் அவர்கள் அரசியல் கட்சி பேதங்களுக்கு அப்பால் செயற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பை கொண்டதாகுமேயன்றி அவர்கள் எதைப் பற்றியும் கருத்துத் தெரிவிக்க முடியாது என்பதல்ல. அந்த உயர்மட்ட அதிகாரிகளைத்தவிர ஏனைய அனைத்து அரசாங்க ஊழியர்களும் அரசியல்கட்சிகளிலும் தொழிற்சங் கங்களிலும் இணைந்து செயற்படத்தடை இல்லை. அவ்வாறிருக்கும் போது லேக்ஹவுஸ் ஊழியர்களான பத்திரிகையாளர்கள் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கத்தின் தலைவர்களாக இருந்து கருத்து வெளியிடச் சுதந்திரம் இல்லையா?
அரசாங்க ஊழியர்களின் கடமைகளும், பொறுப்புகளும் பற்றி தாபனக்கோவை கடுமையான ஏற்பாடுகளை கொண் டுள்ளது. அதில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை விமர்சிப்பதற்கோ கருத்துக்களை வெளிப்படுத்தவோ தடைவிதிக்கப்படவில்லை. அப்படி ஏற்பாடுகள் இருந்தால் அவை அரசியல் யாப்பிற்கு எதிரானதாகும்.
அரசாங்க ஊழியர்களின் தொழிற்சங்க உரிமைகள் ஆசிரியர் சங்கங்களின் நடவடிக்கைகள் குறித்து வழங்கிய தீர்ப்பின் மூலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது ஆசிரியர்கள் அவர்களுக்கு சம்பளஉயர்வு வழங்கப்படாவிட்டால் பரீட்சை வினாத்தாள்களை திருத்தாமல் பகிஷ்கரித்தமைக்கு எதிராக அச் சங்கத்தின் தலைவர்கள் மீது "நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது." ஆனால் அத்தீர்ப்பை வழங்கிய பிரதம நீதியரசர் நீதிபதிகளின் சம்பளம் உயர்த்தப்படாவிடின் பதவியை இரா ஜினாமாச் செய்யப்போவதாக அறிவித்துள்ளார். நீதிபதிகளின் சம்பள உயர்விற்காக அவரது பதவியை (அடுத்த வருடத்துடன் அவரது பதவிக்காலம் முடிவிற்கு வருகிறது) இராஜினாமா செய்யப் போவதாக அறிவித்துள்ளார். அவ்வாறெனின் ஆசிரியர்களின் தலைவர்களுக்கு இருக்கும் பொறுப்பு குறைவானதல்ல என்பது விளங்கிக் கொள்ளப்பட வேண்டியதாகும். அதேபோன்று தனியார் துறை ஊழியர்களும் அரசாங்க ஊழியர்களும் தொழிற்சங்க நடவடிக்கையாக செய்த வேலைநிறுத்தங்களை மாவட்ட நீதிமன்றங்கள் நியாயமற்றதெனக் கூறியுள்ளன.
ஆக தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரங்களும் பல வழிகளில் குறிப்பாக அரசாங்க அதிகாரிகளாலும் நீதித்துறையாலும் பாதுகாப்பு துறையாலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
எங்கே? யாரிடம்? நீதியைத் தேடுவது?

**ஆசிரியர் குழு**

# விலை அதிகரிப்புகளும் யுத்தக் கொள்கையும்

கடந்த மாதத்தின் மூன்றாவது வார இறுதியில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணை என்பனவற்றின் விலைகள் மக்கள் எதிர்பார்க்காத அளவுக்கு அதிகரிக்கப்பட்டன. சாதாரண பெற்றோல், டீசல் என்பன 30 ரூபா மண்ணெண்ணை 10 ரூபா என உயர்த்தப்பட்டன. அதன் காரணமாக பெற்றோல் 157 ரூபா டீசல் 110 ரூபா மண்ணெண்ணை 80 ரூபா என அதிகரித்த விலை நிர்ணயிக்கப்பட்டது. அதே வேளை அதிவிஷேட பெற்றோல் டீசல் என்பன 40 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. உலகச் சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரிக்கப்பட்டதன் காரணமாகவே இவ் விலை உயர்வு என அரசாங்கம் காரணம் கூறி நிற்கிறது.
மேற்படி விலை அதிகரிப்பை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும், இந்தியக் கம்பனியான லங்கா இந்தியன் எண்ணெய்க் கம்பனியும் (LIOE) இணைந்தே உயர்த்தியிருக்கிறார்கள். இத்தகைய விலை உயர்வுகள் நமக்கு மட்டுமல்ல இந்தியா உட்பட உலகம் பூராவும் ஏற்பட்டுள்ளதாக அரசாங்க அமைச்சர்கள் விரித்துக் கூவி வருகின்றனர். எவ்வாறு கூறிய போதிலும் ஏற்கனவே அரிசிவிலை உயர்வையும் ஏனைய அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பையும் சுமக்க முடியாதுதத் தளிக்கும் மக்களுக்கு மேற்படி பெற்றோல், டீசல், மண்ணெண்ணை என்பனவற்றின் விலை அதிகரிப்பு மேலும் தாங்க முடியாத பாரத்தை ஏற்றியுள்ளது. இதன் மூலம் ஏற்கனவே உயர்ந்து சென்ற விலைகள் மேலும் பலமடங்காக அதிகரித்துள்ளன. விரைவில் சமயல் எரிவாயுவின் விலையும் உயர்த்தப்பட இருக்கின்றது. அதன் விலை 2000/= த்திற்கு மேல் அதிகரிக்கும் என்ற அச்ச எதிர்பார்ப்புடன் மக்கள் இருந்து வருகிறார்கள்.
பெற்றோல், டீசல் விலை அதிகரிப்பால் பஸ் கட்டண உயர்வு நடைமுறைக்கு வந்துள்ளது. மற்றும் முச்சக்கர வண்டிகள் சிறு ரகப் பயணிகள் வாகனங்கள் யாவும் தமது கட்டணங்களை அதிகரித்துள்ளன. அதே வேளை புகையிரதக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு 75 வீதமான மக்கள் தமது பயணத்திற்கு பயன்படுத்தும் பஸ் புகையிரதம் மற்றும் சிறு ரக வாகனங்களின் கட்டண அதிகரிப்பானது கடுமையான வாழ்க்கைச் செலவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.
இவ் விலை உயர்வு பற்றி எடுத்துக் கூறிய பெற்றோலிய அமைச்சர் பௌசி பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் நஷ்ட இழப்பைப் பற்றிப் புலம்பியிருக்கிறார். ஏற்கனவே நஷ்டம் காரணமாகவே இந்திய எண்ணெய்க் கம்பனிக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒரு பகுதி தாரை வார்க்கப்பட்டது. முதலில் நூறு விநியோக நிலையங்களும் பின்பு நூற்றி ஐம்பதுமாகக் கையளிக்கப்பட்டது. அத்துடன் இறக்குமதி சேமிப்பு விற்பனையில் விஷேட நடைமுறைகளை இந்தியக் கம்பனி கொண்டிருக்க சலுகைகள் கொடுக்கப்பட்டிருந்தன. இவை பற்றி புதிய பூமி ஏற்கனவே புள்ளி விபரங்களுடனான கட்டுரைகளை வெளியிட்டதுடன் எதிர்காலத்தில் எண்ணெய் விலை அதிகரிப்பில் இவ் இந்தியக் கம்பனி வகிக்கப்போகும் ஆதிக்கம் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது. இன்று அவ்வாறே நடைபெற்று வருகின்றது.
உலகச் சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரிப்புப் பெற்றுள்ளது உண்மையேயாகும். ஆனால் அதற்குக் காரணம் தனியே எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் மட்டுமல்ல. அல்லது சீனா இந்தியா போன்ற நாடுகளின் அதிகரித்த கொள்வனவும் பிரதான காரணமும் அல்ல. அதி முக்கிய காரணம் தமது வீழ்ச்சி பெற்று வரும் டொலரின் பெறுமதியை உலகச் சந்தையில் தக்க வைத்துக் கொள்ளும் அமெரிக்க எண்ணெய்க் கம்பனிகளின் லாபம் பெறும் பேராசையேயாகும். கறுப்புத் தங்கம் என வர்ணிக்கப்படும் எண் ணெய்– எரிபொருள் வளத்தைக் கொள்ளையிட்டுச் செல்லவே அமெரிக்கா தனது கூட்டாளிகளுடன் ஈராக்கில் ஆக்கிரமிப்பு யுத்தத்தில் இறங்கியது. ஆனால் அந்த எண்ணெய்க் கொள்ளை யுத்தம் இலகுவானதாக அமையவில்லை. ஈராக் யுத்தம் அமெரிக்கப் பொருளாதாரத்தையே ஆட்டம் காண வைத்து வருகிறது. அமெரிக்க ஜனாதிபதி உப ஜனாதிபதி உள்ளிட்ட ஆளும் வர்க்கத் தலைவர்களும் அமெரிக்க கொள்கை வகுப்பாளர்களும் இராட்சத எண்ணெய்க் கம்பனிகளின் முதலாளிகளும் பங்குதாரர்களும் ஆவர் என்ற உண்மை வெளியே அதிகம் தெரிவதில்லை. அல்லது எண்ணெய் உற்பத்தி நாடுகளின் எண்ணெய் வயல்கள் மத்திய கிழக்கின் ஆபிரிக்காவின் நாடுகளது மக்களுக்குச் சொந்தமானவையும் அல்ல என்பதும் காண வேண்டிய உண்மைகளாகும். ஏகாதிபத்திய எண்ணெய்க் கம்பனிகள்

**வெகுஜனன்**

உற்பத்தி நாடுகளின் எண்ணெய் வயல் சொந்தக்கார முதலாளிகளுடன் கூட்டுச் சேர்ந்தே கொள்ளை லாப எண்ணெய் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
இதற்கு பங்கம் ஏற்படாமல் இருக்கவே ஈராக் யுத்தம் தொடக்கப் பட்டது. மற்றொரு நாடான ஈரான் தனது எண்ணெய் வளத்தை சுயாதீனமாகக் கொண்டிருப்பதைப் பொறுக்கமாட்டாத நிலையிலேயே அணு ஆயுத உற்பத்திக் குற்றச்சாட்டை முன்வைத்து ஈரானை அடிபணியச் செய்ய அமெரிக்கா முயன்று வருகிறது.
எனவே எண்ணெயின் விலை அதிகரிப்பின் பின்னால் சர்வதேச பொருளாதார அரசியல் காரணங்களும் ஏகாதிபத்திய உலகமய மாதலின் நிகழ்ச்சி நிரலும் உண்டு. அவ்வாறே இலங்கையிலும் அவற்றுடன் தொடர்புடைய கண்களுக்கு மறைக்கப்படும் காரணங்கள் இருக்கின்றன. அமெரிக்கப் பாணியிலேயே இங்கும் யுத்தத்தை நடாத்திக் கொண்டு எண்ணெய்விலை அதிகரிப்பில் கொள்ளை லாபம் பெறப்படுகிறது. இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட முப்படைகள் பொலீஸ் உள்ளிட்டவர்களின் பாவனைக்கு நாளாந்தம் பல ஆயிரம் லீற்றர் எண்ணெய் வகைகள் பயன்படுத்தப்படுகிறது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு இத்தரப்புகளால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை பல கோடி ரூபாய்களில் இருந்து வருகின்றது. அவ்வாறே மின்சார சபையும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு பெருந்தொகை நிலுவைகள் செலுத்த வேண்டியுள்ளது. இவ்வாறு அமைச்சுக்கள் திணைக்களங்கள் நிலுவைத் தொகைகளைச் செலுத்த வேண்டியுள்ளன. 108 அமைச்சர்களும் அவர்களது அதிகாரிகளும் பயன்படுத்தும் வாகனங்களின் எண்ணிக்கை சுமார் இரண்டாயிரத்தை எட்டும். அவற்று க்கான எரிபொருள் யாருடைய பணத்திலிருந்து செலவு செய்யப்படுகினறது. 25 வீத வெட்டு என்பது வெறும் கண்துடைப்பாகும். 'செட்டி நட்டம் ஊர் மேலே' என்றொரு பழமொழி உண்டு. ஆளும் வர்க்கத்தின் சகல தரப்பினரும் அதிகார மையங்களும் மக்களின் முதுகுகளின் மீதே சவாரி செய்கின்றனர். அதில் ஒன்றே பெற்றோல் டீசல் மண்ணெண்ணை விலை அதிகரிப்பாகும்.
அமைச்சர் பந்துல குணவர்த்தனா கூறுகிறார், இன்றைய நெருக்கடிச் சூழலில் அரசாங்கமும் மக்களும் அதிகளவு தியாகம் செய்ய வேண்டுமாம். இதில் யார் யார் எந்தளவு வீதத்தில் என்று கூறி இருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். இதே அமைச்சர் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு பற்றிக் கூறு கையில் மக்கள் பால்மா வகைகளை அதிகம் உபயோகித்து நீரழிவு நோய்க்கு உள்ளாகிறார்கள். கண்டபடி உணவுகளை உண்ணக் கூடாது என்று வைத்திய ஆலோசனை வழங்கியுள்ளார். இவர் யாரைப் பின்பற்றி இவ்வாறெல்லாம் கூறுகிறார் என்றால் அமெரிக்க எசமானர்களைப் பின்பற்றியாகும். ஜோஜ் புஷ் உலக உணவு நெருக்கடிக்கு இந்தியாவின் 35 கோடி நடுத்தர மக்களின் புதிய உணவுப் பழக்கம் காரணம் என்றார். அவரது வழியில் இந்திய விவசாய அமைச்சர் சரத்பவார் கோதுமைப் பற்றாக் குறைக்குக் காரணம் தென் மாநில மக்கள் அதிகளவு சப்பாத்தி சாப்பிடுவது தான் என்றார்.
இவ்வாறு உலக ஏகாதிபத்தியத் தலைவர்களும் அவர்களது ஊடகங்களும் மூன்றாம் உலக நாடுகளின் ஆளும் வர்க்கத் தலைமைகளும் உணவு எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு திசை திருப்பு நியாயங்களையே கூறிவருகிறார்கள். ஆனால் உண்மை யாதெனில் கடந்த மூன்று தசாப்த காலத்தின் ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரல் நடைமுறைப்படுத்தப்பட்டதன் நாசகார விளைவே இன்றை தானிய– எண்ணெய் நெருக்கடிகளும் விலைகள் அதிகரிப்புமாகும். காலநிலை மாற்றங்கள் கூட ஏகாதிபத்திய பல்தேசிய நிறுவனங்களின் லாபநோக்கு உற்பத்திக்கு உட்பட்டதேயாகும். நமது நாட்டில் இவற்றுடன் யுத்தம் முன்னெடுக்கப்படுவதும் அதன் கார ணமான பொருளாதார் நெருக்கடிகளும் மேற்படி நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டதேயாகும்.
இந் நிலையில் பாரிய விளைவுகளாகி நிற்கும் நெருக்கடிகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றுக்கு எதிராக மக்கள் ஐக்கியப்பட்டு வீதியில் இறங்கிப் போராடவேண்டும். யுத்தத்தால் ஏமாற்றப்படுவதை மக்கள் நிராகரிக்க வேண்டும். உலகச் சந்தையும் உலக விலை உயர்வும் எத்தகையவை என்பது உணரப்படவேண்டும். இதன் மூலம் ஏகாதிபத்திய உலகமயமாதலும் யுத்தத்தின் நீடிப்பும் தான் விலை அதிகரிப்புகளுக்கும் நெருக் கடிகளுக்கும் மக்கள் மீதான தாங்க முடியாது சுமைகளுக்கும் மூல காரணமாகும் என்பது விளங்கிக் கொள்ளப்பட வேண்டும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# பழிக்குப் பழி வாங்கும் குடிமக்கள் படுகொலைகள்

கடந்த மே மாதம் 23ம் திகதி கிளிநொச்சி முறிகண்டிப் பகுதியில் "ஹை–ஏஸ்" வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்த குடிமக்கள் மீது சக்திவாய்ந்த கிளைமோர் தாக்குதல் மேற்கொள ளப்பட்டது. இத் தாக்குதலில் பெண்கள் ஆண்கள் குழந்தைகள் உட்பட 17 பேர் கோரமாகக் கொல்லப்பட்டனர். மூவர் படுகாயங் கள் அடைந்தனர். ஆழ ஊடுருவும் படையணியினரே இத் தாக்கு தலை மேற்கொண்டதாக விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியுள் ளனர். இதனை அரசாங்கத் தரப்பு மறுத்திருக்கிறது. இத்தாக்குத லில் உயிரிழந்தவர்கள் அனைவரும் எதுவும் அறியாது தமது அன் றாட அலுவல்களுக்காகப் பயணித்த குடிமக்களாவர். இத் தாக்கு தலை வர்ணிக்க மிலேச்சத்தனம் காட்டுமிராண்டித்தனம் என்ற



சொற்பதங்களுக்கு மேலாக வேறதுவும் இல்லை எனலாம்.

மேற்படி கொடூரமும் சோகமும் கொண்ட இவ் இழப்பு நிகழ்வு இடம் பெற்று மூன்று நாட்களுக்கு பின் மே 27ம் திகதியன்று கொழும்பு தெஹிவலை புகையிரத நிலையத்தில் தரித்து நின்று விட்டு மீண்டும் புறப்பட்டு ஓட ஆரம்பித்த புகையிரதத்தில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடிக்க வைக்கப்பட்டது.

11 பேர் கொல்லப்பட்டதுடன் 70 பேர் வரை காயமடைந்தனர். வேலை முடிந்து வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்த குடிமக் களே இக் கொடூரத் தாக்குதலுக்கு ஆளாகினர். இக் குண்டு வெடிப்பிற்கு விடுதலைப் புலிகளே காரணம் என அரசாங்கம் குற் றம் சுமத்தியிருக்கிறது. அதன் மூலம் தமது பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்பதற்கு அது பல சேர்ந்துள்ளது.

மேற்படி அண்மைய இவ்விரு கிளைமோர் குண்டுத் தாக்குதல்க ளும் சாதாரண குடிமக்களை இலக்கு வைத்த தாக்குதல்களா கவே அமைந்துள்ளன. கொல்லப்பட்டவர்கள் இன மொழி மத அடையாளத்தாலும் பிரதேசங்களாலும் வேறுபட்டவர்களே அன்றி மனிதர்களேயாவர். அதுவும் சாதாரண தமிழ் சிங்கள மக்களா வர். இவ்வாறான குடிமக்கள் மீதான தாக்குதல்கள் மிலேச்சத்தன மான பழிவாங்கும் வகையுடையவையாகும். இவை தற்செயலா னவை அல்ல. திட்டமிடப்பட்ட படுகொலைகளாகும்.

இத்தகைய குடிமக்கள் மீதான இலக்கும் தாக்குதல்களும் இடம் பெற்றுள்ளமை இது தான் முதல் தடவையல்ல. பேரினவாத ஒடுக்கு முறையின் பக்கத்திலிருந்தும் தமிழர் போராட்டத்தரப் பிலிருந்தும் இவ்வாறான குடிமக்கள் மீதான திட்ட மிட்ட தாக்குதல்கள் பழிக்குப் பழி என்ற விதமாக கட ந்த கால் நூற்றாண்டுக்கு மேற்பட்ட யுத்தத்தில் இடம் பெற்று வந்துள்ளன. குடிமக்கள் கூடியுள்ள இடங்கள் வழிபாட்டுத்தலங்கள் பயண வாகனங்கள் சன நெரி சல்கள் உள்ள பகுதிகள் என்பனவற்றில் மேற்படி தாக் குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. அவற் றைப் பட்டியல் இட்டால் தமிழ் சிங்கள முஸ்லீம் குடி மக்கள் ஆயிரக் கணக்கில் அழிக்கப்பட்ட எண்ணி க்கை உண்டு. இத்தகைய தாக்குதல்களில் தம்மவரை இழந்த மக்கள் இன்றுவரை அவற் றின் தாக்கங்களில் இருந்து மீளவில்லை. உயிருடன் இருப்பவர்களும் அவயங்கள் இழ ந்து நடைப்பிணங்களாயும் நலிவுற்றவர்களா கவும் அவல வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். இத்தகைய குடிமக்கள் மீதான மிலேச்சத்த னமான தாக்குதல்களால் பேரினவாத ஒடு க்குமுறையாளர்களும் தமிழர் போராட்டத் தரப்பினரும் பெற்றுக் கொண்ட விளைபயன் தான் என்ன? என்றே சாதாரண மக்கள் தங்களுக்குள் கேள்வி கேட்கிறார்கள். இவர்கள் தத்தமது நோக்கங் களை வென்று கொள்ள குடிமக்களை இலக்காக கொள் வதற்கு பலவேறு காரணங்கள் உண்டு. (1) இதனைத் தமது யுத்த தந்திரோபாயங்களாகக் கொண்டு எதிர்த் தர ப்பினரைப் பலவீனப்படுத்துவது. (2) தத்தமது ராணுவப் பல த்தை வெளிப்படுத்தும் ஒரு வழிமுறையாக்குவது. (3) சாதாரண மக்களை அச்சுறுத்தி அவர்கள் மத்தியில் பயப் பீதியைத் தோற்றுவிப்பது. (4) பழிக்குப் பழி என்பதன் ஊடாக இன மொழி மத அடிப்படையிலான குரோத வக்கிர எண் ணங்களை எல்லா மக்களிடையேயும் நிரந்தரப்படுத்தல். (5) அந்நிய சக்திகளின் தேவை விருப்பங்களுக்கு துணைப்போவதற்காக எதிர் மறை நிகழ்வுகளாக குடிமக்களை இலக்காகக்குவது.

(6) அரசியல் தீர்வுக்கு மக்கள் ஆதரவு தெரிவிக்காத வகையிலும் ராணுவத் தீர்வை வற்புறுத்தும் நிர்ப்பந்த ரீதியிலான பேரினவாத–குறுந்தேசியவாத உளவியலை வளர்ப்பது.

இத்தகைய நோக்கங்களை சாராம்சமாகக் கொண்டே வடக்கி லும் கிழக்கிலும் தெற்கிலும் குடிமக்கள் தாக்குதல் இலக்காக்கப் படுகின்றனர். நாடுகளுக்கிடையிலான யுத்தங்களில் கூட குடிமக் கள் இலக்கு வைக்கப்படுவது தவிர்க்கப்பட்டே வந்துள்ளது. சர்வ தேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட யுத்தத்தில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நியமங்கள் யாவும் இன்று தூக்கி வீசப்பட்டவைகளா கவே காணப்படுகின்றன. இரண்டாவது உலக யுத்த காலத்திற் குப் பின்பே அதிகளவில் பழிக்குப் பழி என்ற வகையில் குடிமக்கள் இலக்காக்கப்பட்டு வந்துள்ளனர். ஃபாசிச வாதிகளும் நாஜிகளும் அதன் பின் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளும் எவ்வித கூச்சமும் இன்றி குடிமக்களை இலக்காகக் கொண்ட தாக்குதல்களை நடாத்தி வந்துள்ளனர். இன்று அமெரிக்க மற்றும் நேட்டோப் படை கள் ஈராக்கிலும் ஆப்கானிஸ்த்தானிலும் குடிமக்களை இலக்கு வைத்து தாக்குதல்களை நடாத்தி வருகின்றன. அவ்வாறே இஸ்ரே லிய சியோனிசப் படைகள் பலஸ்தீனக் குடிமக்கள் மீது கொடூர மான தாக்குதல்களை நடாத்தி வருகின்றன. அவற்றுக்குப் பழி தீர்ப்பது போன்று போராட்ட இயக்கங்களும் குடிமக்களை இல க்கு வைக்கின்றன.

இலங்கையின் கடந்த மூன்று தசாப்தகால தேசிய இனப்பிரச் சினை காரணமான யுத்தத்தில் குடிமக்கள் தாக்குதல் இலக் காக்கப்பட்டு வந்துள்ள கொடூரத்தை தடுத்து நிறுத்துவதற்கான வெகுஜன எதிர்ப்பு நடவடிக்கை போதுமான அளவிற்கு முன் னெடுக்கப்படவில்லை என்பது கவனத்திற்குரியதாகும். சில அரசு சார்பற்ற (N.G.O.S) நிறுவனங்கள் தமது இருப்பிற்கான அளவுக்குரிய நடவடிக்கைகளில் மட்டும் செயல்பட்டு வந்தன. அதற்கும் அப்பால் உழைக்கும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்



தக் கூடிய இடதுசாரி சக்திகளும் குடிமக்கள் இலக்காகக்கப் படுவதற்கு எதிரான வெகுஜன அரசியல் பிரசாரத்தை முன் னெடுக்கத் தவறின. இதனால் ஒன்றை ஒன்று நியாயப்படுத்தப் படும் போக்கே வளர்ந்து நிற்கிறது.

இவ் விடயத்தில் ஊடகங்கள் தாங்கள் தலைப்பிட்டுக் கூறும் "நடு நிலை" "நேர்மை" "உண்மை" என்பனவற்றுக்குப் பதிலாகத் தமது ஊடக வர்த்தகத்திற்குப் பங்கமில்லாவாறு நடந்து கொள் கின்றன. தமிழ்க் குடிமக்கள் மீதான தாக்குதல்களை பிரதான சிங்கள ஊடகங்கள் மறைத்து விடுகின்றன. ஆங்கில ஊடகங் கள் சிறு சம்பவமாகப் சிலவரிகள் கொண்ட பெட்டிச் செய்தி யாக்கிக் கொள்கின்றன. அதேவேளை தமிழ் ஊடகங்கள் பெரும் செய்தியாக்கி படங்களுடன் விபரங்கள் வெளியிடுகின்றன. இதே வேலையை தெற்கில் குடிமக்கள் இலக்காக்கப்படும் போது சிங்கள ஆங்கில ஊடகங்கள் பெரிய முக்கியத்துவம் கொடுத்து நிற்கின்றன. இது இலங்கை இன விரிசலின் அவல நிலையின் வெளிப்பாடாகும்.

பழிக்குப் பழி என்பதாக குடிமக்கள் எவராயினும் எந்தப் பிரதேச த்திலும் தாக்குதல் இலக்காகக் கொள்ளப்படக் கூடாது என்பதற் கான பலமான குரலும் கோரிக்கையும் எழுப்பப்பட்டு முன்னெடு க்கப்படல் வேண்டும். இதனை சர்வதேச சமூகத்திடம் முன்வை ப்பதை விட தெற்கிலும் வடக்கிலும் கிழக்கிலும் மேற்கிலும் அனை த்து மக்களிடத்திலும் முன்வைக்க வேண்டும். அதன் மூலமான வெகுஜன எதிர்ப்பு நிர்ப்பந்தத்தை சம்மந்தப்பட்ட தரப்புகளுக்கு ஏற்படுத்தி குடிமக்கள் இலக்கு வைக்கப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படல் வேண்டும். அதற்காக நேர்மையான மக்கள் சார்பு சக்திகள் முன் முயற்சிகள் செய்தல் வேண்டும்.

**சண் முகம்**

# சிவில் சமூகம் என்றால் என்ன?

சிவில் என்கிற சொல் இராணுவ என்பதற்கு மாற்றானதா கப் பலவேறு துறைகளிலும் பயன்பட்டுள்ளது. உதாரணமாக சிவில் எஞ்சினியர் என்றால் குடிசார் பொறியியலாளர். சிவிலி யன் என்றால் குடிமகன்/ குடிமகள். சிவிக்ஸ் என்று முன்னாளிற் கற்பிக்கப்பட்ட ஒரு பாடம் சமூகக் கல்வியைக் குறித்தது. எனி னும் சமூக அரசியல் துறைகளில் ஆழமான சிந்தனையை வெளிப் படுத்திய இத்தாலிய மாக்ஸியச் சிந்தனையாளரும் ஃபாஸிச விரோதப் போராளியுமான அந்தோனியோ கிராம்ஸ்சி 1930க ளில் அரசு தவிர்ந்த சமூகம் என்பதை விடச் செறிவான பொருளிற் பயன்படுத்தினார்.

"பொருளாதாரக் கட்டமைப்பிற்கும் சட்டமும் பலாத்காரமுங் கொண்டு இயங்கும் அரசிற்குமிடையே குடிகள் சமூகம் (சிவில் சமூகம்) நிற்கிறது" என அவர் விளக்கினார். கிராம்ஸ்சியைப் பொறுத்தவரை சிவில் சமூகம் எனப்படுவது அரசினின்றுஞ் சுயா தீனமாகத் தன்னை அமைத்தும் பிரதிநிதித்துவப்படுத்தியும் உள்ள நிறுவனங்களினது தொகுதியாகும்.

பொருளியற் துறையில் இயங்கும் முதலாளிமார் சங்கங்களும் தொழிற்சங்கங்களும் சிவில் சமூக நிறுவனங்களாவது போன்று மத நிறுவனங்களும் கட்சிகளும் தொழில்சார் சங்கங்களும் கல் விக்கும் பண்பாட்டுக்குமான அமைப்புகளும் சிவில் சமூக நிறுவன ங்களே.

எனினும் தன்னளவில் பொருளியற் துறையும் அதனை இயக்கி உற்பத்திக்குப் பொறுப்பாயுள்ள நிறுவனங்களான கம்பனிகளும் கூட்டுத்தாபனங்களும் மேற்கூறிய சிவில் சமூக நிறுவனங்களுள் அடங்கா.

மேற் கூறிய விளக்கம் வர்க்க அடிப்படையிலான உற்பத்தி உறவு களைக் காத்து நிற்கும் அரசையும் உற்பத்தி நிறுவனங்களையும் தவிர்ந்த பிற அமைப்புகளைச் சிவில் சமூகம் என்று கொள்கிறது. இது சமூக அமைப்பை உள்ளபடி பேணுகிற நிறுவனங்களைச் சமூ கச் செயற்பாட்டின் அடிப்படையில் அந்த அமைப்பை எவ்வகை யிலாவது மாற்றும் முனைப்புடைய நிறுவனங்களினின்று வேறுபடு த்துகிறது.

இப்போது சிவில் சமூகம் என்ற சொல்லை அரசியல் தவிர்ந்த சமூ கம் என்கிற கருத்திற் பயன்படுத்தும் ஒரு போக்கு சில காலமா கவே ஊக்குவிக்கப்படுகிறது. அரசு தவிர்ந்த என்கிற கருத்தாக்க த்தை அரசியல் அனைத்திற்கும் பிரயோகிப்பதன் மூலம் அரசுக்கும் மக்களுக்குமிடையிலான முரண்பாட்டை இன்னுஞ் சரியாகச் சொல்வதானால் ஆளும் வர்க்கத்திற்கும் ஒடுக்குமுறைக்குட்பட்ட மக்களுக்குமிடையிலான முரண்பாட்டில் வெளிவெளியாக அந்த வர்க்க நலன்சார்ந்த நிறுவனங்களை வெளியே நிறுத்த வேண்டும். கிராம்ஸ்சி அடையாளப்படுத்தும் சமூகத்தின் பெரும் பகுதியான சிவில் சமூகம் ஆளும் வர்க்க நலன்களையும் அவற்றைப் பாதுகா த்து நிற்கிற நிறுவனங்களையும் வெளியில் நிறுத்துவதன் மூலம் வர்க்கப் போராட்டத்தின் பரிமாணத்தை விரிவுபடுத்துகிறது. என்.ஜி.ஓ க்களும் சில சந்தர்ப்பவாத இடதுசாரிகளும் சிவில் சமூ கம் என்பதிலிருந்து அரசியற் செயற்பாட்டையுடைய நிறுவனங் களை விலக்கி வைப்பதன் மூலம் சிவில் சமூகமென்பது அரசியலு க்கு அப்பாற்பட்டு இயங்குகிற ஒன்றெனக் காட்டமுற்படுகின்ற னர். இந்த அடையாளப்படுத்தல் விஷமத்தனமானது. இதன் மூலம் சிவில் சமூகமெனப்படுவதன் செயற்பாடுகளை அரசியல் நீக்கஞ் செய்து சிவில் சமூகத்தின் உரிமைக் குரலாகத் தம்மை அடை யாளப்படுத்த என்.ஜி.ஓ க்கள் முயலுகின்றன. அவர்களுடன் கூட் டுச் சேர்ந்துள்ள அரசியல் சந்தர்ப்பவாதிகள் அவர்கட்கு உடந் தையாகின்றனர்.

மாக்ஸ் பயன்படுத்திய சில சொற்களில் அதிகம் வழக்கிலில்லாத வற்றைத் தோண்டி எடுத்து அவற்றை வைத்துத் தங்கள் 'புல மையை' வெளிப்படுத்துகிற விவாதங்களில் ஈடுபடுவது சிலருக்கு ஒரு விளையாட்டாக இருந்து வந்துள்ளது. மாக்ஸ் பேசாத விஷ யங்களைப் பட்டியல் போட்டு அதன் காரணமாக மாக்ஸியம் அவற்றைக் கையாளத் தவறிவிட்டது என்றும் தகுதியற்றது என் றும் பேசி வருகிறவர்கள் உள்ளனர். அவையெல்லாம் சிறு பிள் ளைத்தனங்கள். ஆனால் எல்லாமே அப்படியல்ல சில விஷம த்தன மான நோக்க முடையவை. அவை பற்றி எச்சரிக்கையுடன் இரு க்க வேண்டும். அவற்றை உடனுக்குடன் விமர்சனத்திற்குட் படுத் தவும் வேண்டும்.

சிவில் சமூகம் என்பது எதைக் குறிக்கிறது என்பதை நாம் சரி யாக விளங்கியும் விளக்கியும் கொள்வோமானால் மட்டுமே அதைத் துஷ்பிரயோகம் செய்கிறதைத் தடுக்கவும் முடியும்.


www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# நேபாளத்தின் வெற்றியும் இலங்கையின் தோல்வியும்

## அமைதிப் பேச்சுகள் பற்றிய ஒரு பாடம்

நேபாளத்தில் மாஓவாதிகள் நிகழ்த்தியுள்ள புரட்சிகர அரசியல் மாற்றமானது தெற்காசியாவிற்கு மட்டுமல்லாமல் முழு உலகுக்குமே ஒரு புதிய வழிமுறையாகவும் புரட்சிகரச் செயற்பாடாகவும் இருக்கின்றது. 10 ஆண்டு கால நீண்ட போராட்டத்தின் பின்னர் ஜனநாயக வழிமுறையின் மூலம் நேபாளத்தில் நிகழ்ந்துள்ள புரட்சியானது 21ம் நூற்றாண்டின் போராடும் இனங்களின் புரட்சிகரப் போராட்ட இயக்கங்களுக்கான ஒரு புதிய பாதையாகக் கைக்கொள்ள முடியுமா என்ற கேள்விகளும் எழுகிறது. 25 வருடங்கட்கும் மேலாகத் தீர்வுக்கான எந்தவொரு வழிமுறை



யையும் எட்டாமல் முடிவுகளற்றுத் தொடரும் இலங்கை இனப் பிரச்சினையின் தீர்வுக்கான வழிமுறைகளையும் பாதையையும் வேண்டி நிற்கும் மக்களுக்கு நேபாளத்தில் மாஓ வாதிகளின் சாதனைகள் நல்ல பல படிப்பினைகளைத் தரமுடியும்.

இலங்கையையும் நேபாளத்தையும் ஒப்பு நோக்கும் போது, இனக் குழும, சாதிய அடிப்படையில் நேபாளம் சிக்கல்களைக் கொண்டது. மறுபுறம் அரசியல் பல்வயமை என்ற வகையில் இலங்கை சிக்கல்களைக் கொண்டது. இரு நாடுகளிலும் 2001 முதல் 2006 வரையான காலத்திற் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றிருக்கின்றன. நேபாளத்தில் 2001ம் ஆண்டும் 2003ம் ஆண்டும் நடைபெற்றுத் தோல்வியடைந்த பேச்சுவார்த்தைகளும் 2006 இல் வெற்றி பெற்ற பேச்சுவார்த்தையும், இலங்கையில் 2002 முதல் 2006 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற 5வது ஆறு கட்டப் பேச்சுவார்த்தைகளும் அவற்றுள் அடங்கும். இலங்கையின் 5வது சமாதானப் பேச்சுவார்த்தையின் தோல்வியானது இன்னொரு கொடூரமான யுத்தத்துக்கும் மக்கள் அவலத்துக்கும் நாட்டைக் கொண்டு சென்றுள்ளது. நேபாளப் பேச்சுவார்த்தைகள் இறுதியில் புதியதொரு அரசியல் மாற்றத்தை நோக்கி நேபாளத்தை நகர்த்தியுள்ளன.

நேபாளத்தில் 10 ஆண்டுகால மக்கள் போராட்டத்தின் விளைவாக உருவாக்கப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைச் சூழ லும் அதன் விளைவாக உருவான சமாதான உடன்படிக்கையும் இலங்கையின் சமாதான செயற்பாட்டுடன் ஒப்பிடும் போது ஒரு படி மேலானவை. அந்நிய சக்திகளின் பிராந்திய நலன்களும் இவ்விரு நாடுகளிலும் வெகுவாக ஆதிக்கம் செலுத்துகின்றன. குறிப்பாக அண்டை நாடு என்ற வகையில் இந்தியாவும் உலகப் பொலிஸ்காரனாக அமெரிக்காவும் தங்கள் நலன்கள் பேணப்பட வேண்டிய சூழலை உருவாக்க முயலும் வேளையிலேயே இரு பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றன என்பதும் கவனிக்க முக்கியமானவை.

### பேச்சுவார்த்தைக்குக் காரணமான சூழல்

இருநாடுகளிலும் பேச்சுவார்த்தைகளை நோக்கித் தள்ளிய சூழல் எப்படிப்பட்டது என்று பார்ப்பது பேச்சுவார்த்தைகள் எந்த நோக்கத்தின் அடிப்படையில் நடைபெற்றன என்பதை அறிய உதவியாக இருக்கும். நேபாளத்தில் பேச்சுவார்த்தைக்கான சூழல் 10 ஆண்டுக் கால மக்கள் போராட்டத்தின் விளைவாக உருவானது. குறிப்பாக மே 2002இல் மன்னர் அரசாங்கத்தை தனது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து சர்வாதிகார ஆட்சியை நடாத்தத் தொடங்கிய பின்னர் மன்னராட்சியை ஒழிப்பதற்கான மாஓவாதிகளின் போராட்டம் சரியென்பதை நேபாள மக்கள் உணரத் தொடங்கினர். மன்னருக்கு எதிரான மக்களின் போராட்டங்கள் வலுப்பெற்றதைத் தொடர்ந்து செய்வதற்கு வேறு வகையின்றி நேபாளத்தில் பிரதான ஏழு அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து, ஏழு கட்சிக் கூட்டமைப்பை உருவாக்கி நாட்டில் ஜனநாயகத்தை உருவாக்குவதற்கு உதவுமாறு மாஓவாதிகளைக் கேட்டார்கள்.

ஆனால் இலங்கையில் விடுதலைப் புலிகள் போர்க்களத்தில் கண்ட சில முக்கியமான இராணுவ வெற்றிகளதும் கட்டுநாயக்க விமான நிலைய மீதான தாக்குதலின் விளைவாக நாட்டின் பொருளாதாரத்திற்கு விழுந்த பலத்த அடியினதும் நாட்டின் சீர்குலைந்த பொருளாதார நிலையினதும் பின்னணியில் இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தை மேசையை நோக்கித் தள்ளப்பட்டன. உள்நாட்டு, வெளிநாட்டு அழுத்தங்களின் விளைவாகவும் இரு தரப்புக்கும் ஒரு சிறிய இடைவேளை தேவைப்பட்டதாலுமே இரு தரப்பினரும் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டனர்.

### அரசியல் செயற்பாட்டுக்கான இடத்தை உருவாக்குதல்

நேபாளச் சமாதானப் பேச்சுவார்த்தையில் கவனிக்கத்தக்க இன்னொரு அம்சம் மன்னர் கயனேந்திரா முழு அரசாங்கத்தையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததன் விளைவாக எந்தவொரு அரசியல் கட்சிக்கும் இயங்குவதற்கான சூழலோ அரசியல் இடைவெளியோ இருக்கவில்லை. எல்லா அரசியல் கட்சிகளும் ஓரங்கட்டப்பட்டு எதுவித அரசியல் செயற்பாடுகளும் செய்ய முடியாத வகையில் மன்னர் தனது அதிகாரத்தை பிரயோகித்தார். மாஓவாதிகள் தான் அரசியல் செயற்பாட்டுக்கான சூழலையும் இடத்தையும் உருவாக்கி ஜனநாயகத்துக்கான போராட்டத்திற்காக மக்களை ஒன்று திரட்டினார்கள். இதன் விளைவாக மன்னருக்கு நெருக்கமான மன்னராட்சியை ஆதரிக்கும் கட்சிகள் வேறு வழியின்றி ஒன்று சேர்ந்து செயற்பட ஆரம்பித்தன. ஒருங்கிணைந்த மக்கள் ஐக்கியத்தை உருவாக்கிப் போராடிய மாஓவாதிகளின் செயற்பாடுகள் தான் நேபாளத்தில் ஜனநாயகத்தை மீட்பதற்கான மூல காரணியாக அமைந்தன.

இலங்கையைப் பொறுத்த வரை, பிரதான அரசியற் கட்சிகளின் ஒற்றுமையீனம் ஒவ்வொரு சமாதானப் பேச்சுவார்த்தையின் போதும் மிகப் பெரிய தடைக்கல்லாக உள்ளது. குறுகிய அரசியல் இலாப நோக்கில் இக் கட்சிகள் செயற்படுவது எதிர்பார்க்கக் கூடியதே. இதை இல்லாதொழித்து மக்களை ஐக்கியப்படுத்தி அதன்மூலம் அரசியல் கட்சிகளுக்கு மக்கள் ஐக்கியத்தை தெரியப்படுத்துகிற ஒரு வேலைத்திட்டம் இலங்கையில் இல்லை.



### அமைதிச் செயற்பாட்டில் நெகிழ்வுத் தன்மை

இரு நாடுகளில் சமாதானச் செயற்பாடுகளின் மிகப் பெரிய வேறுபாடு ஏதெனில் மக் களின் பொதுப் பிரச்சினைகளை இனங் கண்டு அதற்கான உழைப்பதற்கும், பிரச்சினைகளுக்கு காரண மான அடிப்படை அம்சங்களை இனங்காண் பதற்கான ஒருங்கி ணைந்த அக்கறையுமே. வெறுமனே குறுகியகாலத் தீர்வுகளைத் தேடாமல் நீண்டகால அடிப்படை அம்சங்களை அணுகுவதன் மூலம் நிரந்தரத் தீர்வுகளை வழி அமைப்பதே மிகவும் முக்கிய மானது. அதைத் தெளிவாக இனங்கண்டு நேபாளத்தில் மாஓவாதி கள் செயற்படுத்தினார்கள். மாஓவாதிகளின் பிரதான முன்நிபந்தனை "மன்னராட்சியை ஒழித்துப் புதிய குடியரசை உருவாக்குவது". ஆனால் மக்கள் நல நோக்கில் பேச்சுவார்த்தைகளின் போது அரசியல் நிர்ணய சபையின் ஊடாக அதைச் செயற்படுத்த அவர்கள் உடன்பட்டார்கள். அதற்காக பிரதான அரசியல் நீரோட்டத்தில் இணைந்து பலகட்சி ஜனநாயக முறையில் செயற்படவும் மாஓவாதிகள் முன் வந்தார்கள். சகல விதமான உரிமைகளுக்கும் அவ் உடன்படிக்கை இடம் அளித்தமையே நேபாள சமாதான உடன்படிக்கையின் மிக முக்கியமான அம்சம் மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் உள்ளடங்கலான சகல இனங்களின் உரிமைகளும் உடன்படிக்கையில் இடம்பெற்றிருந்தன. குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கான உரிமைகளும் பால் சமத்துவத்தைப் பேணுவதற்கான வழிமுறைகளும் அதிற் கவனத்திற் கொள்ளப்பட்டிருந்தன. மொத்தத்தில் மக்கள் நலன் சார் அம்சங்களனைத்தும் உடன்படிக்கையில் உறுதிசெய்யப்பட் டிருந்தன. நீண்டகால மோதற் தவிர்ப்பு வழிமுறையின் ஒரு அம்ச மாகவே இதனைக் கருத முடியும்.

இலங்கைப் பேச்சுவார்த்தைகளைப் பொறுத்தவரை, அவை அதிகாரப் பகிர்வு தொடர்பாகவும் ஆட்புல உரிமை தொடர்பாகவும் இடம் பெற்றனவே ஒழிய, மக்கள் நலன்களில் அக்கறை கொண்டவையாகவோ மக்கள் நலன்களைப் பிரதிபலிப்பனவாகவோ அவை அமையவில்லை.

### உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள்

மிக நீண்ட பேச்சுவார்த்தைகளின் பின் உருவான நேபாள சமாதான உடன்படிக்கையை கண்காணிப்பதற்கு ஐ.நா. விற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இரு தரப்பினரும் சம அளவான ஆயுதங்களை பூட்டி வைப்பதென்றும் இராணுவமும் போராளிகளும் தத்தமது கூடாரங்களில் இருப்பதென்றும் அதனை ஐ.நா. கண்காணிக்கும் என்றும் உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் ஒழுங்காக அமைக்கப்பட்டிருந்தன.

இலங்கையின் ஒவ்வொரு பேச்சுவார்த்தைகளிலும் நிறைவேறாத உறுதிமொழிகளே தோல்வியின் உரைகல்லாக இருந்து வந்துள்ளன. பேச்சுவார்த்தை மேசையில் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதும் அதற்கான வழிமுறைகளைத் தெளிவாக வரையறுக்காமையும் உறுதிமொழிகளை செயற்படுத்தாமல் இருப்பதற்கு வசதியாக அமைந்து விடுகிறது.

### போராட்டத்தில் நிலைத்திருத்தலும் பேச்சுவார்தைகளைத் தொடர்வதும்

நேபாளத்தில் மாஓவாதிகள் 10 ஆண்டு காலப் போராட்டத்தின் விளைவாக மக்களை ஒன்றுதிரட்டி மன்னராட்சிக்கு எதிராகப் போராடினார்கள். அவர்கள் 80% நேபாளத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். சமாதான பேச்சுவார்தைகளுக்குள் நுழையும் போது அனைத்து மக்களினதும் ஆதரவைத் தங்கள் பலமாகக் கொண்டிருந்தார்கள். மக்களின் நலன்களுக்கு எதிராக எதனையும் ஏழு கட்சிக் கூட்டமைப்பு செய்ய முனைந்த போதும், இந்தியா மன்னராட்சியைக்காக்கப் பேச்சுவார்தைகளைக் குழப்ப முயன்றபோதும் மாஓவாதிகளால் மக்கள் போராட்டத்திற்கு மீளக்கூடிய வழிமுறை கைவசம் இருந்தது. உடன்படிக்கையில் ஏற்கப்பட்டபடி பாராளமன்றத்தில் மன்னராட்சியை ஒழிப்பதற்கான சட்டமூலத்தை ஏழு கட்சி கூட்டமைப்பு நிறைவேற்றத் தவறியதையும் விகிதாசாரத் தேர்தல் முறையை அறிமுகப்படுத்தாமையையும் காரணம் காட்டி மாஓவாதிகள் இடைக்கால அரசாங்கத்திலிருந்து விலகினார்கள். கோரிக்கைகளை உடன்பட்டபடி நிறைவேற்றக் கோரி மக்கள் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தார்கள். தொடர்ச்சியான மக்கள் போராட்டத்தின் விளைவாகப் பாராளமன்றம் விகிதாசாரத் தேர்தல் முறையை அறிமுகப்படுத்தியதுடன் அரசியல் நிர்ணய சபை மூலம் மன்னராட்சியை ஒழிப்பதற்கான சட்டமூலத்தையும் நிறைவேற்றியது.

நேபாள மாஓவாதிகள் மக்கள் ஐக்கியத்தின் ஊடாகப் போராட்டத்தை முன்னெடுத்தன் விளைவால் பேச்சு மேசையில் மக்களுக்கு வேண்டியதைப் பெற்றுக் கொள்ளக் கூடிய பலமான நிலையில் இருந்தார்கள். இது நாம் கற்றுக் கொள்ள வேண்டிய மிக முக்கிய பாடம். மக்கள் ஐக்கியத்தை கட்டியெழுப்புவதன் ஊடாகவே உரிமைகளை வென்றெடுக்க முடியும். இதை நேபாள மாஓவாதிகள் நிரூபித்திருக்கிறார்கள். கொசோவோவை உதாரணமாகக் கொண்டு பிறரின் தயவிலே பெறும் சுதந்திரம் மக்களுக்கான விடுதலையாக இராது. அது இன்னொரு அடிமை வாழ்கைக்கு வழி அமைப்பதாகவே இருக்க முடியும். விடுதலை என்பது போராடிப் பெறுவது. இரந்து கேட்கும் பிச்சையல்ல.

— ஏகலைவா

# மலையக சமூக அசைவியக்கத்தில் ஆசிரியர்கள்

புதிய மலையகம் மகேந்திரன்

சமூக அடக்குமுறைகளுக்கும், இனவொடுக்கலுக்கும், பொருளாதார உழைப்புச் சுரண்டலுக்கும் உட்படுத்தப்படுகின்ற ஓர் சமூகம் விடுதலை பாதையில் அடியெடுத்து வைக்க வேண்டுமானால் அது தனது சமூக அரசியல் பண்பாட்டு கலாச்சார விழுமியங்கள் பற்றியதான சரியான புரிதலையும் கொண்டிருக்க வேண்டும். அதனை சீர்படுத்தி முன்னெடுப்பதற்குரிய அரசியல் இயக்க தளத்தையும் உரியவாறு அடையாளம் காண வேண்டும். அதேவேளை தன் மீது பிரயோகிக்கப்படும் அடக்குமுறைகளுக்கெதிராகப் போராடவல்ல வெகுஜன அணிதிரட்டலை நோக்கிய செயற்பாட்டையும் பெறுவது அவசியமானதாக அமைகிறது. அந்தவகையில் சமூகத்தின் புரிதலுக்கானதும், மாற்று அரசியல் பண்பாட்டு கலாச்சார தேவைகள் பற்றியதுமான அறிவூட்டல் என்பது முதன்மை பெறுகின்றது. எனவே குறித்த சமூகத்தின் அசைவியக்கத்தில் உந்து தலை ஏற்படுத்தவல்ல ஆற்றலையும் சமூக கடமைப்பாட்டையும் கொண்டிருக்க கூடிய ஆசிரியர் சமூகத்தின் சமூகப் பாத்திரமானது இன்றியமையாத ஒன்றாக அமைகிறது.

எனவே இரு நூறு வருடகால துன்பியல் வரலாற்று பயணத்தில் இந்த நாட்டில் ஓர் தேசிய இனத்திற்குரிய பண்புக் கூறுகளோடு எழுந்து நிற்கும் மலையக மக்கள் தங்களுக்கு எதிராக எண்ணற்ற அடக்குமுறைகளுக்கும், அரசியல், பண்பாட்டு, கலாச்சார சிதைப்புகளுக்கும், இன அழிப்பு வன்முறைகளுக்கும், இருப்புக்கெதிரான கோர ஆக்கிரமிப்புகளுக்கும் முகம் கொடுத்தே வந்திருக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் இவர்கள் மத்தியில் இருந்து கல்வி ரீதியாக மேனிலையடைந்து வரும் ஓர் சமூக அலகு தோற்றம் பெற்று வளர்வது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றே. ஆனால் அழுத்தங்களையும், சவால்களையும் எதிர் கொள்கின்ற ஓர் சமூகத்தின் விடுதலைக்கான தேவையினை இன்றைய முதலாளித்துவம் வழங்கும் கல்வி வளர்ச்சியினால் மட்டுமே நிறைவு செய்து கொள்ள முடியுமா என்ற கேள்வி இருக்கவே செய்கிறது. எனவே இன்று அரச தொழிற்துறை என்றவகையில் மலையகத்தின் பெரும்பாலான படித்தவர்கள் உள்வாங்கப்படும் தொழிற்துறையாக ஆசிரியர் தொழில் விளங்குவது குறிப்பிடத்தக்கது. எனவே ஆளுகையின் மிக மோசமான அழுத்தங்களுக்கும், அடக்குமுறைகளுக்கும் எதிரான போராட்டத்திற்கும், எழுச்சிக்கும் அச்சமூகத்தின உறுப்பினர்கள் என்றவகையிலும் அறிவூட்டல் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற சமூகத்திற்கு வழி காட்டவல்ல ஆசிரியர்களின் சமூகக் கடமைப்பாடு முதன்மை வகிக்கிறது. எனவே வர்க்க - இன விடுதலையை வேண்டி நிற்கும் சமூகம் என்ற வகையில் மலையக ஆசிரியர்களின் சமூகவியற் பாத்திரம் பற்றி பேசுவது காலத்தின் தேவையாகும்.

அண்மைக் காலமாக மலையக ஆசிரியர்கள் பற்றி அதிகமாகப் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகின்றது. ஆனால் இவை அனைத்தும் ஆசிரியர்களின் தொழில் வாண்மை, தொழில் முரண்பாடுகள், பதவி வழிப்பிரச்சனைகள் என்ற வரையறைக்குள்ளேயே அடக்கப்பட்டு விடுகின்றன. ஆனால் அதற்கும் அப்பால் மலையக மக்களின் வாழ்வாதாரப் போராட்டத்தில் அரசியல், பண்பாட்டு விடுதலைக்கான போராட்டத்தில் ஆசிரியர்கள் வகிக்க கூடிய பங்கு என்ன? ஒரு சமூகத்தின் ஆளுமை விருத்தியில் புதிய பண்பாட்டுக்கான தேடலில், இருப்புக்கான எழுச்சியில் ஒரு ஆசிரியர் புரியக் கூடிய சமூக கடமைப்பாடு மலையக ஆசிரியர்களால் ஈடு செய்யப்படுகின்றதா? என்ற கேள்விகளோடு சில விடயங்களை நோக்குவது பொருத்தபாடுடையதாக அமையும்.

## மலையகத்தில் படித்தவர்கள்

பொதுவாக மலையகத்தில் கல்வி கற்ற ஒரு பிரிவினர் வளர்ச்சிப் பெற்று வருவது கவனயீர்ப்பைப் பெறும் விடயமாகும். மலையகத்தின் கல்வி வளர்ச்சி பற்றிய விவாதங்கள் இடம் பெறுகின்றன. புத்திஜீவிகள் எனத் தங்களை அழைத்துக் கொள்ளும் மேல் வர்க்க நலன் சார்ந்த அறிவுஜீவிகள் கூறுவது போல கல்வி வளர்ச்சி மட்டுமே ஒரு சமூகத்தின் விடுதலையைச் சாத்திய மாக்கி விடுமா என்ற கேள்வியோடு மலையக படித்தவர்களின் சமூக செயற்

**இன்று மலையகத்தில் கல்வி கற்றவர்கள் என அடையாளப்படுத்தப்படுவர்கள் ஏகாதிபத்திய மேலாதிக்க உலகமயமாதல் காட்டும் மாயையான மேனிலையாக்கம் பற்றிய சிந்தனைகளால் சடுதியாக உள்வாங்கப்பட்டு வருகிறார்கள்.**

பாடுகள் பற்றி ஆழமானதோர் ஆய்வினை மேற்கொள்ள முடியும். ஆனால் இங்கு சுருக்கமான சில குறிப்புகளை மட்டுமே குறித்து சொல்வது பொருத்தமாக அமையும். இன்று மலையகத்தில் கல்வி கற்றவர்கள் என அடையாளப்படுத்தப்படுவர்கள் ஏகாதிபத்திய மேலாதிக்க உலகமயமாதல் காட்டும் மாயையான மேனிலையாக்கம் பற்றிய சிந்தனைகளால் சடுதியாக உள்வாங்கப்பட்டு வருகிறார்கள்.

இம்மக்கள் எதிர் கொள்ளும் எல்லா விதமான சமூக அழுத்தங்களுக்கும் உட்படுத்தப்படுகின்றவர்களாக இருக்கின்ற போதிலும் தோட்டத் தொழில் துறைக்கு மாற்றீடான வேறு தொழில் சார்ந்து கிடைக்கக்கூடிய பொருளாதார விருத்தி, சமூகமாற்றம் என்பனவற்றைப் பெற்றுக் கொள்வதன் மூலம் தாங்கள் சுதந்திரமாக வாழ்வதாகக் கற்பனைக் கோலத்தை உருவாக்கிக் கொள்கிறார்கள். தான் தன் குடும்பம் அதன் வளர்ச்சி என்ற வட்டத்திற்குள் தங்களின் சிந்தனை செயற்பாடுகளை சுருக்கிக் கொண்டும், தங்களின் சமூக கட்டுமானத்தை மலையக மக்களுக்கே உரித்தான வாழ்வியல் பண்பாட்டு கலாச்சார அம்சங்களிலிருந்து தவிர்த்து மாறுபாடான வாழ்வியல் அடிப்படைகளை வரித்துக் கொள்ள எத்தனிப்பவர்களாகவே காணப்படுகின்றனர். அத்தோடு சுயநலம் பிற்போக்கு சிந்தனை, மேலைத்தேய நாகரிக மோகம், சமூக பிறழ்வு நடைமுறைகள் என்பவற்றை மிக வேகமாகவும் இறுக்கமாகவும் கடைப்பிடிப்பவர்களாகவும் மலையகத்தின் படித்த பிரிவினர் காணப்படுகின்றார்கள். புதிய சிந்தனை வளர்ச்சிக்கும் சமூக சீரழிவுகள் ஆக்கிரமிப்புகளுக்கெதிரான போராட்டங்களுக்கு தலைமைப்பாத்திரம் வகிக்கக் கூடியவர்கள் ஒரு சமூகத்தின் கல்வி அறிவு பெற்றவர்களே என்ற போதிலும் பெரும்பாலான மலையகம்சார் படித்தவர்கள் சமூகச் அக்கறை அற்றவர்களாகவும் சமூக சீரழிவுகளுக்கும் அந்நிய பண்பாட்டு ஆக்கிரமிப்புகளுக்கும் துணைபோகிறவர்களாகவும் பிற்போக்குத் தலைமைகளுக்கு துதிபாடித் திரிபவர்களாகவுமே இருந்து வருகிறார்கள்.

## மலையக ஆசிரியர்கள்

இன்று தொழில் ரீதியான தனியொரு சமூக அலகாக வளர்ச்சி பெற்று வரும் மலையக ஆசிரியர் சமூகம் மலையக மக்களின் நேரடி வாரிசுகளாக விளங்குகின்றனர். அதேவேளை அடக்கப்படுகின்ற சமூகத்தின் தேசிய இன கருத்துருவாக்கத்தை வளப்படுத்துவதிலும் பண்பாட்டு மீள் கட்டுமானத்திற்கான அடிதளத்தை இடுவதற்குமான பொறுப்பும் சமூக கடமையும் கொண்ட சமூக பாத்திரம் அவர்களுக்குரியதாகும். அத்தகைய ஒரு சமூகக் கடமையை நிறைவு செய்யும் ஆற்றலை மலையக ஆசிரியர்கள் பெற்றிருக்கிறார்களா? தங்களை வளப்படுத்திய தொழிலாளர் வர்க்க சிந்தனையின் பால தமக்கு இருக்க கூடியதான சமூகப் பொறுப்பை இவ் ஆசிரிய சமூகம் சரியாக உணர்ந்து நிற்கிறதா? இம்மக்களின் வாழ்வாதாரப் போராட்டங்களின் தள பாத்திரத்தை ஈடுசெய்கிறதா? வலிந்து திணிக்கப்படும் மேலைத்தேய நுகர்வு கலாச்சார சீரழிவுகளை தடுப்பதிலும் சமூக ஆளுமைகளை வளர்ப்பதற்காக

**மொத்தத்தில் இன்றைய மலையக ஆசிரிய சமூகம் இம்மக்களின் சமூகப் பொருளாதார பண்பாட்டு அரசியல் விடுதலைக்கான தனது கடமையை ஈடுசெய்யும் ஆற்றலையும் சிந்தனைத் தளத்தையும் வளர்த்துக் கொண்டுள்ளதா?**

இச் சமூகம் வேண்டி நிற்கும் புதிய பண்பாட்டு உருவாக்கத்திற்கான தேவையினை உணர்ந்து செயலாற்றவல்ல தகுதியினை பெற்றுள்ளதா? வர்க்க குணாம்சமும் போர்க் குணமும் மிகுந்த இவர்களின் கலை கலாச்சார இலக்கிய தளத்தை சீர்படுத்தி முன்னெடுப்பதற்கான தம்பங்கினை உணர்ந்து செயலாற்றுகின்றதா? ஏகாதிபத்திய உலகமயமாக்கல் உட்புகுத்தும் இந்த ஏட்டுக் கல்வியினால் அன்றி மானுட விடுதலைக்கான சமூக பண்பாட்டு அறிவியல் சார் கல்வி செயற்பட்டினை முன்னெடுக்க வேண்டிய தேவைப்பாட்டினையும் அதனால் முன்னெடுக்கும் ஆற்றலையும் பெற்றுள்ளதா. மொத்தத்தில் இன்றைய மலையக ஆசிரிசிரியர் சமூகம் இம்மக்களின் சமூகப் பொருளாதார பண்பாட்டு அரசியல் விடுதலைக்கான தமது கடமையை ஈடுசெய்யும் ஆற்றலையும் சிந்தனைத் தளத்தையும் வளர்த்துக் கொண்டுள்ளதா? இத்தகைய கேள்விகளோடு சில விடயங்களை நோக்குவது பொருத்தமுடையதாக அமையும்.

## மலையக மக்களின் பண்பாட்டு தளத்தில் ஆசிரியர்கள்

மலையக மக்களின் பண்பாட்டு கலாச்சார அம்சமானது தமிழர் பண்பாடு எனப் போற்றப்படும் மேட்டுக்குடி இந்துத்துவ கலாச்சாரப் பண்புகளில் இருந்து மாறுபட்ட தொழிலாளர் வர்க்க குணாம்சம் பொதிந்த உழைக்கும் மக்களுக்கே உரித்தான போர்க்குணம், கூட்டுழைப்பு, கூட்டு வாழ்க்கை, தனித்துவமான மொழி, பிரதேச வழக்காறு இயற்கை வளங்கள் மீதான பற்றுதி மண்வாசனை என்பவற்றை பிரதிபலிக்கும் பண்புக் கூறுகளை தன்னகத்தே கொண்டவை. எனினும் இதற்குள் புதையுண்டு போயிருக்கும் பிற்போக்கு கருத்தியல், சிந்தனைகள் களையப்பட்டு மானுட விடுதலைகான பண்பாடாக கட்டி வளர்க்கப்பட வேண்டிய அவசியமும் இதற்கு உண்டு. ஆனால் இன்று மேற்கத்தேய பிற்போக்கு நசிவு கலாசசார குப்பைகள் பல வழிகளிலும் திணிக்கப்பட்டும், இந்திய சினிமா கழிசடைத் தனமிக்க தொலைகாட்சி தொடர்களின் ஆக்கிரமிப்புகளும் மேலோங்கி வருகின்றன. அதனால் இம்மக்களின் ஒட்டு மொத்த வாழ்வியல் பண்பாடு, வர்க்கக் குணாம்சம் போர்க்குணம் அனைத்தும் சிதைக்கப்பட்டு உதிரிப் பண்பாட்டு சூழல் மேலெழுந்து வரும் அபாயத்தினை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. எனவே இங்கு சீரழிவுகளிலிருந்தும் ஊடுருவல்களிலிருந்தும் இம்மக்களுக்கான வாழ்வியல் பண்பாட்டு மீள் உருவாக்கத்தில் மலையக ஆசியரியர்கள் வகிக்க

**பொதுவாகவே இன்றைய மலையக ஆசிரியர்களிடம் மலையக மக்களின் பண்பாட்டு கலாச்சாரம் பற்றியதான புரிதல் ஏன் ஒரு சமூக இயக்கத்தில் கலாச்சார பண்பாட்டின் தேவைப்பற்றிய தான குறைந்தபட்ச உணர்வு கூட இல்லாத ஓர் சூழ்நிலையே காணப்படுகின்றது.**

கூடிய பங்கு என்ன? இதனை நோக்குமிடத்து மலையக ஆசிரியர் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பாலானவர்கள் இந்த தொழில் தரக்கூடிய பொருளாதார சமூக அந்தஸ்தோடு இம் மக்களுடனான வாழ்வாதார பிணைப்பில் இருந்து விடுபட்டு தங்களை தனியான உயர்ந்த அந்தஸ்துமிக்க பாத்திரமாகப் பிரதிபலித்துக் கொள்வதிலேயே மிகுந்த அக்கறை காட்டி வருகிறார்கள். பலர் இம்மக்களின் பண்பாட்டு கலாச்சார வாழ்வியல் சூழலை நிராகரித்து மேற்கத்தேய உலகமயமாதல் காண்பிக்கும் நுகர்வு கலாசாரத்தினால் ஈர்க்கப்பட்டு தனி மனித ஈடேற்றத்திற்கான பொருளாதாரத் தேடலே முழு வாழ்வுக்குமான விமோசனம் என்ற பக்கம் சார்ந்து கொள்கிறார்கள். அதற்காக முழு நேரமும் பணத்திற்கு பின்னால் ஓயாது ஓடிக்கொண்டிருப்பவர்களாக இருக்கிறார்கள். எனவே இவர்களின் கற்பித்தல் செயற்பாடுகளும் கூட முதலாளித்துவ கல்வி சிந்தனை வழங்கும் தனிமனித வளர்ச்சிக்கான கருத்தியலை அப்படியே பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் சமூக விடுதலை பற்றியோ, தன் வாழ்வியல் சூழல் எதிர்கொள்ளும் பண்பாட்டுக் கலாசார சீரழிவுகள் பற்றியதான அறிவியற் தேடலையோ மறுத்து ஏட்டுக்கல்வி வழி விமோசனம் என்ற சிந்தனையைத் திணிப்பதாகவே அமைந்து விடுகின்றது. ஒரு சில ஆசிரியர்கள் மலையக மக்களின் வாழ்வியல் பண்பாட்டை பராமரிப்பதற்குரிய செயற்பாடுகளை முன்னெடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்ற போதும் அவை மலையக மக்களின் பண்பாட்டு விடுதலைக்கான தேவையை ஈடுசெய்ய கூடிய அளவு விரிந்த பார்வைத்தளத்தை கொண்டிராததோடு விஞ்ஞான மயப்படுத்தப்பட்ட விசாலித்த முதலாளித் துவ பண்பாட்டு ஆக்கிரமிப்புகளுக்கு ஈடுகொடுக்கும் சக்தியற்றதாகவே காணப்படுகின்றது.

பொதுவாகவே இன்றைய மலையக ஆசிரியர்களிடம் மலையக மக்களின் பண்பாட்டு கலாச்சாரம் பற்றியதான புரிதல் சமூக இயக்கத்தில் கலாச்சார பண்பாட்டின் தேவைபபற்றிய தான குறைந்தபட்ச உணர்வு கூட இல்லாத ஓர் சூழ்நிலையே காணப்படுகின்றது. இது ஏன மலையக மக்களை பொறுத்தவரை அவர்களின் பாரம்பரிய கலைகள், மொழி, பழக்கவழக்கம், கூட்டுழைப்பு வாழ்க்கை முறை, கொண்டாட்டங்கள், நாட்டாரியற் அம்சங்கள் அடிப்படையானவையாகும். ஆனால் இன்றைய இலத்திரனியல் ஊடக ஆக்கிரமிப்பு விதைக்கும் நவீன நச்சுக் கலாச்சார மோகம் முதலாளித்துவ கல்வியின் தனி மனிதவாத சிந்தனை, N. G. O களின சீரழிவு, புதிய தொழில் துறைகளுடாக ஏறபடும் வேறுப்பட்ட பண்பாட்டு சூழல் போன்ற சவால்களை எதிர் கொள்ள வேண்டியே உள்ளது. அதனால் இம்மக்களின் இருப்பையும் எதிர் காலத்தையும் ஸ்திரப்படுத்திக் கொள்ளும் சமூக விடுதலைப் போராட்டத் திறகு உந்துதல் அளிக்கக்கூடிய புதிய பண்பாட்டுத் உருவாக்கம் மிக அவசிய மானதாக இருக்கிறது. எனவே பதிய பண்பாட்டு தளத்தை கட்டி வளர்பதற்கான கடமைப்பாட்டிறகுரியவர்கள் ஆசியரியர்களே. ஆனால் மலையக ஆசிரியர்களிடையே இது பற்றியதான புரிதல் எந்தளவுக்கு உள்ளது என்பது தான் மிகப் பெரிய கேள்வியாக உள்ளது.

வளரும்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# ஜே.வி.பி யின் பிறப்பு இருப்பு இறப்பு

ஜே.வி.பி யின் பிறப்பு, இருப்பு, இறப்பு என்ற தலைப்பிலான பேராசிரியர் சுச்சரித்த கம்லத்தின் சிங்கள நூல் மே மாதம் 14 ஆம் திகதி கொழும்பு ஜயவர்த்தன கலாசார நிலையத்தில் வெளியிடப்பட்டது. அதனை 'மாற்று சம்பாஷனை தொடை' என்ற அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. பேராசிரியர் 15 வருடங்களுக்கு முன்பு ஜே.வி.பி பற்றி எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாகவே இந்நூல் வெளியாகியுள்ளது. இந்நூல் வெளியிடப்பட்ட அதே நேரத்திலேயே ஜே.வி.பி யின் முக்கிய தலைவர்களாக விருந்த நந்தன குணதிலக்க, விமலவீரவன்ச ஆகியோரின் ஏற்பாட்டில் தேசிய சுதந்திர முன்னணி எனும் கட்சி அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

பேராசிரியர் கம்லத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகவும், சிங்கள பேரினவாதத்திற்கு எதிராகவும் போராடிவருகின்ற முக்கிய இடதுசாரியாவார். அதன் காரணமாக உயிர் அச்சுறுத்தல்களுக்கும் முகம் கொடுத்துவரும் அவர் மிகவும் துணிவான டிரொஸ்கிய வாதி. அவர் ஏற்றுக் கொண்ட டிரொஸ்கியவாத நிலைப்பாட்டிலேயே ஜே.வி.பி பற்றிய இந்நூலை எழுதியுள்ளார்.

இந்நூல் பற்றி விமர்சன உரையை ஆற்றிய காமினி வியங்கொட ஜே.வி.பி மாக்சிய இயக்கமே அல்ல என்றாலும் அது மாக்சிய இயக்கமா என்று கேள்வி எழுப்பி கட்டுரைகளை எழுதி தர்க்கப்பூர்வமாக மாக்சிய இயக்கமல்ல என்று கம்லத் நிரூபித்துள்ளார் என்று குறிப்பிட்டார். அத்துடன் பாரம்பரிய இடதுசாரி கட்சிகள் இலங்கையின் விவசாயிகள் சிறு முதலாளிகள், இளைஞர்களை பிரதிநிதித்துவப் படுத்தாத படியாலேயே ஜே.வி.பி அந்த இடத்தை எடுத்துக் கொண்டது என்றும் குறிப்பிட்டார்.

அதாவது இலங்கை இடதுசாரிகளின் வேலைத்திட்டத்தில் அவர்களின் பிரச்சினைகள் பற்றி கவனம் செலுத்தப்படாமையால் மாக்சியத்தை உச்சரித்துக் கொண்டே சிங்கள மக்களிடையே இருக்கும் சிறுமுதலாளிகள், விவசாயிகள், இளைஞர்களை அணிதிரட்ட பேரினவாத நிலைப்பாட்டுடன் ஜே.வி.பி இயங்குவதாகவும் தெரிவித்தார்.

ஜே.வி.பி மாக்சிய இயக்கமாகப் பாசாங்கு பண்ணும்வரை அது மாக்சிய இயக்கமில்லை என்பதை தொடர்ந்து அம்பலப்படுத்த வேண்டியதுடன் அதன் பிடியில் இருக்கும் சிங்கள விவசாயிகள், சிறுமுதலாளிகள், இளைஞர்களை வென்றெடுக்க மாற்று இடதுசாரி இயக்கமொன்றை கட்டுவதற்கு கவனம் எடுக்க வேண்டும். ஜே.வி.பி திருந்த வேண்டுமெனில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும் அதற்கான போராட்டத்தையும் அங்கீகரித்து யுத்தத்தை எதிர்க்க வேண்டும். சிங்கள தேசியவாதம் என்ற பெயரில் பேரினவாதத்தை முன்னெடுப்பதை கைவிட வேண்டும். தொழிலாளர் வர்க்கத் தலைமையில் கரண்டப்படும் ஏனைய வர்க்கங்களும் மற்றும் அடக்கப்படும் சகல மக்களும் அணிதிரட்டப்பட வேண்டும். அப்போது இலங்கையிலே சோஷலிசப்புரட்சி ஏற்பட முடியுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்நூல் பற்றி பேராசிரியர் டெரன்ஸ் புரசிங்ஹ உரையாற்றும் போது ஜே.வி.பி க்கும் இந்நாட்டு இளைஞர்களுக்கும் எதிராக 1971 லும் 1988 லும் அரச பயங்கரவாதம் கொடூரம் புரிந்த போதும் கூட ஜே.வி.பி முற்றாக அழிந்துவிடவில்லை. அதன் இருப்பை பாதுகாக்கும் சமூக சக்திகளும் அதனுடைய தேவைகளும் இருக்கும் வரை ஜே.வி.பி இருந்து கொண்டே இருக்கும். அந்த சமூக சக்திகளை வென்றெடுத்து அவற்றின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் வகையில் தொழிலாளர் வர்க்க இயக்கம் பலமாக கட்டப்படும் வரை ஜே.வி.பியின் இருப்பிற்கு பாதிப்பு ஏற்படாது என்றார் அவர் மேலும் தெரிவித்ததாவது.

வடக்கில் தமிழ் இளைஞர்கள் சக்திக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தலைமை கொடுப்பது போன்று தெற்கில் ஜே.வி.பி சிங்கள இளைஞர்களுக்கு தலைமை கொடுக்கிறது. இந்த இரண்டு இளைஞர் சக்திகளையும் கருத்திற் கொண்டு மாற்று வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை நிபந்தனையற்றவகையில் சிங்கள மக்கள் ஆதரிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

தேசிய இனப்பிரச்சினையில் தென்னிலங்கை இடதுசாரி சக்திகளின் பொது ஒழுங்கும் ஜே.வி.பி யும் என்ற தலைப்பில் உரையாற்றிய புதிய- ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் இ. தம்பையா குறிப்பிட்டதாவது.

ஜே.வி.பி யின் தோற்றம் பேரினவாத மேலாதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். தோழர் சண்முகதாசன் தலைமையிலான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து றோகண விஜேவீர விலக்கப்பட்டதற்கு காரணம் அவர் இனவாத நிலைப்பாட்டை எடுத்தமையே ஆகும்.

தமிழ் மக்களுக்கு அதிகாரப்பரவலாக்கலை செய்யும் நோக்குடன் அன்றைய பிரதமர் டட்லி சேனநாயக்காவிற்கும் தமிழரசுக் கட்சியின் தலைவர் செல்வநாயகத்திற்குமிடையில் காணப்பட்ட உடன்பாட்டை எதிர்த்து 1966- ஜனவரி 8 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஸ்ரீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சி லங்கா சமசமாஜக் கட்சி உட்பட இடதுசாரி தொழிற்சங்கங்கள் என்பவற்றினதும் கூட்டு ஊர்வலத்திற்கும் கூட்டத்திற்கும் ரோஹண விஜேவீர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவிற்கு மாறாக ஆதரவளித்துள்ளார். அவ்வூர்வலமும் கூட்டமும் இனவாத அடிப்படையிலானது என்பதால் அதில் பங்கெடுப்பதில்லை என்று கட்சியும் இ.தொ.ச. சம்மேளனமும் தீர்மானித்திருந்த போதும் அதற்கு மாறாக அவ்வூர்வலத்தையும் கூட்டத்தையும் ஆதரிக்கும் துண்டுப் பிரசுரங்களை ரோஹன விஜேவீர வேறு சிலருடன் சேர்ந்து கட்சியின் அச்சகத்தில் கட்சிக்கு தெரியாமல் அடித்துள்ளார் என்பது தெரியவந்தது. அப்பிரசுரங்களை விநியோகிக்க விடாமல் கட்சியின் தலைவர்கள் தடுத்து அதனை எதிர்த்துள்ளனர். அப்போது கட்சியின் பொதுச் செயலாளர் சண்முகதாசனும் இன்னும் சில தலைமைத்தோழர்களும் அல்பேனிய தொழிற் கட்சியின் அழைப்பை ஏற்று அல்பேனியாவுக்கு சென்றிருந்தனர். அத்துடன் வடக்கு கிழக்கில் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கும் விஷேட ஏற்பாட்டு சட்டத்தையும் ரோஹண விஜேவீர அன்றே எதிர்த்தார்.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களின் காரணமாகவே ரோஹண விஜேவீர கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.

அவர் அக்கட்சியில் இருந்தபோதும் கட்சிக்கு தெரியாமல் தென்னிலங்கையில் இளைஞர்களை கொண்ட மறைமுக அமைப்பை கட்டுவதில் ஈடுபட்டிருந்தார். அவர் சோவியத் யூனியனுக்கு எதிராக செயற்பட்டதால் அவர் படித்துக் கொண்டிருந்த லுமும்பா பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டதாக கூறப்பட்டாலும் அவர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் ஊடுருவி அதனை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவரும் சதி வேலைகளிலேயே ஈடுபட்டிருந்தார். அதற்காகவே அவர் இலங்கைக்கு அனுப்பப்பட்டார் என்றும் நம்பப்பட்டது.




அவர் இளைஞர் மாநாட்டில் போட்டியிட்டு மத்திய குழுவிற்கு செல்ல முற்பட்ட போதும் அவர் தெரிவு செய்யப்படாது தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் தெரிவு செய்யப்பட்டார். அத்தோல்வியை ஏற்க முடியாத ரோஹன விஜேவீர இப்படிப்பட்ட தமிழர் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியால் பெரும்பான்மையாக சிங்கள மக்கள் வாழும் இலங்கையில் புரட்சி ஏற்பட முடியாது என்று இன வாதம் கூறி வந்துள்ளார்.

ஜே.வி.பி யின் முதலாவது 1971 கிளர்ச்சிக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட ஐந்து வகுப்புகளில் ஒன்று இந்திய விஸ்தரிப்பு வாதத்திற்கு எதிர் என்ற போர்வையில் மலையகத் தமிழ் தோட்டத் தொழிலாளர்களையும் இந்திய சிறுவர்த்தகர்களையும் ஜே.வி.பி எதிரிகளாகக் கொண்டது.

1988 இல் அதன் இரண்டாவது கிளர்ச்சியின் போது இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கைக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டே நடத்தப்பட்டது. அவ்வொப்பந்தத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட மாகாணசபை திட்டத்தையும் ஜே.வி.பி எதிர்த்தது. அதேபோன்று 2002இல் பிரதமர் ரணில் விடுதலைப்புலிகளுடன் செய்த யுத்தநிறுத்த ஒப்பந்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பவற்றுக்கும் நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளுக்கு எதிராகவும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தே ஜே.வி.பி சிங்கள மக்கள் மத்தியில் அதன் வாக்கு வங்கியைப் பலப்படுத்தியது.

## அது ஒரு மாக்சிய இயக்கம் அல்ல. சிறு முதலாளிய பேரினவாத இயக்கமாகும்.

தேசிய இனப்பிரச்சினைக்கு எவ்விதமான அரசியல் தீர்வு காண்பதையும் எதிர்த்தது. அத்துடன் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற பெயரில் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு எதிராக இராணுவ தீர்வை வலியுறுத்தியே ஜே.வி.பி சிங்கள மக்கள் மத்தியில வேலை செய்தது. இன்றைய மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளுக்கு கருத்தியல் பலத்தை ஜே.வி.பியே கொடுத்தது எனலாம். அல்லி மலர் இயக்கம் என்றொன்றை ஆரம்பித்து அரசாங்க இராணுவத்தின் போர் மனோநிலையை வளர்க்கப் பாடுபட்டது. (பிரிட்டிஷாருக்கு எதிராக அவர்களின் பொப்பி மலர் இயக்கத்திற்கு மாறாக முப்பதுகளில் சூரியமலர் இயக்கத்தை இடதுசாரிகள் கட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது) பாரம்பரிய இடதுசாரி கட்சிகள் முதலாளித்துவ பாராளுமன்ற அரசியலில் மூழ்கிவிட்டதாகவும் தாங்கள் இரண்டு பெரிய முதலாளித்துவ கட்சிகளுக்கும் மாற்று என கூறிவந்த ஜே.வி.பி யினர் பாரம்பரிய இடதுசாரிகள் போன்று மிக விரைவாகவே பாராளுமன்ற சகதிக்குள் மூழ்கிவிட்டனர். முற்று முழுவதுமான பேரினவாதத்திற்குள் மூழ்கிவிட்டனர். அவர்களின் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போரைத் தூண்டுவதில் முன்னின்றது. பாரம்பரிய இடதுசாரிகள் இன்னும் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தேவை என்று உச்சரிப்பதுடன் அதிகாரப்பரவல் அதிகாரப்பங்கீடு என்பன பற்றியெல்லாம் பேசுகின்றனர். ஜே.வி.பி யின் அரசியலானது அவற்றுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டே கட்டி வளர்க்கப்பட்டுள்ளது. சிங்கள (தேசியவாதம் என்று கூறப்பட்ட போதும்) பேரினவாதத்தை அடிப்படையாகக் கொண்டே ஜே.வி.பி தோற்றுவிக்கப்பட்டு கட்டிவளர்க்கப்பட்டுள்ளது.

ஏறக்குறைய எல்லா ஊடகங்களும் முதலாளித்துவ வாதிகளும், அனைத்து இடதுசாரி எதிர்ப்பாளர்களும் ஜே.வி.பி யை மீண்டும் மீண்டும் இடதுசாரி அமைப்பு மாக்சிய அமைப்பு என்று கூறுவதன் காரணம் ஜே.வி.பி யை காட்டி இடதுசாரி விரோத, மாக்சிய விரோத பிரசாரத்தை மேற்கொள்ளும் நோக்கம் கொண்டதாகும். அப்படி கூறுவதனால் ஜே.வி.பி ஒரு மாக்சிய அமைப்பாகி விடாது. இது பற்றி இந்நூலில் பேராசிரியர் கமலத் நிறையவே எழுதியுள்ளார். ஆனால் ஜே.வி.பி யின் நிலைப்பாட்டிற்கு காரணம் டிரொஸ்கியவாதத்தை கடைப்பிடிக்காமையே என்றவாறு எழுதி இருப்பதை எம்மால் ஏற்க முடியாதிருக்கிறது.

ஏனெனில் மாவோ சிந்தனைகளையோ ஸ்டாலினின் கொள்கைகளையோ கொண்டு ஜே.வி.பி செயற்படவில்லை. ஒரு நாட்டில் சோஷலிச புரட்சி என்பதையும் மாவோ, ஸ்டாலின் சிந்தனைகளையும் ஏற்றுக் கொண்டதனால் தான் அது தவறிழைக்கிறது என்று கூறமுடியாது.

ஒரேயடியாக உலகப்புரட்சியை ஏற்படுத்துவதே எல்லாவற்றுக்கும் தீர்வை தரும் என்றும் தனி தனி நாட்டில் புரட்சி என்பது சாத்தியமில்லை என்பதும் டிரொஸ்கிய வாதிகளின் நிலைப்பாடு. அவர்களின் ஒரு நாட்டில் புரட்சி என்பது உலகப்புரட்சியின் பகுதியென்ற விவாதங்களும் டிரொஸ்சிய வாதிகளும், மாக்சிஸ்ட் லெனினிஸ்டுகளும் ஐக்கியப்பட்டு செயற்படுவதற்கு தடையாக இருக்கும் கோட்பாட்டு அடிப்படையாகும்.

இந்நூலில் ஜே.வி.பி பற்றிய விமர்சனங்கள் டிரொஸ்கிய பார்வையிலேயே முன்வைக்கப்பட்டுள்ளது. ஜே.வி.பி தவறுகளுக்கு அவை டிரொஸ்கிய வாதத்தை ஏற்காததும் மாவோ ஸ்டாலின் ஆகியோரின் சிந்தனைகளை ஏற்றுக்கொண்டதே காரணம் என்றவாறு கூறப்பட்டுள்ளது. இனவாதமும், பாராளுமன்றவாதமும் மாவோ சிந்தனையோ, ஸ்டாலின் சிந்தனைகளோ அவற்றின் விரிவாக்கங்களோ இலலை என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டியதாகும்.

மாவோவும், ஸ்டாலினும், விவசாயிகளின் பிரச்சினைகள், சிறு முதலாளிகளின் பிரச்சினைகளை கையாள்வது பற்றி விஷேட கவனஞ் செலுத்தியுள்ளனர். அரை நிலப்பிரபுத்துவ அரைக் கொலனிய நாடுகளில் முதலாளித்துவம் நிறுப்பட்டு தொழிலாளர் வர்க்கம் முதிர்ச்சியடையும் வரை புரட்சிகாக காத்திருக்க முடியாது. அதற்காக சோஷலிசப்புரட்சிக்கு முன்னதான தொழிலாளர்வர்க்கத்தின் தலைமையிலான விவசாயிகளது சிறுமுதலாளிகளினதும் பிரச்சினைகளை கையாள புதிய ஜனநாயகப் புரட்சிக் காலகட்டத்தை மாவோ நடைமுறைப்படுத்திக் காட்டினார். தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை மட்டுமன்றி விவசாயிகளதும் சிறுமுதலாளிகளினதும் பிரச்சினைகளுக்கான தீர்வை யும் மாக்சிச லெனினிசம் கொண்டுள்ளது. அதனை படிப்பினையாகக் கொண்டு மாக்சிய இயக்கம் கட்டப்படாமையாலேயே ஜே.வி.பி அந்த இடைவெளியை பயன்படுத்திக் கொண்டது.

எனவே இந்நூலில் கூறப்பட்டுள்ள எல்லா விடயங்களிலும் உடன்பாடு இருப்பதாக கொள்ளாவிடினும் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் ஜே.வி.பி யின் பேரினவாத நிலைப்பாடு நன்கு விபரிக்கப்பட்டுள்ளதில் உடன்பாட்டை தெரிவிக்க முடியும்.

வடக்கில் அரசியல் என்பது புலிகள் இயக்கத்தின் மீதான எதிர்ப்பு என்றோ ஆதரவென்றோ தான் வளர்க்கப்படுகிறது. இது தவறான பார்வை ஆகும். தென்னிலங்கையின் அரசியல் ஜே.வி.பி எதிர்ப்பு அல்லது ஆதரவென்றே காட்டப்படுகிறது. இதும் தவறான பார்வையாகும். இதற்கு மாறான இடதுசாரி அரசியலே கட்டிவளர்க்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்கும் தென்னிலங்கையிலுள்ள இடதுசாரிகளிடம் பொது உடன்பாடு ஏற்பட வேண்டும். 1980 1990 களில் இருந்தவாறான பலமான யுத்த எதிர்ப்பு இயக்கம் கட்டப்பட வேண்டும். யுத்தத்தை நிறுத்தி நியாயமான அரசியல் தீர்வைக் காண்பதற்கான சமாதான வழிமுறைகளை முன்னெடுக்கப்படுவதற்கு அழுத்தங்களைக் கொடுப்பதற்கு பலமான வெகுஜன இயக்கம் கட்டப்பட வேண்டும். மக்களை இனவாத பிரசாரங்களிலிருந்து மீட்க வேண்டும். இவையே இடதுசாரிகளிடையே பொதுவான ஒழுங்கு ஏற்படுவதற்கான குறைந்தபட்ச அடிப்படைகளாகும்.

இந் நூல் வெளியீட்டு விழாவில் கலைஞர் ஜயதிலக்க பண்டார புரட்சிகர பாடல்களை இசைத்தார். நிகழ்ச்சிக்கு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தலைமை தாங்கினார்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 10

## மலையகத் தமிழரின் இந்திய அடையாளம்

தோட்டத் துறையில் மட்டுமன்றிப் புகையிரதப் பாதை நிர்மாணம், வீதி அபிவிருத்தி கொழும்புத் துறைமுகம் உட்பட்ட பலவேறு துறைகளிற் கடுமையான சரீர உழைப்புத் தேவைப்பட்டது. அதை உள்ளூரிற் பெறுவதில் உள்ள சிரமங் காரணமாகத் தென்னிந்தியாவிலிருந்து அன்றைய சென்னை மாநிலத்தின் தென்பகுதியாயிருந்த வறுமைப்பட்ட பகுதிகளிலிருந்து பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டனர். இந்த ஆட்கொணர்வும் தொடக்கத்தில் எளிதாக இருக்கவில்லை. ஏனெனில் பல எதிர்பார்ப்புகளுடன் இங்கு கொண்டுவரப்பட்ட கூலி விவசாயிகளும் நிலமற்ற விவசாயிகளும் தமது எதிர்பார்ப்புகட்கமைய நிலைமைகள் அமையாத போது திரும்பவும் தமது ஊர்கட்குத் தப்பி ஓட முற்பட்டனர். அவர்களைப் பிடித்துத் திரும்பவும் இலங்கைக்குக் கொண்டுவருவது கொலனிய நிர்வாகத்துக்கு லாபகரமானதாக இருக்கவில்லை. எனவே கங்காணி முறை ஒன்றின் மூலம் வறுமைப்பட்டவர்களை இங்கு கூலியாட்களாகக் கொண்டு வருவதையும் அவர்கள் தொடர்ந்தும் இங்கேயே தங்கியிருப்பதையும் உறுதி செய்வதையும் தென்னிந்தியாவில் அவர்களது கிராமங்களில் ஓரளவு செல்வாக்கும் தொடர்புகளும் கொண்ட கங்காணிமாரிடம் விடப்பட்டது. இதன் மூலம் கொலனிய நிருவாகத்திற்கோ தோட்ட முதலாளிமாருக்கோ தொழிலாளரது நடமாட்டத்தைக் கண்காணிக்கிற கவலை இல்லாமலாக்கப்பட்டது.

சுருங்கச் சொன்னால் ஆபிரிக்க அடிமைகளை விலங்கிட்டு அடிமைச் சந்தையில் விற்க முடிந்தது. இங்கே அதற்கான தேவை இல்லாத விதமாகக் கங்காணி முறை கவனித்துக் கொண்டது. பெருந் தோட்டங்களில் வாழ்ந்து வந்த மக்கள் தத்தமது தோட்டங்களை விட்டு வெளியேற இயலாத விதமாகப் பலவேறு கட்டுப்பாடுகள் இருந்தன. ஒரு தோட்டத்திலிருந்து இன்னொரு தோட்டத்திற்கு மாறிச் செல்வதற்கு மட்டுமன்றித் தமது அத்தியாவசியத் தேவைகட்குக் கூடத் தோட்டங்களை விட்டு வெளியேற இயலாத விதமாகத் தோட்ட நிர்வாகம் அவர்களது பல வேறு தேவைகளையும் தோட்டங்கட்குள்ளேயே நிறைவேற்றக் கூடிய விதமாக ஏற்பாடு செய்திருந்தது. தொழிலாளரது உழைப்பாற்றலைப் பேண அவசியமான அளவில் மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டன. பிற் காலங்களில் பல்வேறு நிர்ப்பந்தங்களின் கீழ் தோட்டப் பாடசாலைகள் நிறுவப்பட்டாலும் எல்லாரும் கல்வி கற்க வேண்டிய கட்டாயம் இருக்கவில்லை. அதை விடக் கல்வியின் தரம் மிகக் குறைவானதாகவே இருந்தது. இந்தக் தோட்டப் பாடசாலைகள் பகல் வேளைகளில் குழந்தைகளைப் பார்த்துக் கொள்கிற சுமையைப் பெண்களிடமிருந்து விலகிக் கொண்டதால் பெண்களின் கூலி உழைப்பும் தோட்டங்கட்குக் கூடிய அளவிற் கிடைக்கக் கூடியதாக இருந்தது. பாடசாலைகளில் உயர் வகுப்புக்கள் இருந்ததில்லை. என்பது போக ஓரளவு வளர்ந்த குழந்தைகள் பாடசாலை ஆசியர்களதும் நிர்வாகத்தினரதும் வீட்டுப் பணிகளைக் கவனிக்கவும் பயன்பட்டனர். இத் தொடர்புகள் மூலம் இளம் பிள்ளைகளை வீட்டு வேலைக்காகக் கொழும்பு, யாழ்ப்பாணம் உட்பட்ட நகரங்கட்கு அனுப்புகிற வழமையும் மெல்ல மெல்ல விருத்தி பெற்றது.

பெரும்பாலான தேயிலைத் தோட்டத்தொழிலாளர் மலைக்காடுகளிற் புதிதாக விருத்தி செய்யப்பட்ட தோட்டப் பகுதிகளில் வேலைக்கமர்த்தப்பட்டனர். பிற பகுதிகளில் சிங்களக் கிராமங்களை அண்டிய தோட்டங்களில் வாழ்ந்த தொழிலாளர் கிராம மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த இயலாத விதமாகக் கடுமையான கட்டுப்பாடுகள் இருந்தன. இதன் விளைவாகச் சிங்கள மக்களுடன் தமிழ்த் தோட்டத் தொழிலாளர் உறவு பூணுவதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டது. அத்துடன் நிலமற்ற சிங்கள் விவசாயிகள் மத்தியில் தமது நிலம் இந்தியத் தொழிலாளரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்ற எண்ணத்தை விதைத்து இனப் பகையைத் தூண்டி விடவும் இது வசதியாயிற்று.

காலத்தால் பிற்பட்ட ரப்பர்த் தோட்டங்களில் சிங்களத் தொழிலாளரும் மலையகத் தமிழ்த் தொழிலாளரும் கலந்து வேலை செய்கிற வாய்ப்புக்கள் இருந்தன. இரண்டு சமூகங்களும் வெவ்வேறாகவே வாழ்ந்த போதும் இனப்பகை இல்லாமலும் ஒற்றுமையாகவுமே அவர்கள் வாழ்ந்தனர் எனலாம். பேரினவாத அரசியல் வளர்ந்து முழுநாட்டையும் பாதித்த சூழ்நிலைகளிலே அதுவும் 1970க்கும் பின்னரே குறிப்பிடத்தக்களவில் இன அடிப்படையிலான வன்முறை மலையகத் தமிழருக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டது எனலாம்.

எனினும் இந்திய வம்சவழியினரை இலக்கு வைத்த இனவாத அரசியல் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியிலேயே தொடங்கி விட்டது.

மலையகத் தமிழர் இந்த நாட்டிற்கு வரத் தொடங்கி ஒரு நூற் றாண்டுக்காலம் ஆகியும் அவர்களது வாழ்வு நிலை அடிமைகளினது போன்றதாக இருந்தும் அவர்களது அடிப்படை உரிமைகளும் மனித உரிமைகளும் மறுக்கப்பட்டிருந்த நிலை பற்றி நன்கறிந்தவர்களான சிங்கள, தமிழ் அரசியற் பிரமுகர்கள் பலரும் அவர்களைப் பற்றிப் பேசிய தில்லை. அவர்கள் இலங்கைக்கு மலிவான கூலி உழைப்பாளர்களாக வந்தது பற்றி இன்று இனவாத அரசியல் பேசுகிற சிங்களப் பேரினவாதிகளின் முன்னோர் அவர்கள் இங்கு கொண்டு வரப்பட்டதை எந்த நிலையிலும் எதிர்க்கவில்லை. அவர்களது இருப்பு தமது வர்க்க நலன்கட்கு ஒரு மிரட்டலாக அமையக் கூடும் என்ற நிலையிலேயே அவர்கள் இலக்கு வைக்கப்பட்டனர்.

மலையகத் தமிழரது உரிமைகள் பற்றிப் பேசி அவற்றுக்காகக் குரல் கொடுத்த பொன்னம்பலம் அருணாசலம் பிற வழிகளிலும் இலங்கையின் அரசியல் தலைவர்கள் நடுவே தனக்கென ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்றிருந்தவராவார். அவரது தமிழ் வேளாள மேட்டுக் குடிப் பின்னணியையும் மீறியதாக அவரது சமூக நீதிக்கான கருத்துக்கள் அமைந்திருந்தன. அவரது சமூகப் பின்னணி காரணமாக மலைகத் தமிழரது உரிமைகட்கான ஒரு அரசியல் இயக்கத்தை முன்னெடுக்கக் கூடிய நிலையில் அவர் இருக்கவில்லை. எனினும் அவர் மலையகத் தமிழருக்காகக் குரல் எழுப்பியமை பிற்காலத்தில் மலையகத் தமிழருக்கான அமைப்புக்களை உருவாக்குவோருக்கு ஊக்கமளித்தது என்பது உண்மை.

> **இந்தியாவிலிருந்து ஏறத்தாழ அடிமைகள் போலவே இங்கு கொண்டுவரப்பட்ட தொழிலாளரது நிலை ஆபிரிக்காவிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட கறுப்பு இன மக்களின் நிலையை விட ஒரு சில வழிகளிலிலேயே மேலானதாக இருந்தது.**

பெரும்பாலான மலையகத் தமிழர் ஒரு புறம் இழப்பதற்கு ஒன்றுமில்லாத ஒரு வர்க்கமாகத் தமது உடல் உழைப்பையன்றி உயிர் வாழ வேறெந்த ஆதாரமும் இல்லாதவர்களாகவே இருந்த போதும் அவர்கள் வர்க்க உணர்வுடைய ஒரு சமூகமாக அமையவில்லை. அவர்களது உற்பத்தி உறவுகள் முதலாளியச் சுரண்டலின் அடிப்படையிலான வேலைக்கு அல்லது உழைப்புத் திறமைக்கான கூலி என்ற அடிப்படையில் அமைந்த போதும் அவர்களது சமூக இருப்பும் அவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த வாழ்க்கைச் சூழலும் நிலவுடைமைச் சமுதாயத்தின் பல பண்புகளைக் கொண்டிருந்தன. அவர்கட்குக் கல்வியறிவு மறுக்கப்பட்டமையும் நடமாட்டத்திற்கும் பிற சமூகத்தினருடனான உறவுகட்கும் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளும் அவர்களது பழைய நிலவுடைமைச் சமுதாயத்தின் ஒடுக்கப்பட்ட மக்களுக்குரிய அடிமைத் தனமான சிந்தனையுடன் இணைந்து அவர்களை ஒரு கீழ்ப்படிவான சமூகமாக வைத்திருந்தன.

கிளர்ச்சிக் குரல்கள் இடையிடையே எழுந்தாலும் அவர்களது வாழ்க்கைச் சூழலும் பின்தங்கிய சிந்தனையின் ஆதிக்கமும் அத்தகைய குரல்கள் வலுப்பெற்று ஒரு சமூக இயக்கமாக விரிவடையாமற் கவனித்துக் கொண்டன. இத்தகைய ஒரு பின்னணியிலேயே. கோ. நடேசையரது வருகையும் பங்களிப்பும் முக்கியமடைகின்றன.

மலையகத்தின் தொழிலாளருடைய உரிமைக்காகக் குரல் கொடுக்க இந்திய வம்சாவழியினர் என்று தம்மைக் கூறிக் கொண்ட வசதிபடைத்த வர்க்கத்தினர் யாருமே முன்வராத ஒரு சூழ்நிலையில் இந்திய விடுதலை இயக்கத்துடனான ஈடுபாட்டால் உந்தப்பட்டவரான நடேசையரது பங்களிப்பு தன்னளவிலேயே முக்கியமானது. அதேவேளை வர்க்க நலன்கள் எவ்வாறு ஒரு தேசிய இனத்தின் அடையாளத்தின் விருத்திக்கும் அதன் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கும் முயற்சிகட்கும் தடையாக இருந்தன என்பதை நாம் காண முடிகிறது.

நடேசையர் மலையகத் தொழிலாளிடையே அவர்களது உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் பொதுவாகவே தொழிற்சங்கப் பணிகளிலும் மிகுந்த அக்கறை காட்டியவர். ஏ.ஈ. குணசிங்ஹவின் போராட்டங்கட்கு இந்திய வம்சாவழித் தொழிலாளரது ஆதரவைத் திரட்டுவதிலும் பின்பு ஏ.ஈ. குணசிங்ஹவுடன் தொழிற்சங்க சம்மேளனத்தில் இணைந்து நின்றதிலும் அவரது நிலைப்பாடு தெளிவாகவே இருந்தது. எனினும் ஏ.ஈ. குணசிங்ஹ வின் பேரினவாதம் தலை தூக்கிய நிலையில் கொழும்பிற் பணியாற்றி இந்திய வம்சாவழித் தொழிலாளரை வெளி யேற்ற வேண்டும் என்கிற அளவு வரை விருத்தியடைவதற்கு முன்னரே நடேசையர் குணசிங்ஹவின் பேரினவாதத்தை அடையாளங் கண்டு அதை விமர்சித்து குணசிங்ஹ தலைமையிலான தொழிற்சங்க சம்மேளனத்தினின்று விலகினார்.

எவ்வாறாயினும் மலையக மக்களது பின்தங்கிய நிலையின் விளைவான பின்தங்கிய சமூக நோக்கினின்று அவர்களை விடுவிப்பதற்கான அரசியல் பாதை நடேசையரிடம் இருக்கவில்லை. அவ்வாறு இருக்குமென்று எதிர்பார்க்க நியாயமும் இல்லை. எனினும் ஒரு சீர்திருத்தவாதியாகவும் மனிதாபிமானியாகவும் அவரது பங்களிப்பு முன்னோடியானது. நடேசையரால் மலையகத் தமிழருக்கான தலைமையை வழங்க முடியாததற்குச் சமூகச் சூழல் சார்ந்த பல காரணங்கள் இருந்தன. எனினும் அவரைத் தொடர்ந்து மலையகத் தமிழரது தலைமையை ஏற்றவர்களிடையே சிறு பகுதியினர் ஓரளவு முற்போக்கான போராட்ட முனைப்புடையோராயும் வலிமையான பகுதியினர் வசதிபடைத்த பிரிவினரது நலன்களைப் பேணுவோராயும் வளர்ச்சி கண்டனர்.

மலையகத் தமிழரிடையே தாம் இந்த மண்ணுக்குரியோர் என்ற உணர்வும் தாம் இந்த நாட்டின் பிற சமூகத்தினருக்குச் சமமானோர் என்ற நம்பிக்கையும் விருத்தி பெற நீண்டகாலம் எடுத்தது. மலையகத் தலைவர்கள் எனப்பட்டோர் பலர் காந்தியையும் நேருவையுமே தமது தலைவர்களாகக் கொள்ளும் படி தமது ஆதரவாளர்களை ஊக்குவித்தனர். எப்போதோ தொடர்பு விட்டுப்போன இந்தியாவே தமது நாடு என்ற எண்ணமும் பரவலாக விதைக்கப்பட்டிருந்தது. இந்த “இந்திய” அடையாளம் அன்றைய மலையகத்தின் மேட்டுக்குடித் தலைமைகட்குப் பயனுள்ளதாயும் தேவையானதாயும் இருந்தது.

இதே இந்திய அடையாளம் பிற்காலத்தில் அவர்களை அந்நியராகக் காட்டி அவர்களது உரிமைகளை மறுக்கப் பயன்படுத்தப்படும் என்ற தீர்க்கமான பார்வையை மேட்டுக்குடி அரசியல் தலைமைகளிடம் எதிர்பார்த்திருக்க நியாயமில்லை.

## அமெரிக்க ஜனநாயகம்

அமெரிக்காவில் ஒரு சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2012 அளவில் அமெரிக்க துறை முகங்களுக்கு வரும் வெளி நாட்டுக் கப்பல்கள் முழுமையான ஸ்கான் முறையில் படப் பிடிப்புக்கு உள்ளாகும். அதே சமயம் அமெரிக்க துறை முகங்களிலிருந்து பிற நாடுகளுக்கு செல்லும் அமெரிக்க கப்பல்கள் இந்த ஸ்கான் படப் பிடிப்பு சோதனைக்குட்பட வேண்டியதில்லை.

அடுத்த வருடம் பெப்ரவரியில் பிறேசிலில் இடம் பெறும் உலக சுங்க அமைப்பு மகாநாட்டில் இந்த விடயம் தொடர்பாக இந்தியா உட்பட 30 நாடுகள் ஆட்சேபிக்க உள்ளன.

தற்போதுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் போதுமானதென ஆசிய- பசுபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த 30 நாடுகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே ஐரோப்பிய சமூகமும் இந்த சட்டத்திற்கு ஆட்சேபம் தெரிவித்திருந்தது. ஐரோப்பிய கம்பனிகளுக்கும் வரியிறுப்போருக்கும் அமெரிக்கத் திட்டம் பெரும் சுமையாக அமையுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“ஸ்கானிங் செய்வதற்கான இமேஜிங் கருவியைப் பொருத்துவதற்கு 12கோடி ரூபாவிலிருந்து 150 கோடி ரூபா தேவைப்படும்.

இந்தியாவில் 80 பெரிய துறைமுகங்களும் அதை விட சுமார் 320 சிறிய துறை முகங்களும் உண்டு. சகல துறை முகங்களிலும் ஸ்கானர்களைப் பொருத்துவது சாத்தியமற்றதும் விரும்பத்தக்கதும் அல்ல என இந்தியாவின் மத்திய சுங்க வாரியத்தின் தலைவர் தெரிவிக்கிறார்.

இலங்கையிலிருந்து பெருமளவிலான ஆடைகள் அமெரிக்காவிற்கு அனுப்பப்படுகிறது. இலங்கையிலும் அவ்வாறான கருவிகள் பொருத்தப்பட்டு அவற்றை இயக்கும் தொழில் நுட்பவியலாளரையும் வேலைக்கமர்த்த வேண்டும். ஆனால் இது தொடர்பாக இலங்கையிலிருந்து எதுவித எதிர்ப்பும் பகிரங்கமாக தெரிவிக்கப்படவில்லை. அமெரிக்காவின் செயல் நியாயமானதென எமது நாட்டு “ஜனநாயக வாதிகள்” கூறினாலும் ஆச்சரியப்பட மாட்டார்கள். ஏனெனில் அமெரிக்கா இன்று உலக அரசாங்கம் போன்றும் ஜனாதிபதி புஷ் உலக ஜனாதிபதி போன்றும் தான் நடந்து கொள்கிறார்கள். ஒவ்வொரு நாடும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என ஆலோசனை வழிகாட்டல் மட்டுமன்றி ஆணையிடலும் செய்து வருகிறது. இதனையே ஐக்கிய அமெரிக்காவின் உலக மேலாதிக்க விரிவாக்கம் எனக் கூறப்படுகிறது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# உலகமயமாதலும் வறுமையின் வளர்ச்சியும்

இலங்கையில் ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரல் கொண்டு வரப்பட்டு மூன்று தசாப்தங்களாகின்றன. நவதாராள பொருளாதாரத்தின் தனியார் மயம், தாராளமயம் பல்தேசியக் கம்பனிகளின் வருகை என்பன இங்கு நடைமுறையாக்கப்பட்டன. சுபீட்சம் வந்ததா? அல்லது வறுமை வளர்ந்ததா? அரசாங்கத்தின் மத்திய வங்கியினதும் புள்ளி விபரத் திணைக்களத்தினதும் அறிக்கைகளின் படி உழைக்கும் மக்களின் வாழ்க்கை நிலைமைகளின் வீழ்ச்சியை கண்டு கொள்ளலாம். நிச்சயம் இப் புள்ளி விபரங்களை விட வறுமையின் வளர்ச்சி வீதம் கூடுதலானது என்பதில் சந்தேகம் இல்லை. இருப்பினும் இவற்றை குறைந்த பட்ச அளவு கோலாகக் கொண்டு பார்க்க முடியும்.

இலங்கை மத்திய வங்கியின் தகவலின் படி 2002ம் ஆண்டு ஒருவரின் தலா வருமானம் 858 டொலரிலிருந்து 2006ல் 1504 டொலராக அதிகரித்துள்ளது. இலங்கையர் ஒருவரின் வருட வருமானம் 165,000/= ரூபாவாகும். இது உண்மை நிலையை வெளிப்படுத்தவில்லை. தனிநபர் வருமானம் என்பது நாட்டு மக்கள் அனைவரும் ஒரேமாதிரியான வருமானத்தை பெறுகின்றனர் என்பதல்ல.

முதற்தர வருமானத்தைப் பெறும் சுமார் 20 இலட்சம் பேர் நாட்டின் வருமானத்தில் 40 வீதத்தை பெறுகின்றனர். அவர்களது சராசரி வருடாந்த வருமானம் 462, 500/= ரூபாவாகும்.

அதே சமயம் மிகவும் வறியவர்கள் சுமார் 20 இலட்சம் மக்கள் வருடாந்தம் 12815/= ரூபாவை பெறுகிறார்கள். அவர்களின் மாத வருமானம் ஆயிரம் ரூபாயளவிலேயுள்ளது.


செல்வந்த 20 இலட்சம் பேரின் தலாவருமானம் மிகவும் வறுமைப்பட்ட 20 இலட்சம் மக்களின் வருமானத்தைவிட 36 மடங்கு அதிக வருமானம் சமனற்ற முறையில் இருப்பதால் சுமார் 1 கோடி 40 இலட்சம் மக்கள் பெறும் வருமானமாவது இருபது இலட்சம் செல்வந்தர்கள் பெறும் மொத்த வருமானத்தை விக் குறைவானது.

இலங்கையில் வறுமை என்பது கிராமியத் தன்மை கொண்டது. 2006ல் நகரப்புற வறுமை 6.7 வீதமாகவும் கிராமப் புற வறுமை 15.7 வீதமாக இருக்கையில் பெருந்தோட்டத்துறை வறுமை 32 வீதமாகவும் இருந்தது.

இலங்கைப் புள்ளி விபரத் திணைக்களம் வெளியிட்ட தகவலின்படி மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் வறுமை 5.4 வீதமாகவும் கம்பகா மாவட்டத்தின் வறுமை 8.7 வீதமாகவும் இருந்தது. இத்தனைக்கும் இலங்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50.1 வீதத்தை மேல் மாகாணம் கொண்டுள்ளது. விவசாயத்தை தொழிலாக கொண்ட மக்கள் மத்தியிலேயே வறுமை தாண்டவம் ஆடுகிறது என்பது கவனிக்கத்தக்கது. உலக வங்கியின் ஆலோசனையின் படி சுமார் 20 வருடங்களாக விவசாயத்துறை திட்டமிட்டே கைவிடப்பட்டு வந்தது.

2008 மார்ச்சில் "வறுமைக் கணிப்பு" என்பது தொடர்பாக இலங்கைப் புள்ளி விபரத் திணைக்களம் புதிய தகவல்களைத் தந்துள்ளது. 2006/07ம் ஆண்டு காலப்பகுதியில் குடியிருப்பாளரின் வருமானம் செலவீனம் தொடர்பான கணிப்பின் அடிப்படையிலேயே புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. உத்தியோக ரீதியாக வறுமை மட்டம் 15.2% வீதத்திற்கு குறைவடைந்ததாக கூறுகையில் 28 இலட்சம் மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர் எனப் புள்ளி விபரம் கூறுகிறது.

இங்கு கவனிக்க வேண்டியது இந்தக் கணிப்பில் வடக்கு- கிழக்கு உள்ளடக்கப்படவில்லை. இதன் காரணமாக வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களின் எண்ணிக்கை குறைத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.



சுமார் 15 இலட்சம் பேர் வெளிநாடுகளில் வேலை செய்கின்றனர். 2007ல் இவர்கள் 27, 681 கோடி ரூபாவை இலங்கைக்கு அனுப்பியுள்ளனர்.

2006/இல் சுத்தமான நீர் சுகாதாரம் என்பன 85% மானவருக்கு கிடைத்துள்ளது. அதாவது 15% மக்கள் சுத்தமான நீர் சுகாதார வசதியன்றி இருக்கின்றனர். மின்சார வசதி 80% மான மக்களுக்கேயுள்ளது. 20% மானோர் மின்சாரமின்றி மானியம் அற்ற மண்ணெண்ணெய் எரிக்க வேண்டியுள்ளது.

மின்சார வசதியென்பதும் மாகாணத்துக்கு மாகாணம் வேறுபடுகிறது. மேலமாகாணத்தில் 92% மின்சாரவசதி ஊவா மாகாணத்தில் 57% வீதத்தினருக்கே மின்சாரம் உண்டு. வடக்கு- கிழக்கு மாகாணத்தில் 43 வீத குடியிருப்புக்களே சுத்தமான நீர் சுகாதார வசதிகளைக் கொண்டுள்ளன. ஊவா மாகாணத்தில் வறுமை 27 வீதமாகவும் சப்ரகமுவ மாகாணத்தில் 24 வீதமாகவும், மத்திய மாகாணத்தில் 22 வீதமாகவும் உள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்திலும் நுவரெலிய மாவட்டத்திலும் அதிகூடிய வறியவர்கள் உள்ளனர். இரண்டு மாவட்டங்களிலும் 2 1/2 இலட்சம் வீதம் 5 இலட்சம் பேர் வறியவர்களாயுள்ளனர். குருநாகல், கண்டி, பதுளை, கம்பகா, கேகாலை மொனராகலை ஆகிய ஒவ்வொரு இடங்களில் 1 1/2 இலட்சத்திற்கும் 2 இலட்சத்து 40 ஆயிரத்திற்கும் வறியவர்களாயுள்ளனர்.

சமூக நலத்திட்டமென்ற சமூர்த்தி கொடுப்பனவு பெறும் ஒரு நபர் ரூ 91/= மட்டுமே பெறுகிறார். இந்த தகவலை மத்திய வங்கி வெளியிட்ட புள்ளி விபரத்திலிருந்தே பெறப்பட்டது.

2002ம் ஆண்டில் வறுமைக்கோடெனப்படுவது ஒரு நபருக்கு மாதமொன்றிற்கு 1423/= ரூபாவாகவிருந்தது. ஒரு குடியிருப்பில் 4.2 பேர் உள்ளனர் என்ற அடிப்படையில் சமூர்த்தி நிவாரணமென்பது தேவையின் ஆறு (6) வீதம் மட்டுமே. 2002ல் 32 இலட்சம் மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளதாக தகவல் வெளியிட்டபோதும் சமூர்த்தி நிவாரணம் 19 இலட்சம் குடியிருப்புகளுக்கு மட்டுமே கிடைத்தது- அதாவது 80 இலட்சம்பேர் மேற்படி நிவாரணம் பெற்றனர்.

மிகவறியவர்களில் 30 வீத குடியிருப்புகளில் 50 வீதமானவர்களே சமூர்த்தி நிவாரணம் பெற்றனர்.

10 வீதச் செல்வந்தர்கள் உட்பட உயர் வருமானம் பெறும் 18 வீத குடியிருப்பாளர்களும் சமூர்த்தி நிவாரணம் பெற்றுள்ளனர் என்ற தகவலும் தெரியவந்துள்ளது.

2006/07ல் வறுமைக்கோடு 2233/= எனக் கணிக்கப்பட்டுள்ளது. வறுமைக் கோட்டெல்லை 57 வீதமாக உயர்ந்துள்ள போதும் சமூர்த்தி உதவி 14 வீத அதிகரிப்பையே காட்டியது.

28 லட்சம் பேர் வறியவர்கள் எனப் ஒரு புள்ளி விபரம் கூறிய அதேவேளை வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்கள் 76 லட்சம் பேர் சமூர்த்தி நிவாரணம் பெறுகின்றனர். சமூர்த்தி நிவாரணம் கடந்த 5 வருடத்தில் வறுமையை குறைக்கவோ ஒழிக்கவோ இல்லை என்பது புலனாகிறது.

இலங்கையில் வறுமையை ஒழிப்பதற்கு ஒவ்வொரு அரசாங்கமும் ஏதாவது ஒரு பெயரில் வறுமைப்பட்டோருக்கு நிவாரணம் வழங்கி வந்ததே தவிர அதனால் வறுமை குறையவில்லை. அது ஒரு அரசியல் கருவியாகவே பயன்பட்டு வந்துள்ளது. முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகம் என்ற ஏமாற்றின் கீழ் தேசிய பொருளாதாரம் சீரழிக்கப்பட்டு ஏகாதிபத்தியத்தின் வழிகாட்டலில் திறந்த பொருளாதாரமே நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் விளைவே வறுமையின் வளர்ச்சி வீதமாகும். அதாவது செல்வந்தர்கள் மேன்மேலும் செல்வந்தராகிக் கொள்ள உழைக்கும் மக்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டு மேன்மேலும் ஏழ்மைக்கு ஆளாகி வருகின்றனர். இதனையே மேற்படி அரசாங்கப் புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இவற்றுக்கும் மேலானதாகவே வறுமையின் உண்மை நிலை காணப்படுகிறது என்பதை மறுக்க முடியாது.

இத்தகைய வறுமையை ஒழிக்க எவ்வித குறுக்கு வழிகளும் கிடையாது. உலக வங்கியும் அதன் முகவர்களாக என்.ஜி.ஓ. நிகழ்ச்சி நிரல்களும் வெறும் கண்துடைப்புகளும் திசை திருப்பல்களுமேயாகும். சமூக மாற்றத்திற்கான வெகுஜன அரசியல் போராட்டமும் அதன் விளைவான மக்கள் ஆட்சிக்குரிய அடிப்படைகளும் நிறுவப்படுவதன் மூலமே வறுமையை ஒழிக்க முடியும் என் பது தெளிவு கொள்ளப்பட வேண்டியதாகும்.

**சிறி**

# இந்திய ஆளும் வர்க்கமும் உழைக்கும் மக்களும்

இந்திய மக்களின் கடுமையான உழைப்பால் பிரும்மாண்டமாய் செல்வம் குவிந்துள்ளது. டாலர் பில்லியனர்கள் டாலர் மில்லியனர்கள் பெருகி உள்ளனர். கண்ணைப் பறிக்கும் மினுமினுப்பான செல்வச் செழிப்பைக் காண முடிகிறது. ஆனால் கோடிக் கணக்கான மக்களை வறுமை வாட்டி வதைக்கிறது. ஆண்டு முழுவதும் வேலை இல்லை. வேலை இருந்தாலும் போதுமான கூலி இல்லை.

கிராமப்புற வறுமை போக்க வேலையின்மை நீக்க ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை உறுதி செய்யப்படும் என்று சொன்னவர்களால் சராசரியாய் ஆண்டுக்கு 10 நாட்கள் வேலை மட்டுமே வழங்க முடிந்தது. நாட்டு மக்களில் 100க்கு 77 பேர் ஒரு நாளைக்கு ரூ. 20க்குக் குறைவாகவே செலவழிக்க முடிகிறது. சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பெரும்பான்மை மக்களுக்கு எந்த வாங்கும் சக்தியும் இல்லை.

இந்தப் பின்னணியில் தான் விலை உயர்வு கழுத்தை நெரிக்கிறது. சாமான்ய மக்களின் நடுத்தர மக்களின் அன்றாட வாழ்க்கை ஆட்டம் கண்டுள்ளது. சின்னச் சின்ன ஆசைகள் எதிர்காலக் கனவுகள், சிதைந்து போயுள்ளன. சத்தான உணவு, குடியிருப்பு, துணிமணிகள், போக்குவரத்து, பால், மளிகைச் சாமன்கள், காய்கறிகள், எரிபொருள், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, மருத்துவம், பொழுதுபோக்கு எல்லாமே சமாளிக்க முடியாத நிலையை எட்டி உள்ளன. சந்தை, மிரட்டி விலக்கி, ஒதுக்கி வைக்கிறது. வாக்களித்து ஆள அனுப்பிய அரசுகள், ஏதும் செய்ய முடியாது எனக் கைவிரிக்கின்றன.

நாட்டின் பிரதமர் ஒரு பொருளாதார நிபுணர். நிதி அமைச்சர் சிதம்பரம் பொருளாதார வித்தகர். திட்ட ஆணையத்தின் மான்டெக சிங் அலுவாலியா பொருளாதார வல்லுநர் என்று முதலாளித்துவ செய்தி ஊடகங்கள் சிலாகிக்கின்றன. மன்மோகன் ஒரு மாமுனிவர் போல பாரம்பரிய ராஜ ரிஷி போல சொல்கிறார். 'பண்டைய இந்தியாவில் ஒரு மாமன்னர் மக்களின் அன்றாட வாழ்வில் அதிகம் தலையிடாமல் இருந்தால்தான் நல்லாட்சி வழங்கும் அரசராகக் கருதப்பட்டார். அதுவே இப்போதைய அரசின் வழிகாட்டும் கோட்பாடாக உள்ளது.'

பிரிட்டிஷ் காலனி ஆட்சியைப் புகழ்ந்த மன்மோகனை நமக்குத் தெரியும். இப்போது நிலப்பிரபுத்துவ மாண்புகளைப் போற்றிப் பாடுகிறார். அதனையும் ஓர் உள் நோக்கத்துடன் செய்கிறார்.

மக்களின் அன்றாட வாழ்க்கை குறைவான கூலியால் கூடுதலான விலைகளால் நடுக்கடலில் புயலில் சிக் கிய சிறிய படகு போல் தத்தளிக்கிறதே. பாதுகாக்க வேதனை தணிக்க துயர் நீக்க ஏதாவது செய்யுங்கள் என்ற கோரிக்கை எழும்போது மக்களின் அன்றாடப் பிரச்சனைகளில் தலையிடாமல் இருப்பதே நல்லாட்சி எனப் பதில் சொல்கிறார். தக்கவை பிழைக்கும் மற்றவை மடியும் போட்டியில் தாக்குப் பிடிப்பவர்கள் வெல்வார்கள் மற்றவர்கள் வீழ்வார்கள். சந்தையின் போக்குக்கு எதையும் விட்டு விடுவோம். அரசு தலையீடு வேண்டாம் என்கிறது முதலாளித்துவ லாபங்களைப் பாதுகாக்கும் ஏகாதிபத்திய உலகமயம். அங்கு காசு உள்ளவர்களுக்கு எல்லாம் கிடைக்கும்.

சந்தை, மக்கள் வாழ்வைச் சூறையாட உதவுவது. மக்கள் பட்டினிச் சாவுகளால் கடன் தற்கொலைகளால், குறைந்த கூலியால் கூடுதல் விலையால் வசதியின்மையால் துன்புறும்போது மக்கள் நலனில் அரசின் திட்டமிட்ட தலையீடு வேண்டும் என்பதே இன்றைய புரட்சிகர ஜனநாயக அரசியல். பன்னாட்டு இந்நாட்டு மூலதனத்திற்கு பங்குச் சந்தை சூதாடிகளுக்கு உழைத்தே அறியாத உன்மத்தர்களுக்கு ஓடோடிச் சென்று உதவும் மத்திய மாநில அரசுகள் வாக்களிக்கும் மக்களைப் புறக்கணிக்கின்றன. எதிர்த்து எழுந்தால் ஒடுக்குகின்றன. துப்பாக்கி முனையில் தோட்டா மழையில் மூலதனத் திரட்சிக்கு உதவுகின்றன. இந்தியாவின் இயற்கை வளங்களை, கனிம வளங்களை மனித வளங்களை அரசுகளானவை அவர்களது கொள்ளைக் காடாக்கி சேவகம் செய்கின்றன.

மிகவும் தாமதமாக மிகவும் குறைவாக மேற் கொள்ளப்பட்ட 4கோடி விவசாயிகளுக்கான ரூ. 60000 கோடி விவசாயக் கடன் தள்ளுபடிக்கு எதிராக வலதுசாரி முகாம் கூச்சலிடுகிறது. உலகமயத்தை உந்தித் தள்ளும் அமெரிக்கா, தன் தவறான நடவடிக்கைகளால் திவாலான முதலீட்டு வங்கியும் செக்யூரிட்டிஸ் வர்த்தக மற்றும் தரகு நிறுவனமான பேர் ஸ்டெர்ன்ஸ் நிறுவனத்தை காப்பாற்ற ரூ. 1,19,520 கோடி தந்து உதவுகிறது. இதனை சுதந்திர சந்தைக்கு வாதாடும் அமெரிக்கரான ரோஜர்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத் தலைவர் ஜிம் ரோஜர்ஸ் 'வசதி படைத்தவர்களுக்கான சோசலிசம்' எனக் கிண்டல் செய்கிறார். கார்ப்பரேட் உலகமயத் தலைவர்கள் மூன்று அடிப்படைக் கோட்பாடுகளை முன்வைக்கிறார்கள்.

1) எல்லா வெற்றிகளும் உலகளாவியவை. 2) எல்லாத் தோல்விகளும் தேசங்களுக்குள்ளே இருக்கும் காரணங்களாலானவை. 3) சந்தை குறைகூற முடியாதது.

நம் நாட்டு உலகமய விசுவாசிகள் இப்போதைய விலை உயர்வு உலகளாவிய காரணங்களால் வந்தது என்று புதிய ஞானோதயத்துடன் பேசி பொறுப்பில் இருந்து நழுவிக் கொள்கிறார்கள். உணவு அமைச்சர் சரத்பவார் தென் இந்தியர்கள் கூடுதலாய் சப்பாத்தி சாப்பிடுவதால் கோதுமை பற்றாக்குறை என்கிறார். விலை உயர்வால் டாட்டா, ஜிண்டால், மிட்டல் சிமெண்ட் முதலாளிகள் ரிலையன்ஸ் பார்தி போன்றவர்கள் கொள்ளை லாபம் அடைகிறார்கள். கிராமப்புற, நகர்ப்புற உழைக்கும் வறியவர்களும் நடுத்தர மக்களும் விழி பிதுங்கி நிற்கிறார்கள். இந்தப் பின்னணியில் விலையைக் குறைக்க வக்கில்லாத ஆட்சியாளர்கள் பதவிகளை விட்டு விரட்டப்படுவார்கள் என்ற முழக்கம் ஓங்கி ஒலிக்கட்டும்.

நன்றி: மாலை தீப்பொறி சென்னை

# வடபுலத்தில் எட்டாத உயரத்தில் இயல்பு வாழ்வு

கடந்த மாதத்தின் மூன்றாவது வாரத்தில் புனரமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் மூன்று நாட்கள் கலை கலாச்சார கண்காட்சி மற்றும் இசை நிகழ்வுகள் நடைபெற்றன. ராணுவ நிர்வாகத்தினரும் அரசாங்க செயலகமும் இந் நிகழ்வை நடாத்தினர். கணிசமான மக்கள் மாணவர்கள் கலந்து கொள்ளவும் செய்தனர். இத்தகைய ஒரு நிகழ்வை நடாத்துவதன் மூலம் மக்களிடையே புதிய நம்பிக்கையை வளர்க்கவும் இயல்பு வாழ்க்கை தோன்றி விட்டது என்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தவும் அரசாங்கத்திற்கு ஒரு தேவை இருக்கிறது. படிப்படியாக யாழ்ப்பாணம் பழைய நிலைக்குத் திரும்பிக்கொண் டிருக்கிறது. விரைவில் நிலைமை முழுமையான இயல்பு நிலை யை அடைந்து விடும் என்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

யாழ்குடாநாடு அத்தகைய இயல்பு நிலைக்கு வருவதை அங்கு வாழும் ஆறுலட்சம் வரையான மக்கள் வரவேற்கவே செய்வார்கள். ஆனால் அங்கு இயல்பு நிலை தோன்றும் சூழல் நிலவுகிறதா? சகல வழிகளாலும் நொந்து கெட்டழிந்து வாழ்வின் மீதான வெறுப்பின் விளிம்பிலே வாழ்ந்து வருபவர்கள் குடாநாட்டு மக்கள். 2002ம் ஆண்டு புரிந்துணர்வு யுத்த நிறுத்த ஒப்பந்தம் உருவாகிய போது இயல்பு வாழ்க்கை திரும்பியுள்ளது என்ற நம்பிக்கை நடைமுறைகளால் இடைக்கால மகிழ்ச்சியை வரவழைக்க முடிந்தது. சுமார் நான்கு ஆண்டுகள் இடர்கள் இழப்புக்கள் மத்தியிலும் சுமாரான ஒரு வாழ்க்கையை அவர்களால் வாழ முடிந்தது. ஆனால் குடா நாட்டிற்குள் மீளத் தாக்குதலகள் ஆரம்பித்ததும் அதில் தாக்குதலகள் யுத்த நடவடிக்கைகளாக வேகம் பெறத் தொடங்கியதும் இடைக்கால சுமாரான இயல்பு வாழ்க்கை மங்கி மறையத் தொடங்கின. 2006ம் ஆண்டின் பிற கூறிலே அந்த சுமார் இயல்பு வாழ்க்கை என்று கூறப்பட்டு வந்ததின் பிரதான நரம்பாக இருந்த ஏ9 பாதை மூடப்பட்டதன் மூலம் அது அறுக்கப்பட்டது. அந்த நாட்களில் குடா நாட்டு மக்கள் அனுபவித்த வாழ்க்கை நெருக்கடிகளும் துன்பதுயரங்களும் விபரிக்க முடி யாதவைகளாகும். இன்று வரை அதன் தாக்கங்கள் தொடர்கின்றன.



யாழ்ப்பாண நகரின் இன்றைய நிலை

இப்பொழுது குடா நாட்டிற்கான உணவுப் பொருட்களின் விநியோகம் கப்பல் மூலம் அசாதாரணமாகவே இடம் பெற்று வருகின்றன. ஆனால் அத்தியாவசியப் பொருட்களின் விலை கொழும்பு விலைகளை விடக் கூடுதலாகவே விற்கப்படுகின்றன. இலங்கையின் ஏனைய பகுதிகளில் விலைவாசிகளின் விலை அதிகரிப்பும் சேவை கட்டணங்களும் தாங்க முடியாதவைகளாக இருக்கும் போது பொருட்களின் விநியோகத்தில் மட்டுப்பாடும் கட்டுப்பாடும் கடைப்பிடிக்கப்படும் குடாநாட் டில் பல மடங்கான விலைகளின் ஏற்றங்களை மக்கள் எவ்வாறு தாங்கிக் கொள்வார்கள் என்பதே பிரச்சினையாகும்.

குடாநாட்டில் சிவில் நிர்வாகமும் மாவட்ட செயலகமும் பிரதேசச் செயலகங்களும் செயல்படுகின்றன. அவற்றின் உயர் அதிகாரிகள் தமது நிர்வாகத்தை நடாத்துகிறார்கள். இருப்பினும் ராணுவத்தின் தலைமைப்பீடம் வரையும் நிகழ்ச்சிகளே இச் சிவில் நிர்வாகம் மூலம் முன்னெடுக்கப்படுகிறது. அங்கு வரையப்படும் பெரிய சிறிய வட்டங்களுக்குள் மக்கள் அன்றாட வாழ்வை நகர்த்தி நிரப்பந்தங்களுக்குள் தான் மக்கள் வாழவேண்டியுள்ளது.

விவசாயம் செய்வதில் குறிப்பிட்ட பிரதேசங்களில் கட்டுப்பாடுகள் தொடர்கின்றன. மீன் பிடியில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டு சில மணிநேர அனுமதி கிடைக்கிறது. போக்குவரத்தில் அடிக்கடி வீதித் தடையும் போக்குவரத்து மறிப்பும் அமுல்படுத்தப்படுகிறது. அத்துடன் வெளி மாவட்டப் பயணம் மிகுந்த கட்டுப்பாட்டிற்குள் இருந்து வருகின்றது. பயணச் சீட்டுப் பெறுவதும் அதற்கான கட்டணங்களும் மக்களால் தாங்கிக் கொள்ள முடியாதவையாகும். அதேவேளை கொலைகள் ஆட்கடத்தல்கள் காணாமல் போவது தொடர்ந்து இடம் பெற்ற வண்ணம் உள்ளன. அதனால் 'இன்றிருப்பார் நாளை இருப்பர் என்று எண்ணவோ இடமில்லை' என்ற நிலை நீடிக்கிறது. இதனால் அச்சமும் பீதியும் தொடர்கிறது. அடிக்கடி தமது உயிருக்கு தஞ்சம் கோரி மனித உரிமைகள் காப்பகத்தில் அடைக்கலம் புகுந்து நீதிமன்றக் காவலில் இணைந்து வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன.

இவ்வாறு யாழ்குடாநாட்டு மக்களின் அன்றாட வாழ்வானது கயிறு திரிக்கப்பட்டவாறான ஒரு வாழ்வாகவே காணப்படுகிறது. இவற்றுக்கும் மத்தியில் மக்கள் தமது கருமங்களை வெவ்வேறு அளவுகளிலும் தேவைகளின் காரணமாகவும் செய்தே வருகிறார்கள். அவை மனித இயல்பிற்கும் இருப்பிற்கும் உரியவையாகும். சமூக வாழ்வில் வரும் நிகழ்வுகள் யாவும் பெரிய சிறிய அளவில் இடம் பெறுகின்றன. ஆனால் அவை இயல்பு வாழ்க்கைக்குரிய உதாரணங்கள் ஆகிவிட முடியாது. இத்தகைய பொது நிகழ்வுகள் திருவிழாக்கள் என்பன இடர்பாடுகள் துன்பங்கள் மத்தியில் வாழ்ந்து வரும் மக்களுக்கு சிறு ஆறுதல் தரும் நிகழ்வுகளாகவே அமைந்து கொள்கின்றன.

வடக்கின் இந்நிலை போன்று ஆனால் வேறுபட்ட சூழலில் கிழக்கின் மக்கள் துன்பதுயரங்களை அனுபவித்து வருகின்றனர். கடந்த மூன்று தசாப்தங்களிலான வடக்கு கிழக்கின் மக்களது வாழ்வும் இரும்பும் துப்பாக்கிகளின் நடுவில் அகப்பட்டதாகவே இருந்து வருகின்றது. இத்தகைய நிலைக்கு முடிவு வேண்டும். உண்மையான இயல்புவாழ்வுக்கான சமாதானம் மலர வேண்டும் அதற்குரிய அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே மக்களின் ஆழ்மன விருப்பாக இருக்கிறது. ஆனால் அந்த நிலை தோன்றுவதற்கான எந்த அறிகுறியும் தென்படுவதாக இல்லை என்பதே மக்களின் சலிப்பும் வெறுப்புமாக உள்ளது.

மகிந்த சிந்தனை அரசாங்கம் பேரினவாத ஒடுக்குமுறை என்ற ஒரு அந்தலையில் நின்று ராணுவ முனைப்புடன் செயலாற்றுகிறது. விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழீழத்தை அடைந்தே தீருவது என்று மறு அந்தலையில் நின்று போராடி நிற்கிறது. இத்தகைய இரு தரப்பினரினதும் இரு அந்தலை நிலைப்பாட்டினால் வடக்கு கிழக்கு மக்கள் மட்டுமன்றி முழு நாட்டு மக்களுமே பன்முக நாசங்களை அனுபவித்து வருகிறார்கள்.

வடக்கு கிழக்கில் மக்கள் அனுபவித்து வரும் பிரச்சினைகள் துன்ப துயரங்கள் அவற்றுக்கான அடிப்படைக் காரணங்கள் பற்றி தெற்கின் சிங்கள மக்கள் அறிந்து கொள்ளல் வேண்டும். அத்துடன் தேசிய இனப்பிரச்சினை என்பது மகிந்த சிந்தனை கூறுவது போன்று வெறும் பயங்கரவாதப் பிரச்சினை என்ற மாயத் தோற்றம் சிங்கள மக்கள் மத்தியில் கலைக்கப்பட வேண்டும். இனப் பிரச்சினையின் பின்னால் மறைந்திருக்கும் வர்க்க சுரண்டலும் அதற்கான ஏகாதிபத்திய அரவணைப்பும் ஆளும் அதிகாரப் பிடிப்பும் மக்களால் விளங்கிக் கொள்ளப்படல் வேண்டும். இதற்கான பணி இலங்கைச் சூழலில் எளிதான ஒரு விடயமல்ல. பாராளுமன்ற அரசியலில் பேரினவாதமும் இனவெறியும் ஒரு வலிய ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இதனை வெற்றி கொள்ள மக்கள் மத்தியில் கடுமையான அரசியல் முயற்சிகள் செய்யப்பட வேண்டும். அதன் மூலமே தெற்கின் மக்கள் வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுக்கு நியாயமான குரலை எழுப்ப முடியும். யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வு காணப்படுவதற்கான வலிமையுடன் தெற்கில் எழும் குரலே வடக்கில் உண்மையான இயல்பு வாழ்வுக்குரிய உறுதியான உத்தரவாதமாக அமைய முடியும். அதற்கான சூழலை தென்னிலங்கை மக்களிடையே உருவாக்க வேண்டும்.

**வடபுலத்தான்**

# கண்டதும் கேட்டதும்

### செய்திக் கோப்பு

## செங்குருவி

### தனக்குத் தலைவலி வந்தால்

"நாட்டின் நீதிபதிகளது சம்பளங்களை நியாயமான அடிப்படையில் விரைந்து அதிகரிப்பதற்கு அரசு உடன் நடவடிக்கை எடுக்காது விட்டால் நான் பதவியை இராஜினாமாச் செய்து விடுவேன்" என பிரதம நீதியரசர் உயர் நீதிமன்ற அமர்வில் எச்சரிக்கை செய்துள்ளார். ஆனால் இதே பிரதம நீதியரசர் தான் சில மாதங்களுக்கு முன்பு வேலை நிறுத்தம் செய்யும் ஆசிரியர்கள் எனக்கு முன்னால் வரும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் நல்ல பாடம் படிப்பித்து விடுவேன் என்றும் கூறியவர். அது மட்டுமன்றி சம்பள உயர்வு உட்பட பல கோரிக்கைகள் முன்வைத்து வேலை நிறுத்தம் செய்த சில தொழிற்சங்க வாதிகளின் நடவடிக்கைக்கு தடை விதித்துத் தீர்ப்பளித்தும் நீதிமன்றங்கள் தான். இதைத் தான் "தனக்குத் தனக்குத் தலைவலி வந்தால் தான் வலியின் வேதனை புரியும்" என்று கூறுவதா? அல்லது தனக்கொரு நீதி மற்றவர்களுக்கு வேறொரு நீதி என்பதா?

### தன்வினை தன்னைச் சூழும்

தமிழ் நாட்டின் சினிமா இயக்குனர்கள் அண்மையில் தமது அமைப்புக்குரிய தேர்தல் தயாரிப்பின் போது அடி தடியில் இறங்கி மோதிக் கொண்டனர். மக்களிடமிருந்து பணத்தை வாரிச் சுருட்டிக்கொள்ள சினிமாவில் வெட்டுக்கத்தி வீச்சரிவாள் உருட்டுக்கட்டை அடிதடி வெட்டுக்கொத்துக் காட்சிகளைக் கண்குளிரக் காட்டும் இந்த இயக்குனர்கள் அதே வடிவத்தில் நிசமாகவே மோதிக் கொண்டனர். தன்வினை தன்னையே சூழும் என்று கூறலாமா?

### தமிழரின் தனிக் குணம்

கொழும்பில் ஒரு கலை இலக்கிய நிகழ்வில் ஒருவர் உரையாற்றிக் கொண்டிருந்தார். அவர் வைத்தியத்துறை சார்ந்தவர். அவர் தனது உரையில் யாழ்ப்பாணத்தில் தான் பிறந்து வளர்ந்த ஊரைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். சபையின் நடுவே இருந்த இரண்டு தமிழ்க் கல்விமான்கள் தங்களுக்குள் ஆராயத் தொடங்கி விட்டார்கள். யார் இவர்? எந்தப் பகுதியாக இருக்கும்? ஆளைப் பார்த்தால் ஒரு மாதிரியாக இருக்கு எனத் தலையைப் பிய்த்துக் கொண்டனர். இந்தக் கனவான்களின் ஆய்வில் எதுவும் பிடிபடவில்லை. உரையாற்றியவரது கருத்துக்கள் உரையாற்றியவர் பற்றி எதுவும் இவர்களின் காதுகளில் ஏறியதாகவுமில்லை. அவர் யார்? அவரது அடையாளம் என்ன? என்பதை அறிவதிலேயே அவர்களின் முழுக் கவனமும் இருந்தது. பழைமைவாதத் தமிழர் என்றால் அவர்களுக்கு இந்த ஆய்வுக் குணம் தனித் தன்மையுடன் இருக்கவே செய்யும். இப்பவும் அது தொடர்கிறது.

### சாயிபாபாவின் மாயவித்தை

கொழும்பில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் ஒரு இறுவட்டு விற்பனையாகி வருகிறது. அதனை இளந்தலைமுறையினர் அதிகம் வாங்கிப் பார்த்து ரசித்து வருவதுடன் அதிர்ச்சி கலந்த கிண்டலையும் தெரிவித்து வருகின்றனர். அந்த இறுவட்டு வேறு எதுவுமல்ல. சத்திய சாயிபாபாவின் சித்து விளையாட்டுக்களையும் லீலைகளையும் அம்பலப்படுத்தும் ஒரு இறுவட்டுத்தான். அந்த "மகான்" காவியுடையில் இருந்து எவ்வாறு திருநீறு கைக்கடிகாரம் தங்கச் சங்கிலி போன்றவற்றை வரவழைத்துக் கொடுப்பதையும் இளைஞர்கள் மாணவர்களை ஓரினச் சேர்க்கை மூலம் பாலியல் துஷ்பிரயோகம் செய்த விபரங்களையும் ஆதாரபூர்வமாக இவ் இறுவட்டு வெளிப்படுத்துகிறது. சாயிபாபா பற்றி உண்மை அறிய விரும்புவோர் மேற்படி இறுவட்டை பார்ப்பது பயன் உள்ளதாகும். இந்த இறுவட்டை தமிழகப் பெரியார் மையம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### மருத்துவத்தில் கொள்ளை

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள பெரிய தனியார் மருத்துவமனையில் அவசரமாக ஒருவர் சேர்க்கப்பட்டார். அவருக்கு லேசான மயக்கம் ஏற்பட்டதாலேயே அங்கு கொண்டு செல்ல நேர்ந்தது. அனுமதிக்கான பணமாகப் பத்தாயிரம் ரூபா செலுத்தும்படி கேட்கப்பட்டது. தடுமாறிய பிள்ளைகள் தந்தைக்கு ஏதோ பாரிய நோய் எனப் பயந்து கைமாற்றுகள் பெற்று பணத்தைச் செலுத்தினர். பரிசோதனைகள் இடம் பெறுவதாகக் கூறினார். காலையில் அனுமதிக்கப்பட்ட அவர் பிற்பகலில் எவ்வித நோயும் இல்லை வீடு செல்லலாம் மருந்துகள் எதுவும் தேவை எனக் கூறப்பட்டதுடன் ரூபா 18,000/= மொத்தச் செலவு எனக் கூறி கட்டிச் செல்லுமாறு கூறினர். தனியார் மருத்துவ மனையில் பட்டப் பகல் கொள்ளை பல்வா நடைபெறுகிறது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# சாதியம் வேரறுந்து விடவில்லை

## நிதானமான எதிர்ப்பு அவசியம்

கடந்தமாதம் கொழும்பில் நடைபெற்ற இலங்கை தேசிய நாடகவிழாவில் மேடையேற்றப்பட்ட யட்டியாந் தோட்டையைச் சேர்ந்த ஆசிரியர் கருணாகரனின் 'நாங்கள் தலித்துக்கள்' என்ற நாடகம் பற்றி மலையகத்தை சேர்ந்த நண்பர்கள் பலரும் அவர்களின் அதிருப்தியைத் தெரிவித்தனர். சாதிய அடையாளம் சிறந்ததென்றும் அந்த அடையாளத்தை மாற்றத்தேவை இல்லை என்றும் போதிக்கும் குறுகிய அல்லது குறுகிய சாதிவாதத்தைக் கொண்டதாக அந்நாடகம் இருந்தது என்பதே காரசாரமான விமர்சனங்களின் சாராம்சமாகும்.

இவ்வேளையில் "இலங்கையில் சாதியமும் அதற்கு எதிரான போராட்டங்களும்" என்ற நூலின் இரண்டாவது பதிப்பு கைக்குக் கிடைத்தது. வெகுஜனன் (சி.கா. செந்திவேல்) இராவணா (ந. இரவீந்திரன்) ஆகியோரின் கட்டுரைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ள இந்நூல் சாதியம் பற்றியும் அதற்கு எதிரான போராட்டங்கள் சாதியப்பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பற்றியும் வேறொரு கோணத்தில் அலசுவதாக அமைந்துள்ளது.

சாதியத்தின் தாக்கம் என்பது ஒடுக்கப்பட்ட சாதியினரின் பிரச்சினைகள் தான். ஆனால் அதற்கு எதிரான போராட்டங்களும் தீர்வுகளும் அவர்களுக்குரிய பிரத்தியேகமான நிகழ்ச்சி நிரலல்ல. சாதியம் என்பது இந்திய இலங்கைக்குரிய விஷேட சமூகப் படையாக்கமாக நிறுவனப்படுத்தப்பட்டுள்ளது. அதிலும் இலங்கையின் சாதியக்கட்டமைப்பு இந்தியக் கட்டமைப்பிலும் வேறுபட்டதாகும். இலங்கையிலும் வடக்கு, சாதியமைப்பு கிழக்கிலிருந்து வேறுபட்டதாவதுடன் சிங்கள மலையகத்தமிழ் மக்களிடமும் முஸ்லீம்களிடமும் வித்தியாச வித்தியாசமான சாதியமுறை இருப்பதை அவதானிக்க முடியும். ஆனால் ஒடுக்கப்படும் சாதிகளும் ஒடுக்கும் சாதிகளின் ஆதிக்கம் அரசியலிலும், பொருளாதார சமூகப் பண்பாட்டு அம்சங்களிலும் நிறுவனப்படுத்தப்பட்டுள் ளமை பொதுவான அம்சமாகும்.

சாதியத்தின் மிகவும் கொடூரமான தீண்டாமை வடக்கிலேயே மிகவும் கோரமாக இருந்ததுடன் தற்போது வடக்கிலும் அக்கோரம் பலமிழந்துள்ளமைக்கு காரணம் 60 பதுகளில் நடந்த வெகுஜனப் போராட்டங்களின் தாக்கமாகும். இதனை வரலாற்றுச் சான்றுக்களுடன் இலங்கையில் சாதியமும் அதற்கு எதிரான போராட்டங்களும் என்ற இந் நூல் சமர்ப்பிக்கின்றது. தீண்டாமையின் குரூரத்தையும் விபரிக்கின்றது.

இந்நூலில் சாதியத்தின் தற்போதைய நிலை குறித்த அவதானிப்புகளும் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டச் சூழலில் சாதியத்தை அணுக வேண்டிய முறைகள் பற்றிய முன் மொழிவுகளையும் முன்வைக்கிறது. சாதியம் செய்யும் தொழிலை அடிப்படையாகக் கொண்டு ஒரு குழுவினருக்கான அடையாளத்தை மட்டுமன்றி அரசியல் பொருளாதார, சமூக, பண்பாட்டு விடயங்களை மறுதலிக்க முடியாதவாறு தீர்மானிக்கின்ற சமூகக் கட்டமைப்பாக தோற்றம் பெற்றது. இது கீழைக்தேய கூட்டு வாழ்க்கை அல்லது குழு வாழ்க்கை முறையின் பாதகங்களில் ஒன்றாகும். இச்சமூகக் கட்டமைப்பு தேசிய அரசுகளின் தோற்றத்துடன் எவ்வாறு அரச அதிகாரக் கட்டமைப்புடன் சமரசம் செய்து கொண்டுள்ளது என்பதைப் பார்த்தால் தேசிய அதிகாரப்படையாக்கம் சாதியக்கட்டமைப்புகளுக்கூடாக இயங்குவதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அத்துடன் காலனியாதிக்க ஏகாதிபத்திய உலகமயமாதல் சூழ்நிலைகளில் சாதியத்தின் அடிப்படைகள் தாக்கப்படாமல் வேறுவேறு வழிகளில் தகவமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடியும்.

இது அரசியல் சமூக ஜனநாயகத்தை நிலைநாட்டவும் சமத்துவதையும் சமூக நீதியையும் நிலைநாட்டுவதற்கும் முட்டுக்கட்டையாகவே இருந்து வருகிறது.

இதனால் சமகால ஏற்றத்தாழ்வான சூழ்நிலையில் ஜனநாயகத்திற்காகவும் சமூக நீதிக்காகவும் சமத்துவத்திற்குமான போராட்டங்களில் சாதியத்திற்கு எதிரான போராட்டமும் முக்கியமாகிறது. அதேபோன்று சாதியத்தின் பாதிப்புகளுக்கு தீர்வுகளை காண்பதற்கான தேவையை பொருட்படுத்தாமலும் தற்கால சமூக அசைவியக்கம் நடைபெறமுடியாது.

இந்த அடிப்படையில் போராட்டங்கள் நிலப்பிரபுத்துவ காலம் தொட்டே நடைபெற்று வருகின்றன. தேசிய அரசுகளின் கீழும் காலனியாதிக்க ஏகாதிபத்திய சூழ்நிலையிலும் உலகமயமாக்கல் சூழ்நிலையிலும் வேறுவேறுவிதமாக அப்போராட்டங்கள் தொடர்கின்றன.

சீர்திருத்தங்களை செய்து சாதியப்பாதிப்புகளுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஒருவகையான சட்டரீதியான ஏற்பாடுகள் கொள்ளப்பட்டது. இதனையே வடக்கில் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் அணுகுமுறையாகக் காண முடிந்தது. இது சாதியக்கட்டமைப்பை தகர்ப்பதற்குப் பதிலாக அதனை ஏற்றுக்கொண்டு பாதிக்கப்படும் சாதியினருக்கு கொடுக்கப்படும் ஒத்தடமாகும். இந்தியாவில் ஒடுக்கப்படும் சாதியினருக்கு வழங்கப்படும் இடஒதுக்கீடு போன்ற விஷேட சலுகைகளுக்குள் சாதியப்பாதிப்பை சரிக்கட்ட முற்படுவதாகும். இலங்கையில் இம் முறை நடைமுறையில் இல்லாவிட்டாலும் சாதியக் கட்டமைப்பை ஏற்றுக்கொண்டு அதனுடன் சமரசம் செய்வது தான் சீர்திருத்தப் போக்கு அணுகுமுறை. இது இலங்கையிலும் இருக்கிறது. இதனை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் ஒடுக்கப்படும் சாதியினரிடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சீர்திருத்தங்களுக்கான போராட்டங்களும் சீர்திருத்த நடவடிக்கைகளும் சாதியக்கட்டமைப்பின் பாதிப்புகளின் இறுக்கத்தில் சில தளர்வுகளை ஏற்படுத்தி இருப்பினும் சாதியக்கட்டமைப்பை தகர்த்து சமத்துவத்தை நிலைநாட்டும் குறிக்கோள்களை அவை கொண்டவையல்ல.

60 களில் வடக்கில் நடைபெற்ற சாதியத்திற்கு எதிரான பன்முகப் போராட்டங்களுக்கும் தலைமை தாங்கிய தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் சாதியக் கட்டமைப்பை தகர்க்கம் அடிப்படை கொண்டதாகவே செயற்பட்டது. அதன் நடவடிக்கைகளும் கொள்கைகளும் சாதிய சமரசத்துக்கும் சீர்திருத்தங்களுக்கும் அப்பால் விரிந்த எல்லையை கொண்டிருந்தன. சாதிய அடையாளம் கடந்த அனைத்து சாதியினரிடையே இருக்கும் உழைக்கும் சுரண்டப்படும் மக்களினதும் ஐக்கியத்தைக் கட்டுவதன் மூலமான சமூகமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த அணுகுமுறையானது சுரண்டப்படும் வர்க்கங்களின் மேலாதிக்கத்தினூடாக சமூகநீதியையும் சமத்துவத்தையும் நிலைநாட்டும் நோக்கம் கொண்டதாகும். இது ஒடுக்கும் சாதியினரின் மத்தியில் உள்ள உழைக்கும் வர்க்கத்தினரின் பங்களிப்பையும் கொண்டதாகும்.

சாதியத்திற்கு எதிரான இன்னொரு அணுகுமுறையானது தலித்துவ அணுகுமுறை ஆகும். இது இந்தியச் சூழ்நிலையில் இருக்கும் விஷேட அம்சமாகும். அதாவது ஒடுக்கப்படும் சாதியினரை மட்டும் கொண்ட தலித்திய ஆதிக்கத்தினூடாக சாதிகளிடம் சமத்துவத்தை ஏற்படுத்தலாம் என்ற அணுகுமுறை ஆகும். இது அம்பேத்காரின் சீர்திருத்த அணுகுமுறையைவிட தீவிரமானதாக இருப்பினும் சாதிகளிடையே வன்மங்களை உயிர்ப்பாக வைத்துக் கொண்டு பகை நிலைப்பட்ட தீர்வுகளை வேண்டி நிற்பதன் மூலம் சாதியக்கட்டமைப்பை பாதுகாப்பதாகவே இருக்கிறது. அதாவது ஒடுக்கப்பட்ட சாதியினர் என்ற அடையாளத்தை ஏற்றுக்கொண்டு அதன் ஒரு வகை ஆதிக்கத்திற்காக போராடுவதாக இருக்கிறது. இது சமூகமாற்றத்தை அடிப்படையாக கொள்ளாதபடியால் ஏற்றத்தாழ்வுடைய இச் சமூக அமைப்பை பாதுகாக்கும் பாராளுமன்ற அரசியலுக்கே உதவும். ஒடுக்கப்பட்ட சாதியினரில் மேட்டுக்குடியினரை உருவாக்கும் நடவடிக்கையாகவே முடிகிறது. இதனால் ஒடுக்கப்பட்ட சாதியினரிலும் வர்க்க வேறுபாடுகள் தோற்றுவிக்கப்படுகின்றன. அவர்களின் மேட்டுக்குடியினரின் ஆதிக்கத்திற்காகவும் சமூக மேநிலை ஆக்கத்திற்காகவும் அந்த சாதியடையாளம் தொடர்ந்து பேணப்படுவதாக இருக்கிறது. தலித்துவ அணுகுமுறை எதிர்ப்பைக் காட்டும் மீறலை எடுத்துக்காட்டும் தீவிர அணுகுமுறை என்பதில் சந்தேகமில்லை. அதனால் ஒடுக்கும் சாதியினரின் ஆதிக்கம் கேள்விக்குட்படுத்தப்படுகிறது.

இந்த தீவிர நடவடிக்கைகளின் விளைவு சட்டநிவாரணங்களையும் சலுகைகளையும் பெற்றுக்கொள்வதுடன் முடிவிற்கு வந்து விடுகிறது. பெரியார் தலைமையிலான சாதியத்திற்கெதிரான போராட்டங்கள் தீவிரமும் வன்மமாகவும் இருந்தாலும் அவை சமூக மாற்றத்தை அடிப்படையாக கொண்டிருக்கவில்லை. இது தலித்திய அணுகுமுறையிலிருந்து வித்தியாசமானாலும் பரந்தளவில் முன்னெடுக்கப்படமுடியவில்லை.

மேற்படி அணுகுமுறைகளான சிநேக அணுகுமுறைகளாக கொண்டு சாதியத்தை தகர்ப்பதற்கான நிகழ்ச்சி நிரலுடனான வர்க்கப் போராட்ட வழிமுறைகளும் இந்தியாவிலும் இருக்கிறன்றன.

வெகுஜனன் இராவணா ஆகியோரின் இந்நூல் சாதிமுறைமையை தகர்க்கப்பதற்கான அவசியத்தை தர்க்கப்பூர்வமாக சான்றுபடுத்துகின்றது.

தமிழ்தேசிய விடுதலைப் போராட்டம் என்ற பொதுவான பதாகைக்குள் சாதியம் முற்றாக தகர்க்கப்படாது மறைக்கப்படுகிறது அல்லது மறைந்து கொண்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகிறது. பொதுவாக தேசிய அரசிற்கான அல்லது சுயாட்சிக்கான போராட்டம் என்பதனால் மட்டும் அதற்கு சாதியத்தை தகர்க்கும் வலிமை வந்து விடுவதில்லை. ஏனெனில் தேசிய அரச அதிகாரம், காலனித்துவ, ஏகாதிபத்திய அதிகாரம் ஏகாதிபத்திய உலகமயமாதலின் ஆதிக்கம் வேறுவேறு விதங்களில் சாதிய சமூகக்கட்டமைப்பை உள்வாங்கிக் கொள்கின்றன. சமூகமாற்றத்திற்கான தேசிய விடுதலைப் போராட்டங்களே உண்மையான சாதியத் தகர்ப்பைக் கொண்டிருக்க முடியும். அதற்கான கொள்கை நடைமுறைகளே வெறும் சுலோகங்களையும் வார்த்தைகளையும் விட அர்த்தம் நிறைந்ததாகும். போராட்டங்களின் பொது வானபோக்கும் எதிர்பார்ப்பும் ஆயுத நடவடிக்கைகளும் சாதியமைப்பை வலுக்குறைந் துள்ளதாகக் தோன்றினாலும் அது உண்மையல்ல என்பதற்கு இந் நூலில் பல உதாரணங்கள் காட்டப்பட்டுள்ளன.

அதேவேளை தமிழ்த்தேசியப் போராட்டத்தில் தலித்திய அணுகுமுறையை வேண்டிநிற்கும் சிலர் தேசியத்தையும் சாதியத்தையும் சமமான எண்ணக்கருக்களாகவும் நிறுவனங்களாகவும் கொண்டு செயற்படுகின்றனர் அல்லது விளங்காமல் அவற்றை சமப்படுத்துகின்றனர். சாதியக்கட்டமைப்பை விட தேசியக்கட்டமைப்பு விரிந்ததும் வளர்ச்சியடைந்ததுமாகும். தேசிய அபிலாஷைகள் என்பதை தனியரசு கூட்டரசு, சுயாட்சி போன்ற ஏற்பாடுகள் மூலம் நிலை நிறுத்தப்படலாம்இ ஆனால் சாதியம் தனித்து அரச அதிகாரக் கட்டமைப்பை கொண்டிருக்கவில்லை. அதனால் தலித் தேசியம் என்றொன்று ஏற்பட முடியும் என்பது தேசியத்தை சாதியத்திற்கு தாழ்த்துவது அல்லது சாதியத்தை தேசியத்திற்கு உயர்த்துவது என்பது கோளாறு கொண்ட அணுகுமுறை ஆகும்.

ஜனநாயகம், மனிதஉரிமைகள், சமூகநீதி, சமத்துவம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட தேசிய அணுகுமுறையில் சாதியத்திற்கு இடமிருக்க முடியாது. அதனால் சாதிய அடையாளம் கடந்த தேசியம் அமைய வேண்டிய புதிய வழிமுறை பற்றிச் சிந்திக்க வேண்டுமேயன்றி சாதிய அடையாளங்களின் அடிப்படையில் தேசியம் அமைய முடியாது என்பதுடன் ஒடுக்கும் சாதிய மேலாண்மை கொண்ட தேசியத்திற்கு எதிரான போராட்டம் தலித்மேலாண்மையாகவோ தலித் தேசியமோ அதன் தீர்வாக அமைய முடியாது. சாதியத்திற்கு எதிரான போராட்டம் சுயநிர்ணய உரிமைப் போராட்டமல்ல என்பதால் சாதிய அடக்குமுறைக்கு சுய நிர்ணய உரிமை தீர்வுமாகாது.

எனவே தேசிய விடுதலைப் போராட்டங்களில் சாதிய அடக்குமுறைகள் இல்லை என்பது எவ்வளவு தூரத்திற்கு மோசடியானதும் ஆபத்தானதுமோ அந்தளவிற்கு தலித்திய மேலாண்மைக்கான கோரிக்கையும் மோசடியானதும் ஆபத்தானதுமாகும்.

ஒவ்வொரு போராட்டத்திலும் ஒவ்வொரு சமூக மேம்பாட்டு நடவடிக்கையிலும் சாதியம் தகர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை மறுக்க முடியாது. அதற்கான வழிமுறை சாதியத்தை தகர்க்கும் அடிப்படையாகக் கொண்டதாகவே அமைய வேண்டும்.

சாதியம் இன்றைய உலகமயமாதல் சூழ்நிலையில் போராட்டச் சூழலில் எவ்வாறு செயற்படுகிறது. தகவமைத்துக் கொள்கிறது என்பதை சரியாக புரிந்து அதற்கெதிரான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். சீர்திருத்தவாத பெரியாரின் பகுத்தறிவு வாதம், தலித்திய அணுகுமுறைகள், மற்றும் சாதியமுறையை தகர்ப்பபதற்கான அணுகுமுறைகள் போன்றவற்றை சரியாக மதிப்பிட்டு புதிய வளர்ச்சியடைந்தவாறான மக்களை பிளவுபடுத்துவதற்கு மாறாக ஐக்கியப்படுத்தும் அதனூடாக சமூக அமைப்பை மாற்றி சமத்துவம் சமூக நீதி அடிப்படையிலான ஜனநாயகத்தை மனிதஉரிமைகளை நிலைநாட்டும் வழிமுறைகள் காணப்படுவது அவசியம்.

பிறப்பால் குத்தப்படும் அடையாளத்தையும் அதனாலான கொடூரங்களையும், கேவலங்கைளையும் நிராகரிக்கும் புதிய அணுகுமுறைகள் பற்றி இந்நூல் பேசுகிறது. இக்கருத்துக்கள் மேலும் செழுமைப்படுத்தும் முயற்சிகள் தேவை. இதன் மீதான கருத்துப் பரிமாறல்கள் விமர்சனங்கள், விவாதங்கள் சாதியத்திற்கு எதிரான பொதுவான ஆரோக்கியமான அணுகுமுறை பல முனைகளிலும் தேவைப்படுகின்றன. அதன் மூலமே சமூகக்கட்டமைப்பில் ஆதிக்கம் செலுத்தும் அரச அதிகார படையாக்கத்தில் செல்வாக்கு செலுத்தும் சாதியத்தை மேலும் தகர்க்க முடியும்.

தயா

**"இன்றைய ஏற்றத்தாழ்வான சூழ்நிலையில் ஜனநாயகம் சமூகநீதி சமத்துவம் ஆகியவற்றுக்கான போராட்டத்தில் சாதியத்திற்கு எதிரான போராட்டமும் முக்கியமாகின்றது."**




**சென்னை சவுத் விஷன் இரண்டாவது பதிப்பாக வெளியட்டுள்ள இந்நூலின் இலங்கை விலை 375 ரூபாவாகும்.**

**தொடர்புகளுக்கு: புதிய பூமி வெளியீட்டகம், 47, 3வது மாடி கொ.ம.ச.க. தொகுதி, கொழும்பு- 11.**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## உலக அரங்கின் நாட்குறிப்பு




### மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு

நேபாள மாவோவாதிகள் தென்னாசியச சூழலில் பாரிய மாற்றத்தை உண்டு பண்ணியிருக்கிறார்கள். கடந்த மாதம் நடைபெற்ற நேபாள அரசியல் அமைப்புச் சபைக்கான தேர்தலில் இவர்கள் பெற்ற மாபெரும் வெற்றி உலகையே நேபாள மக்களை திரும்பிப் பார்க்க வைத்த செயலாகும். தேர்தலை நடைபெறவிடாமல் மாவோவாதிகள் குழப்புவார்கள், அவர்கள் தேர்தலில் தோற்பது உறுதி. அவர்கள் மிஞ்சி மிஞ்சிப் போனால் மூன்றாவது பெரும்பான்மைக் கட்சியாகவே வரமுடியும் என்றவாறே ஊடகங்களும் அரசியல் அவதானிகளும் கருத்துக் கூறி வந்தனர்.

அரசியல் அமைப்புச் சபைக்கான தேர்தல் ஏப்பிரல் 10 திகதி நடைபெற்று முடிந்தவுடன் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி காட்டர் உள்ளிட்ட தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தேர்தல்கள் அமைதியாகவும் நேர்மையாகவும் நடைபெற்றதாகவும் இதை ஒரு வெற்றிகரமான தேர்தல் எனக் கொள்ள வேண்டும் எனவும் அறிவித்தனர். தேர்தல் குறித்த அறிக்கை ஒன்றை வெளியிட்ட ஐ.நா. கண்காணிப்பாளர்களின் தலைமை அதிகாரி இயன் மாட்டின் நேபாளத் தேர்தல்கள் மிகவும் ஒழுங்காக நடைபெற்றதாகச் சொன்னார்.

இச் செய்திகள் எல்லாம் சகல மேற்கு நாடுகளின் ஊடகங்கள் மூலம் ஒலி/ ஒளி பரப்பப்பட்டன. இவையெல்லாம் நடந்தது தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்குவதற்கு முன்னராகும். ஆனால் தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கியவுடன் மேற்குலக இந் திய வட்டாரங்களால் அதிர்ச்சியைத் தாங்க இயலவில்லை. சில நாட்கள் கழித்து செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ள சி.என்.என் (C.N.N) தேர்தலில் ஒழுங்கீனங்கள் நடைபெற்றுள் ளன. இதை நியாயமான தேர்தல் என்று கொள்ள இயலாது எனத் தெரிவித்துள்ளது. மேலும் பல மேற்குலக நாடுகளும் இந்தியாவும் தேர்தல் குறித்த சந்தேகங்களை எழுப்பத் தொடங்கின. ஆனால் நேபாள மக்களின் அமோக ஆதரவுடன் பெரும்பான்மை இடங்களை மாவோவாதிகள் கைப்பற்றியிருப்பது தேர்தல் மோசடி குறித்த குற்றச்சாட்டுகளுக்கு சாட்டையாக விழுந்து ள்ளது.

தேர்தல் முடிவுகள் குறித்து ஆசிரியத் தலையங்கத்தில் "நேபாள டைம்ஸ்" பத்திரிகை இப்படி எழுதியுள்ளது. "பத்து வருடங்களு க்கு மேலாக ஒரு அரசை மாவோவாதிகள் தங்கள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடத்தி வந்திருக்கிறார்கள். மிகுந்த அர்ப்பணிப்பும் கடின உழைப்பும் மக்கள் நலன் மீதான அக்கறையும் கொண்ட மிகச் சிறந்த அமைப்பாக மாவோவாதிகள் இருக்கிறார்கள். இது அவர்களின் பணிகளுக்கு நேபாள மக்கள் கொடுத்த பரிசு"

"இந்தியா என்றும் எதிர்பாராத முடிவொன்று நேபாளத் தேர்தலில் கிடைத்துள்ளது. அதிர்ந்து போய் என்ன செய்வதென்று தெரியாமல் இருக்கிறது மாவோ வாதிகளுக்கு எதிராக நேபாள மக்களுக்கு மூளைச் சலவை செய்யும் பணி ஏன் கைகூடவில்லையென ஏங்கி நிற்கிறது. ஆபத்து என்ன வென்றால் நேபாளக் காங் கிரஸ் ஒருங்கிணைந்த மாக்கிஸ்ட் லெனினிஸ்ட் மாதேசி பிரதே சக் கட்சிகளை ஒன்றிணைத்து ஒரு கூட்டு அரசை அமைக்க புதுடெல்லி படாதபாடுபடுகிறது. ஏனெனில் மாவோவாதிகளின் ஆட்சிக் வரக்கூடாது என்பதே டெல்லியின் பிரதான நோக்கா கும்.


நேபாளக் காங்கிரஸ் கட்சி தேர்தலில் சந்தித்த படுதோல்வியைத் தொடர்ந்து "தேர்தல்கள் நியாயமான முறையில் நடைபெற வில்லை" என்ற பல்லவியை பாட ஆரம்பித்துள்ளது. ஒருகிணைந்த மாக்ஸ்சிட்லெனிஸ்டுக்கள் இடைக்கால அரசில் இருந்து விலகி இருக்கிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால் மிக நீண்டகாலமாக அதிகாரத்தை அனுபவித்து மக்களை ஏமாற் றியவர்களுக்கு மக்களின் தேர்தல் தீர்ப்பை ஏற்க முடியவில்லை.

அமெரிக்காவின் பயங்கரவாத அமைப்புகள் பட்டியலில் நேபாள மாவோவாதிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தார்கள். அமெரிக்கா மாவோவாதிகளை அப்பட்டியலிலிருந்து நீக்குவது குறித்து மறு பரீசிலனை செய்வதாகச் செல்லுகிறது. இது எவ்வாறு இருப்பினும் மக்கள் ஆணையுடன் ஆட்சிக்கு வரவுள்ள மாவோவாதி களின் சட்ட பூர்வத் தன்மையை யாரும் கேள்விக்குட்படுத்த முடியாது. இந்தியா மறுத்தாலும் அமெரிக்கா சீனந்தாலும் நேபாள மக்கள் ஒரு தெளிவான ஆணையை மாவோவாதிகளுக்கு கொடுத்திருக்கிறார்கள் என்ற மாபெரும் உண்மையை எவராலும் மறுக்க இயலாது.

# அமெரிக்கா களமிறக்கியுள்ள ஒலிம்பிக் போட்டியாளர்

எதிர்வரும் ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்கா களமிறக்கியுள்ள ஆட்டக்காரர் ஒரு தீபெத்தியர். அவருடைய பேர் தலாய்லாமா. புத்த பிக்குவுக்குப் புத்த பிக்குவாகவும் அரசியல்வாதிக்கு அரசியல்வாதியாகவும் தோற்றங் காட்டுகிற தலாய்லாமா அரை நூற்றாண்டு காலமாகவே அமெரிக்காவின் எடுபிடியாகவே இருந்து வந்துள்ளார்.

திபெத்திய நிலவுடைமையாளர்களது ஆதரவாளராகவும் திபெத்தில் அடிமை முறையை ஒழித்து நிலச்சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால் சினமடைந்த நிலப்பிரபுக்களின் கிளர்ச்சியின் போது அவர்கட்கு ஆதரவாக நின்று பெருந்தொகையான செல்வத்துடன் 1950ல் இந்தியாவுக்குப் தப்பிப் போய்ச் சேர்ந்தவர் இந்தத் தலாய்லாமா. அவருக்கு இந்தியாவிற் புகலிடங் கொடுக்குமாறு நேருவை அமெரிக்கா வற்புறுத்தியது. நிலப்பிரபுக்களின் கிளர்ச்சிக்குத் தூண்டுதலாயும் ஆதரவாயும் இயங்கிய அமெரிக்க உளவு நிறுவனமான சி. ஐ. ஏ அன்று முதல் இன்று வரை தனது முகவர்களைக் கொண்டு திபெத்தில் கலவரங்களைக் கிளறி விடவும் தலாய்லாமாவுக்கு ஆதரவான பிரசாரங்களை முன்னெடுக்கவும் சி.ஐ.ஏ யின் உதவி முக்கியமானதாக இருந்தது. எனினும் சீனாவின் அரசியல் நெருக்கடி மிக்க பண்பாட்டுப் புரட்சிக் காலத்திலும் மாஓவுக்குப் பிற்பட்ட காலத்து நெருக்கடிகளின் போதும் திபெத்தில் கிளர்ச்சிகளை நிகழ்த்த இயலாததற்குக் காரணம் திபெத்தியர்கள் மத்தியில் தலாய்லாமாவின் அரசியலுக்கு ஆதரவு இல்லாமையே. எனினும் தலாய்லாமாவை உலகப் பிரமுகராகக் கட்டியெழுப்புகிற பல முறச்சிகள் மேலை நாடுகளில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. ஏகாதிபத்திய அரசியல் நோக்கங்கட்காக வழங்கப்படுகிற பரிசுகளில் அதி முக்கியமானதான சமாதானத்துக்கான நொபல் பரிசும் அவருக்கு வழங்கப்பட்டது. சீனாவில் தீபெத்தியருக்கு எதிரான பாரபட்சம் சீன அரசாற் காட்டப்படுவதற்கான ஆதாரம் இல்லை. சீனாவில் திபெத்தியருக்கான முழுமையான சுயாட்சி ஒன்று உள்ளது. இது வேறெந்த ஆசிய நாட்டிலும் உள்ளதை விடப் பெரியதொரு அங்கீகாரம். ஆயினும் இதற்கும் மேலான அதிகாரங் களைக் கொண்ட ஒரு மதவாத ஆட் சியை தலாய்லாமா வின் மூலம் வற்புறு த்தி வருவது அமெரிக்கா தான். தலாய்லாமா எவ்வளவு தந்திரமான அரசியல் வாதியானாலும் அவர் சுதந்திரமான தலைவரல்ல.



பெய்ஜிங் ஒலிம்பிக் போட்டி எப்படி முடிந்தாலும் தலாய்லாமாவின் ஆட்டம் இனி மேலும் எடு படாது என்பது உறுதி, இன்று தலாய்லாமாவுக்கு ஆதரவாக நிற்கிற ஒவ்வொரு நாடும் அரசி யற் தலைமையும் படு பிற்போக்கானவர்கள் என்பது போல தலாய்லாமா ஆதரி த்து நிற்கிற விடயங்களும் பிற்போக்கானவையாகவே உள்ளன. ஏகாதிபத்திய ஒடுக்கு முறை ஒன்றுக்கேனும் எதிராகக் குரல் கொடுக்காத ஏகா திபத்திய ஆக்கிரமிப்பை எங்குமே எதிர்க்கத் துணியாத தலாய்லாமா ஒரு சராசரி அரசியல்வாதியினதும் குறைவான மனிதாபி மானியே. அவர் ஒரு ஆன்மிகவாதி என்று சொல்லலாம் என்றால் ஜாதிக ஹெல உறுமய பிக்குமார் எல்லாரும் அவரிலும் உயர்ந்த மனிதாபிமானிகளாகிவிடுவர்.

# இது விளையாட்டல்ல

பெய்ஜிங் ஒலிம்பிக் போட்டிகளைப் போல மிகவும் தீவிரமாகத் திட்டமிடப்பட்ட முறையிற் குழப்பும் முயற்சிகட்குட்பட்ட ஒரு ஒலிம்பிக் நிகழ்வும் இதுவரை இல்லை. இதற்கான உண்மையான காரணங்கள் தெரிந்தவர்கள் குழப்புகிற முயற்சிகளின் போது கூறப்படுகிற காரணங்களை நம்பமாட்டார்கள். எனினும் மிகவுங் கவனமாகத் திட்டமிட்ட விதமாக ஒலிம்பிக் தீப்பந்தம் உலகவலங் கொண்டு வரப்படவிருந்த நேரம் பார்த்துத் திபெத்தின் தலை நகரான லாஷாவில் சீனப் பெரும்பான்மை இனத்தவரான ஹான் இனத்தவருக்கு எதிரான வன்முறை கிளறிவிடப்பட்டது. தனியார் உடைமைகட்கு மட்டுமன்றிப் பொதுச் சொத்துகட்கும் பெருஞ் சேதம் இழைக்கப்பட்ட பின்னரே சீனப் பொலிஸ் குறுக்கிட்டது. திட்டமிட்ட வன்முறைக்கு எதிரான மோதலில் கலகக்காரர்கள் மட்டுமன்றிப் பொலிசாரும் பிறரும் படுகாயப்பட்டனர். ஒரு சில சாவுகளும் நிகழ்ந்தன. 1989 தியான் அன்மென் நிகழ்வுகளின் போது தியான் ஆன்மென் சதுக்கத்தில் சாவுகள் நிகழ்ந்ததாகவும் மோதல்களின் விளைவாக இறந்தோரின் தொகையை பல நூறு



களாகவும் ஆயிரக் கணக்கானதாகவும் ஊதிப் பெருப்பித்தது போலவே திபெத்தில் நிகழ்ந்த சம்பவங்களில் இறந்தோர் தொகை பல நூறுகளாகத தலாய்லாமாவின் ஆதரவாளர்களால் பிரசாரம் செய்யப்பட்டது.

திபெத்தில் சீன அடக்குமுறை ஆட்சி, மனித உரிமை மீறல்கள் என்பனவற்றை எதிர்ப்பது என்ற விஷமம் பெஜ்ஜிங் சுற்றுச் சூழல் மாசடைவது பற்றிய பொதுவான பிரசாரமும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இவை சீனாவின் மக்கள் மீதான அக்கறையாலானதல்ல. மாறாக இன்று மேலை நாடுகட்குச் சமமான ஒரு பொருளாதார வல்லரசாகச் சீனா வளர்ந்துள்ளதன் விளைவாகவும் உலக ஆதிக்கத்திற்கான மேலை ஏகாதிபத்தியங்களின் திட்டங்கட்குச் சீனா பெரிய சவாலாக உள்ளதாலுமே நடக்கிறது. இன்று எந்த அடிப்படையிலும் சீனாவை மிரட்டிப் பணியவைக்க இயலாது என்ற காரணத்தாலேயே சீனாவுக்கு எதிரான பிரசாரம் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

பெஜ்ஜிங் ஒலிம்பிக் போட்டிகள் காரணமாகச் சீனா மீது உலகின் கவனம் குவியத் தொடங்கியுள்ள நேரத்தில் ஒலிம்பிக் சுடரின் உலக வலத்தைக் குழப்புகிற காடைத்தனமான நடவடிக்கைகள் ஐரோப்பிய நாடுகளில் நடந்துள்ளன. குழப்புவதற்கான முயற்சிகள் மிகவுங் கவனமாகவே திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டன என்பதில் ஐயமில்லை. திட்டமிட்ட முறையில் ஒலிம்பிக் சுடரை ஐரோப்பாவினதும் அமெரிக்காவினதும் நகரங்களுடு கொண்டு செல்ல இயலாதபடி செய்ததில் குழப்பங்களைத் திட்டமிட்டவர்கள் வெற்றி கண்டுள்ளனர். அவர்கள் அவமதிக்க விரும்பியது சீனாவை என்றாலும் உண்மையில் அவமதிக்கப்பட்டது ஒலிம்பிக் சுடரும் அரசியலுக்கு அப்பாற்பட்ட விளையாட்டுப் போட்டிகள் என்ற ஒலிம்பிக் போட்டிகளின் படிமமுமே.

சீனாவின் அரசியல் திசை மாற்றம் பற்றியோ அதன் முதலாளித்துவப் போக்குப் பற்றியோ நமக்கு என்ன கருத்து இருந்தாலும் ஏகாதிபத்தியவாதிகள் சீனாவை விமர்சிப்பதற்கும் முற்போக்கான சிந்தனை உடையவர்கள் விமர்சிப்பதற்கும் வேறுபாடு உண்டு. எனவே தான் ஏகாதிபத்தியம் சீனாவை இலக்கு வைக்கிற போது ஏன் இலக்கு வைக்கிறது என்பதை நாம் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். சீனா பற்றிய நமது விமர்சனங்கட்கும் ஏகாதிபத்தியவாதிகளின் விமர்சனங்கட்கும் வேறுபாடு இல்லை என்றால் நாம் எங்கே நிற்கிறோம் என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். இது சீனா பற்றி மட்டுமன்றி ஏகாதிபத்தியம் இலக்கு வைக்கும் எந்த உலக நாடு பற்றியும் நாம் கவனிக்க வேண்டிய உண்மை.

1936ம் ஆண்டு ஜேர்மன் ஃபாஸிஸ அரசாங்கம் தனது யூதஇன விரோதக் கொள்கையைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தி வந்த போது அமெரிக்காவோ ஐரோப்பாவின் சனநாயக நாடுகளோ பேர்லின் ஒலிம்பிக் போட்டிகளில் எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்க முற்படவில்லை. பகிஷ்கரிப்பு என்ற பேச்சுக்கே அங்கு இடமிருக்கவில்லை.

அரசியற் காரணங்களால் 1980ல் மொஸ்கோவில் நடந்த ஒலிம்பிக் போட்டியை அமெரிக்கா பகிஷ்கரித்தது. கூறப்பட்ட அரசியல் காரணத்தை விட முக்கியமான இன்னொரு காரணமும் இருந்தது. சோவியத் யூனியனின் தங்கப் பதக்கங்களின் எண்ணிக்கை அதற்கு முந்திய ஒலிம்பிக் போட்டிகளின் போது படிப்படியாக அமெரிக்காவின் பதக்கங்களின் எண்ணிக்கைளை நெருங்கத் தொடங்கிவிட்டது. மொஸ்கோ போட்டியில் அமெரிக்காவை சோவியத் யூனியன் மீதும் வீாய்ப்பு இருந்ததனால் அமெரிக்காவுக்கு அப்போட்டியைத் தவிர்ப்பது பயனுள்ளதாயிருந்தது. அதன் 1984ல் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலிஸ் நகரில் நடந்த அடுத்த ஒலிம்பிக் போட்டியை சோவியத் யூனியன் பகிஷ்கரித்துப் பழி தீர்த்துக் கொண்டாலும் 1984 முதல் ஒலிம்பிக் போட்டிகள் வணிகமயமாகத் தொடங்கிவிட்டன. அதன் பின்பான ஒலிம்பிக் நிகழ்வுகளில் அரசாங்கங்கட்கும் மேலாகப் பல்வேறு பன்னாட்டு வணிக நிறுவனங்களதும் செல்வாக்கு வலுப்படத் தொடங்கிவிட்டது.

சீனா இந்த ஒலிம்பிக் போட்டியின் போது முந்திய எந்தப் போட்டியையும் விடச் சிறப்பான முறையில் கோலாகலமாகவும் முழுமையானதும் திறமானதுமான வசதிகளுடன் ஏற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. ஒரு குறையும் இல்லாமல் போட்டிகள்

தொடர்ச்சி..... 15ம் பக்கம்

# இதயராசனின் கவிதை நூல் பற்றி ஒரு நோக்கு




தேசிய கலை இலக்கியப் பேரவை தனது நூல் வெளியீட்டுப் பயணத்தில் அண்மைய வரவாக இதயராசனின் மீறல்கள் கவிதை நூலை வெளியிட்டுள்ளது. நூறு பக்கங்களிலான இந் நூல் ஐம்பது கவிதைகளைக் கொண்டுள்ளது. தனது தாய் தந்தையரை நினைவு கூர்ந்து அவர்களுக்கே நூலினை சமர்ப்பணம் செய்துள்ளார் நூலாசிரியர். அணிந்துரையை ந. இரவீந்திரனும் முன்னுரையை லெனின் மதிவாணமும் எழுதியிருக்கிறார்கள். சிறப்பான அட்டைப்படத்துடனும் நேர்த்தியான அச்சுப்பதிவுடனும் வெளிவந்துள்ள இக் கவிதை நூல் பரந்த வாசகர் தளத்தில் படிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஒருவருக்கு கவித்துவ ஆற்றல் கைவரப் பெற்றுவிட்டால் மட்டும் அத்தகையவரால் சிறப்பான கவிதைகளைப் படைக்க முடியும் என்ற முடிவிற்கு வந்து விட முடியாது. அவ்வாறே ஒரு கவிதையின் சிறப்பிற்கு கருத்துச் செறிவும் அவசியமாகிறது. இவ்வாறு கவித்துவமும் கருத்து நிலையும் இணைந்து பயன்தரும் கவிதைகளாக அமைவதற்கு கவிதை படைப்போரின் சமூக நோக்கு மக்கள் சார்புடையதாக இருத்தல் வேண்டும். சமூக முரண்பாடுகளை அடையாளம் காண்பதாயும் அவற்றின் இயங்குதளத்தை வெளிச்சமிட்டுக் காட்டுவதாயும் மக்களுக்கு அறிவூட்ட வல்லதாயும் அமையும் கவிதைகள் பயன் உள்ள சமூகப் பங்களிப்பாக அமைந்து விடுகின்றன. அத்தகைய கவிதைகளும் கவிஞர்களும் சமூக நினைப்பைப் பெற்றும் கொள்கின்றனர்.

இதயராசனின் மீறல்கள் கவிதை நூலினைப் படித்த போது அக் கவிதைகள் மக்கள் இலக்கியப் பரப்பிற்குள் மணம் வீசும் கவிதைகளாக இருப்பதை உணர முடிந்தது. அவ்வாறு அமைந்திருப்பதற்கான காரணம் இதயராசன் கொண்டுள்ள உலக நோக்கு மக்கள் சார்பானதாக இருப்பது தான். மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளையும் அனுபவிக்கும் இடர்களையும் தமது இலக்கிய ஆக்கங்கங்களில் வெளிப்படுத்துவது மட்டும் மக்கள் இலக்கியப் பண்பாகி விடாது. விளைவுகளுக்காக மட்டுமன்றி காரணங்களுக்காகவும் இலக்கிய எழுத்துக்கள் தம்பணி ஆற்ற வேண்டும். அந்தவகையில் சமூக முரண்பாடுகளையும் அவற்றின் அடிப்படைகளையும் அவற்றைத் தீர்ப்பதற்கான நோக்கையும் கொண்டிருக்கும் எந்தவொரு ஆக்க இலக்கியக்காரரும் தமக்குக் கைவப்பெற்ற ஆற்றல் மூலம் மக்கள் இலக்கியப் பரப்பிற்கு பங்களிப்புச் செய்பவராகின்றார்.

இதயராசனின் கவிதைகள் அத்தகைய மக்கள் இலக்கியப் பரப்பிற்குள் வந்து நிற்பதைக் காண முடிகின்றது. உண்மையும் உணர்ச்சியும்/ உயிர்ப்புறு எண்ணமும் வண்ணமும்/ பிணைந்து பிறப்பது கவிதை என எது கவிதை என்று கேட்டு தன் நிலை விடையளிக்கிறார் கவிஞர். வாழ்தல் எனும் கவிதையில் தனது வாழ்வின் அனுபவத்தை சில மிருகங்களுடன் வாழ்ந்து பெற்றுக் கொண்ட பட்டறிவாகச் சுட்டிக் காட்டும் கவிஞர் அதனால் நம்பிக்கை தளர்ந்து விடாது சுறுசுறுப்புடன் இயங்கும் எறும்புகளின் இடையிறாத கட்டுமான முயற்சிகளின் ஊடே முன்னேறும் திசை நோக்கிச் செல்வதாகக் கூறுகிறார்.

அவ்வாறு புத்தாண்டே நீ வா! என்னும் கவிதையில் மக்களைச் சுற்றியுள்ள தளைகளை அறுக்கவும் இழப்புகளை ஈடுசெய்யவும் புதிய வார்ப்புகள் எழுச்சி பெறவும் இளைய தலைமுறை விழிப்புறவும் புத்தாண்டே நீ வா! என்று அழைக்கும் கவிஞர் புரட்சிப் பாதையினைத் தேர்ந்து புதிய வரலாறு படைத்திட புத்தாண்டு வந்திட வேண்டும் என்கிறார்.

விபச்சார வைபவங்கள் என்னும் கவிதையில் நமது சமூகச் சூழலில் திருமணத்திற்காக சீதனம் என்ற கொடிய நடை பின்பற்றப்படுவதை கடுமையான வரிகளால் சுட்டி நிற்கும் கவிஞர் முடிவாகக் கூறுவது நோக்குதற்குரியதாகும்.

பிரியமாய் வாழ்ந்திடும் பிணைப்பே
திருமணமெனத் தீர்மானமாய்
நிறைவேற்றாத வரைக்கும்
முப்பது முக்கோடி தேவர்களும் வாழ்த்த
பெரியோர்கள் நிச்சயிக்கும்
"விபச்சார" வைபவங்கள்
விமரிசையாக நிறைவேற
ஊடகங்கள் படம்பிடித்து மகிழும்.

என்று கூறும் கவிஞர் இச் சீதன முறையை வெயில் கொழுத்தி வேகாதோ. கொடுவினை காகாதோ! எனக் கோபத்துடன் சபிக்கின்றதைக் காண முடிகிறது.

இவ்வாறு கறுப்பு யூலை (பக்17) விடுதலை எழுச்சி (பக்45) பச்சைவாயில் நாடு (பக் 74) போர்க்கால ஜனநாயகம் (பக் 78) போன்ற கவிதைகள் இக் கவிதை நூலின் சோற்றுப் பதமாகக் காணப்படுகின்றன.

மேலும் ஒரு கவிதை மறைந்த பேராசிரியர் கைலாசபதி பற்றிக் கூறுகிறது. முற்போக்கு இலக்கியத்தை மக்கள் இலக்கியமாக வளர்த்தெடுக்கும் திசை மார்க்கத்தில் தனது பங்களிப்பை வழங்கியவர் கைலாசபதி. அதனை இதயராசன் உள்வாங்கிய உந்துதலினால் "கைலாசபதி யென்று கை கோர்த்து நிற்போம்" என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள கவிதையில்

"உடைமையும் உரிமையும் இழந்த / உழைக்கும் மக்களிடம் / உண்மையைக் கண்டார் / மடமையினைக் கொழுத்தி / மதியினை உயர்த்தி / மகிழ்வுடன் வாழ்ந்து / மானுடம் துளிர்த்திட சீருடன் உழைத்த சிந்தனையாளன் / எங்கள் கைலாசபதியென்று / கைகோர்த்து நிற்போம்."

என்று கூறுகிறார்.

இவ்வாறு பாரதி, ஸ்டாலின், மாஓசேதுங் போன்றவர்கள் பற்றியும் இந் நூலில் கனதிமிக்க கவிதைகள் காணப்படுகிறன.

கவிஞர் வடபுலத்து ஒடுக்குமுறைக்கு எதிரான எழுச்சி பெற்று நின்ற கிராமத்தின் பொதுமைச் சிந்தனைகள் வேரூன்றி வளர்ந்த குடும்பத்திலிருந்து வந்தவர். இருப்பினும் இடைக் காலத்தில் மேற் கிளம்பிய தமிழ்த் தேசியவாதத்திற்குள் சிக்குண்ட சூழலின் பிரதிபலிப்புகளும் ஆங்காங்கே கவிதைகளில் வெளிப்படுவதை அவதானிக்க முடிகின்றது. அனுபவங்களும் பட்டறிவுகளும் வாழ்வின் வெளிச்சத்திற்கு வழிகாட்டுகின்றன என்பது எப்போதும் உண்மையாகும்.

அந்த வகையில் இதயராசனின் கவிதைகள் வாழ்வின் யதார்த்தங்களையும் ஏற்ற இறக்கங்களையும் மட்டுமன்றி தனி மனித வாழ்வனுபவங்களின் சக சய புள்ளிகளையும் அடையாளம் காட்டி நிற்கின்றன எனலாம். அவரது கவிதை படைக்கும் ஆற்றல் வளர் திசை நோக்கி நிற்கிறது என்பதற்கு இம் முதற் கவிதை நூல் கட்டியம் கூறி நிற்கிறது. கவிதை கூறும் கருத்துக்கள் வாசிப்போர் மனங்களில் படிவதற்கு ஓசை முறிவற்று அமைவது அவசியமாகிறது. கவிதைகளில் ஓசை முறிவு ஏற்படாமலும் கருத்துச் சிதைவு இடம் பெறாமலும் இருப்பதற்கு இதயராசன் கூடுதல் கவனம் எடுக்கும் போது மேலும் பயன் உள்ள கவிதைகளை படைத்துச் செல்ல முடியும். அம் முயற்சியில் இதயராசன் வெற்றி பெறவேண்டும்.

**மூர்த்தி**

# என் அருமை அம்மா!

உன்னில் இருந்து எனை எடுக்க
தொப்புள்கொடி அறுக்கையிலே
ஜன்னி தலைக்கேற
பாலூட்ட வழியின்றி
மனம் நொந்து பதறியதைப் பின்னறிந்து
உனை எண்ணி நான் நெகிழ்ந்தேன்.
பிஞ்சான காலத்தில்
பள்ளிக்கே முன்னதாய் பாடம் சொல்ல
வகுப்பினில் முதல்வனாய் தேறுகையில்
உன் கருமமெண்ணிப் பெருமைகொண்டேன்

காலம் சற்று நகர்கையிலே
அச்சா (அப்பா) பொருள் இழந்து
இடம் இழந்து மனம் நொந்து
நோய் ஏறிய முடிவாய்
ஏனையோரும் எமை மறுக்க
குடல் சுருங்கிய எமக்கு
உள்ள சில பருக்கைகள் ஊட்டுவித்தாய்
பருக்கைகள் இல்லாப் பல நாளில்
நீர்- கொண்டு உன்னன்பால்
எம் வயிறு நிரப்பினாய்
அன்று தந்த பயிற்சிதனில்
இன்றும் இயங்க முடியும்- உணவின்றி
உண்மையில் நீ பேராசான்
பருவ வயதில்
பழகப் பல நண்பர்கள் தேடும் வேளையில்
நல்லாரை உறவு கொள்ள
பாழான வாழ்க்கை தனை தவிர்க்க
நீ செய்த உபதேசம் பல
அதன் வெற்றியோ கூறுவதற்கில்லை.

காலம் கனிய
நண்பர்களாலேயே தோழர்கள் கண்டேன்.
அவர்களாலேயே மார்க்சியம் கொண்டேன்
இயங்கியல் விதி தலைக்கேற
உலக வாழ்க்கையின் செம்மை உணர்ந்தேன்
உணர்ந்ததனால் இயங்கவும் செய்தேன்
இவ் அணியின் இயக்கம் சரியெனத் தெரிந்தும்
உன் மைந்தன் அவ்வணியில் இருப்பதற்காய்
முதலில் பயந்தாய் பின் தளர்ந்தாய்- ஆனால்
தோழரும் அவர்தம் செயலும் கண்டு
பயம் நீங்கினாய் ஆதரவுந் தந்தாய்
எம் நிகழ்வுகளுக்காய் வேலைகளும் செய்தாய்
உன் செயல் கண்டு பூரித்தேன்
திடீரென ஓர்நாள்- எனை
முதலாளியத்தின் காவலர்கள்
உனனில் விசாரனை என்று
கொண்டு சென்றனர்.
பின் தடுப்பு காவலில்
இன்று விளக்க மறியலில்
மார்க்சியம் வடித்த எ.்கு பலமிழக்குமா!
இருந்தும்- வருடம் ஓட
மீண்டும் உழைப்பாளர் தினம்
மேதின வேலைகளில் பங்கேற்க
நானும், என் தோழர்கள் நால்வரும் அங்கில்லை
மனம் கனத்தது.
மேதினம் முடிய பங்கெடுத்த தோழர்களின்
சொற்கள்
என்காதினில் புகுந்துரைத்தன
"தோழரே உங்கள் அம்மாவும் பங்கெடுத்தா"
உணர்வுகள் வலுத்தன
எனில் கொண்ட துயர் மறந்தது
பலகாலம் துயரையே சுமந்த நீ
துயர் துடைக்க ஒருத்தியானாய்
தாயே உனை விழிக்க
வார்த்தை இல்லை எனக்கு
ஒன்று புரிந்தது- அம்மா
எனைப் பெற்ற தாய் மட்டுமல்ல
நீயும் என் தோழர்களில் ஒருத்தியே!

14ம் பக்கம் தொடர்ச்சி.....

நடந்தேறினால் அது சீனாவின் சர்வதேசச் செல்வாக்குக்கு ஒரு பெரும் உந்துதலாக அமையும்.

அதை விட முக்கியமாக, இருபத்தைந்து ஆண்டுகள் முன்பு எவ்வாறு சோவியத் யூனியன் அமெரிக்காவை விஞ்சக் கூடிய போட்டியாளர்களைக் களமிறக்கியதோ இன்று அதே நிலையிற் சீனா உள்ளது.

சீனா வென்று வரும் பதக்கங்களின் எண்ணிக்கை வரலாறு கண்டிராத வேகத்தில் உயர்ந்து வந்துள்ளது. இம் முறை சீனாவே அதிகம் தங்கப் பதக்கங்களை வெல்லும் வாய்ப்புள்ளது. எனவே மொஸ்கோ ஒலிம்பிக் போட்டியை மீண்டும் நினைவு கூருவது தகும். சீனா பல தங்கப்பதக்கங்களை வென்ற ஒவ்வொரு முறையும் சீன வீர வீராங்கனைகள் சட்ட விரோதமான மருந்துப் பொருட்களைப் பாவிப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்டதுடன் பெரியளவிற் பிரசாரமுஞ் செய்யப்பட்டது. உண்மையில் வெகு சிலரே அவ்வாறு நடந்து கொண்டனர் என்பது போகத் தவறான நடத்தைக்காகத் தாம் பெற்ற பதக்கங்களை இழந்தோரின் எண்ணிக்கை எந்த அடிப்படையில் வைத்து நோக்கினாலும் சீனாவின் வீர வீராங்கனையரிடையே குறைவு எனலாம். அமெரிக்காவிலேயே ஊக்க மருந்துத் துஷ்பிரயோகம் மிக அதிகமாக இருந்து வந்துளது.

நாங்கள் இந்தச் சீன விரோதத்தில் உள்ள ஒரு இனவாத நிற வாதப் பரிமாணத்தையும் தவறவிடலாகாது. வெள்ளை நிறவாதம் இன்னமும் அமெரிக்காவினதும் ஐரோப்பிய முதலாளிய நாடுகளினதும் சிந்தனையில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. அதுவே இஸ்லாமிய விரோதமாகவும் அண்மைக் காலங்களில் வடிவெடுத்துள்ளது. முன்பு சோஷலிஸ நாடுகட்கு எதிரான பகைமை ஏகாதிபத்திய நாடுகளின் கொள்கைகளில் முதலிடம் கொண்டிருந்தால் அவற்றில் நிறவாதமும் இனவாதமும் பற்றி அதிகம் பேசப் படவில்லை. எனினும் அது அன்று போல் இன்றும் உள்ளதுடன் தேவையான போது எந்த நாட்டிற்கும் இனத்திற்கும் எதிராகப் பயன்படத் தவறாது என்பதை நாம் மறக்கலாகாது.

பெய்ஜிங் ஒலிம்பிக் போட்டிகளின் போது கலகம் விளைவிக்கவும் பரிசளிப்பின் போது திட்டமிட்ட முறையில் அவமதிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பிற்போக்குச் சக்திகள் ஆயத்தமாக உள்ளன. எனினும் ஒலிம்பிக் போட்டிகளை எவ்வளவு தூரம் குழப்புவது என்பதில் அவர்கள் கவனமாகவே இருப்பர். இல்லாவிடின் இனி வரும் ஒலிம்பிக் போட்டிகளில் அரசியல் நுழைவது மட்டுமன்றித் திட்டமிட்டுக் குழப்பம் விளைவிக்கும் சக்திகட்கு ஊக்குவிப்பாகவும் இவ்வருட நிகழ்வுகள் அமையும்.

2012 ஒலிம்பிக் போட்டி லண்டனில் நடக்கப் போகிறது. பிரித் தானியாவின் சர்வதேச நடத்தையை உலக மக்கள் விமர்சித்து ஆர்ப்பாட்டங்களில் இறங்கினால் ஒலிம்பிக் தீபந்தம் எத்தனை எத்தனை நாடுகளைத் தவிர்க்க வேண்டி வரும் என்பதை மேலை நாட்டு ஆட்சியாளர்கள் சிந்திக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

உலகம் அவர்கள் விரும்புவதை விடக் கொஞ்சம் வேகமாகவே மாறத் தொடங்கியுள்ளது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

ஜூன் 2008

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org



இந்தியாவின் சாதிய தீண்டாமை இழிவுக்கும் கொடுமைக்கும் சாட்சியம் கூறும் இந்த தாழ்த்தப்பட்ட முதியவர் மைசூர் நகரத்திற்கு அருகாமையில் உள்ள கம்பலாபள்ளி கிராமத்தில் 2000ல் சாதிவெறியர்களின் கொலை வெறிக்கு தனது குடும்பத்தில் நால்வரை இழந்தவராவார்.




## தமிழனைத் தமிழன் ஆளும் தமிழ் நாட்டில் 2008

மதுரை மாவட்டம்- உத்திரபுரம் கிராமத்தில் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பையும் மேல் சாதியினர் பயன்படுத்தும் தெருவையும் பிரித்து எழுப்பப்பட்டுள்ள சுவரையும் அதன் மீது மின்சாரவேலி அமைக்கப்பட்டுள்ளதையும் காணலாம்.



## சுத்த தமிழ்த் தலைவன் கருணாநிதி ஆட்சியில் 2008

அதே உத்திரபுரத்தில் அமைந்துள்ள பேருந்து நிறுத்தையும் மேல்சாதியினர் பயன்படுத்தும் தெருவையும் பிரித்துக் கட்டபட்டுள்ள மற்றொரு சுவரையும் இங்கு காணலாம்.



## தீண்டாமைக்கு எதிராக பெரியார் ஈ.வே.ரா போராடிய மண்ணில் 2008

ஈரோடு மாவட்டம் புளியம்பட்டி உணவகத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் உட்செல்ல முடியாது. வெளியே ஒதுக்கப்பட்ட ஓட்டை போடப்பட்ட இடத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட முதியவர் தேனீருக்காகக் காத்திருக்கிறார். அங்கு தீண்டாமையை நடைமுறைப்படுத்தும் இரட்டைடம்பளர் முறை உண்டு.



## இந்திய அரசியல் சாசனத்தில் அம்பேத்கர் வலியுறுத்திய தீண்டாமை எதிர்ப்பு 2008

தீண்டாமையையும் தாழ்த்தப்பட்ட மக்கள் தாக்கப்படுவதையும் எதிர்த்து சாதிய தீண்டாமை எதிர்ப்பு அமைப்புகளும் இடது சாரிகளும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்.

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.